# உதயன்



23

www.onlineuthayan.com

38 பக்கங்கள் சுடர் 28 கதிர் 029 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 10 செவ்வாய்க்கிழமை (25/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


# வர்த்தக நிலையங்களை அடித்து நொருக்கி முஸ்லிம்களை விரட்டியது அராஜகக் குழு

## எம்பிலிப்பிட்டியவில் சம்பவம்

கொழும்பு,டிசெம்பர்25

எம்பிலிப்பிட்டியவில் நேற்றுமுன்தினம் குழு ஒன்றால் முஸ்லிம் வர்த்தகர்களின் வர்த்தக நிலையங்கள் அடித்து நொருக்கப்பட்டு, அவற்றின் உரிமையாளர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

இந்தவிடயத்தை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து இது தொடர்பில் ஆராய்ந்து பார்த்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் உறுதியளித்துள்ளார்.

வர்த்தக நிலையங்களையும் வர்த்தகர்களையும் தாக்கியகுழுவில் அநேகமானோர் சிங்களவர்களே என்று பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

20 வருடங்களுக்கும் மேலாக எம்பிலிப்பிட்டிய வாராந்த சந்தையில் வர்த்தகம்செய்துவரும் இரத்தினபுரி, கஹவத்தையைச் சேர்ந்த முஸ்லிம் வர்த்தகர்களே இவ்வாறு விரட்டியடிக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் குறிப்பிட்ட சந்தைக்கு வான் ஒன்றில் வந்த குழுவினர் அங்கிருந்த முஸ்லிம் வர்த்தக நிலையங்களை அடித்து நொருக்கியதோடு, "சிங்களவர்களின் தாயகத்தில் முஸ்லிம்கள் எவரும் வர்த்தகம் செய்யக்கூடாது" என்று எச்சரித்தனர் எனவும் கூறப்படுகின்றது.

இந்த எச்சரிக்கையை மீறி மீண்டும் எம்பிலிப்பிட்டியவுக்கு வந்து வர்த்தகம் செய்தால் பெரும் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் எனத் தம்மைத் தாக்கியவர்கள் கூறினர் என்று அந்த வர்த்தகர்கள் கூறினர்.

பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் எம்பிலிப்பிட்டிய பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். அத்தோடு, அமைச்சர் பௌஸியின் கவனத்துக்கும் இந்த விவகாரத்தைக் கொண்டு வந்தனர்.

அமைச்சர் பௌஸி நேற்றுக் காலை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கவனத்துக்கு இதைக் கொண்டு வந்தார்.

இவ்வாறான தாக்குதல்களை அனுமதிக்க முடியாது என்று கூறிய கோத்தபாய பொலிஸுக்கு அறிவித்து இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாக்குறுதியளித்துள்ளார் என அமைச்சர் பௌஸி தெரிவித்தார்.

இதேவேளை, எம்பிலிப்பிட்டியவில் நேற்று ஹலால் சான்றிதழை எதிர்த்துச் சிங்களவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தினர். (சி)




(நேற்று இரவு திருநெல்வேலிப் பகுதியில் 8 அடி உயரமான நத்தார் தாத்தா வலம் வந்தார்)

## தெரிவுக்குழுவின் பணி முடிந்தாலும் நீதிமன்று அறிவிப்பு விடுக்கமுடியும்

### குழுவில் அங்கம் வகித்த விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.25

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பணி முடிவடைந்துள்ளபோதிலும் அந்தக் குழுவை விசாரிப்பதற்காக நீதிமன்றம் அழைப்பாணை விடுக்க முடியும் என்று தெரிவுக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்றுத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை ஜனவரி மாதம் 3ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்துமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

தெரிவுக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் தனித்தனியாக அழைப்பாணைகள் கிடைத்துள்ளன. அந்தவகையில், நீதிமன்றில் முற்படுவதா இல்லையா என்று

பார்க்க பக்கம் 4

## சர்வதேச விசாரணைக்கு அடித்தளமிடும் ஷிராணி

### அமைச்சர் விமல் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.25

மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவாக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக சுயாதீன சர்வதேச விசாரணைக்கு அவசியமான பொறிமுறைகளை பிரதம நீதியரசர் நிர்மாணித்து வருகின்றார் என்றும், இதுதான் மேற்குலகத்துக்கு ஜெனிவாத் தொடரில் துரும்பாக அமையப் போகின்றது என்றும் அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றம் சாட்டியுள்ளார்.

மாற்றுக்கொள்கைகளுக்

பார்க்க பக்கம் 4

## வவுனியாவில் வெள்ளத்தால் 15,000 பேர் பாதிப்பு

வவுனியா, டிசெ.25

வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக 4 ஆயிரத்து 550 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 890 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர நேற்றுத் தெரிவித்தார்.

இவர்கள் 15 இடைத் தங்கல் முகாம்களில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் இவர்களுக்கான சமைத்த உணவு மற்றும் இதர வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெள்ளப்பாதிப்பு காரணமாக வவுனியா மாவட்டத்தின் அனைத்து அரச அதிகாரிகளுக்கும் விடுமுறை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

செட்டிக்குளம் பிரதேச செயலக பிரிவிலேயே அதிகளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மதவாச்சி, மன்னார்

பார்க்க பக்கம் 4

## ஓ/எல் விஞ்ஞான பரீட்சையில் 19 கேள்விகளுக்கு முழுப் புள்ளி

கொழும்பு, டிசெ.25

க.பொ.த. சாதாரண தர விஞ்ஞானபாட வினாத்தாள், பரீட்சை நடைபெறுவதற்கு முன்னதாகவே வெளியாகியது உண்மை என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி, பரீட்சைக்கு முன்னதாகவே வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் 19 வினாக்களுக்கும், பரீட்சையில் பங்குபற்றிய மாணவர்கள் அனைவருக்கும் புள்ளிகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானபாட வினாத்தாள் பரீட்சைக்கு முன்னதாகவே வெளியிடப்பட்டதாஎன்பது தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளில் வினாத்தாள் வெளியாகியுள்ளமை உறுதியாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர்

பார்க்க பக்கம் 4

## மஹிந்தவின் ஆட்சியில் அரச பயங்கரவாதம்

### மௌபிம மக்கள் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.25

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் ஆட்சியின் இறுதியில் கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்திலும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது என்று மௌபிம மக்கள் கட்சியின் தலைவர் கலாநிதி ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த அரச பயங்கரவாதத்திற்கு ஜனாதிபதி முற்றுப்புள்ளி வைக்காவிடின் அது அவருக்கே பாதகமானதாக மாறிவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராக அது அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுகின்றது. இதனால் தான் வடக்கிலுள்ள தமிழ்

பார்க்க பக்கம் 4

## காணாமல்போனோர் தொடர்பாக சர்வதேசத்திடம் முறையிடக்கூடாது

### இராணுவம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.25

கடந்த காலங்களில் கடத்தப்பட்டு காணாமல்போனோரின் உறவுகள், இதுதொடர்பில் ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளிடமோ அல்லது வேறு வெளிநாட்டு நிறுவனங்களிடமோ முறைப்பாடு செய்யக்கூடாது என்று படையினர் எச்சரித்துள்ளனர் என பி.பி.ஸி. தெரிவிக்கின்றது.

இதுதொடர்பில் பி.பி.ஸி. செய்திச்சேவை வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள், பாதுகாப்புத் தரப்பினரால் இவ்வாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேசங்களில் கடந்த காலங்களில் கடத்தப்பட்டு காணாமல்போனவர்களின் உறவினர்கள் ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளிடமோ அல்லது வேறு வெளிநாட்டு நிறுவனங்களிடமோ முறைப்பாடு செய்யக் கூடாது என்றும் படையினர்

பார்க்க பக்கம் 4

## கைது முறைப்பாடு 45ஆக உயர்வு

யாழ்ப்பாணம், டிசெ.25

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டமை தொடர்பில் நேற்றுத் திங்கட்கிழமையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றைய முறைப்பாட்டுடன் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 45 ஆக உயர்வடைந்துள்ளதாக

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசு கிறிஸ்துவின் போதனைகள் நல்லிணக்கத்தை பலப்படுத்த உதவும்

### நத்தார் செய்தியில் மஹிந்த

கொழும்பு, டிசெ.25

இயேசு கிறிஸ்து போதித்த அன்பு, புரிந்துணர்வு என்பனவே எமது நாட்டில் கட்டியெழுப்பப்பட்டு வரும் சமாதானம், சகிப்புத்தன்மை மற்றும் நல்லிணக்கத்தைப் பலப்படுத்த உதவும்.

இவ்வாறு தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.



அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதானத்தின் இளவரசராக இப்பூவுலகில் உதித்த இயேசுவின் பிறப்பைக் கொண்டாடுவதில் இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்கள் உலகெங்கும் வாழும் தங்களது சகோதர கிறிஸ்தவ மக்களுடன் இணைந்துகொள்கின்றனர்.

கிறிஸ்தவ சமயத்தின் போதனைகளின் சாரமான ''எல்லோருக்கும் அன்பு'' என்ற செய்தியை இந்த உலகுக்கு கொண்டுவந்த இயேசுவின் பிறப்பைக் கொண்டாடும் இந்த மகத்தான நாளில் குடும்பங்கள், சமூகங்கள் ஒன்றுசேர்ந்து அன்பு, புரிந்துணர்வு என்ற நத்தார் தினச் செய்தியைத் தங்களுக்கிடையே பகிர்ந்து கொள்கின்றனர். நத்தார் கொண்டாட்டம் நினைவூட்டும் அன்பு, புரிந்துணர்வு பற்றிய போதனையே எமது நாட்டில் கட்டியெழுப்பப்பட்டுவரும் சமாதானம், சகிப்புத்தன்மை மற்றும் நல்லிணக்கத்தை மேலும் பலப்படுத்த உதவும்.

பெத்லஹேம் தொழுவமொன்றில் இடம்பெற்ற இயேசுவின் பிறப்பானது, அன்பின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

இந் நன்நாளில் நத்தார் மணி எழுப்பும் நாத ஓசை சமாதானம், மகிழ்ச்சி, நல்லெண்ணம் என்ற செய்திகளையே எல்லோருக்கும் கொண்டுவருகிறது.

உங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியும், அமைதியும் நிறைந்த நத்தார் வாழ்த்துக்கள் - என்றுள்ளது.

(ங-சி)

## சத்தியத்தை ஜெயிக்க வைக்க நத்தாரில் சபதம் எடுப்போம்

### ரணிலின் கிறிஸ்மஸ் செய்தி

கொழும்பு, டிசெ.25

சத்திய போதனைக்காக சிலுவையில் தனது உயிரை நீத்தவர் இயேசுநாதர். அவர் பிறந்த இந்தப் புனித நாளில் சத்தியத்தை ஜெயிக்க வைப்பதற்கு நாம் திடசங்கற்பம் பூணுவோம்.



- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தனது நத்தார் வாழ்த்தில் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமது பதவியையும் அதிகாரத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தனக்கு எதிரான அனைத்து சக்திகளையும் ஒழித்துக்கட்டுவதற்கு வல்லமை படைத்தோர் செயற்பட்டு வருவதைப் பல காலம்தொட்டு கேள்விப்பட்டிருக்கிறோம் - வாசித்திருக்கிறோம்- பார்த்திருக்கிறோம் - அனுபவித்திருக்கிறோம்.

இயேசு நாதரின் பிறப்பும் அவ்வாறான ஒரு காலகட்டத்திலே இடம்பெற்றது.

இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டு இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களைக் கடந்துள்ளது.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் புரண்டோடியுள்ள இச்சந்தர்ப்பத்திலும் மக்கள் மனதில் நிலையான அன்பைக் கொண்டுள்ளவர் நிரந்தர ஆட்சியை வேண்டி நின்ற ஏரோது மன்னருமல்ல, பணம் மற்றும் செல்வாக்குகளுக்காகக் காட்டிக்கொடுத்த யூதாஸும் அல்ல, சத்திய போதனைக்காக சிலுவையில் தனது உயிரை நீத்த இயேசுநாதரேயாவார்.

இந்த நத்தார் தினத்தில் சத்தியத்தை ஜெயிக்க வைப்பதற்கு நாம் திடசங்கற்பம் பூணுவோம்.

எங்களிடையே காணப்படும் ஒளியை இருளடையாது வைத்துக்கொள்வதற்கு முடியுமாயின் இந்த நத்தார் மிகவும் அர்த்தமுள்ளதாக அமையும்.

(ங-சி)

## வைத்தியர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம்; டிசெ. 25

யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை ஒரு மணி நேரப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக வைத்தியர் சங்கம் அறிவித்துள்ளது.

இந்த வைத்தியசாலையில் பணிபுரியும் காது, மூக்கு, தொண்டை சிகிச்சை நிபுணர் பி.திருமாறன் வாள் வெட்டுக்கு இலக்கான நிலையில், குற்றவாளியைக் கண்டுபிடிக்குமாறு வலியுறுத்தியும், வைத்தியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி கோரியும் இந்தப் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்வதாகச் சங்கம் கூறியுள்ளது. இதே வேளை தொடர்ச்சியாக இவ்வாறு வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதால் நோயாளர்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர்.(த-4)

## மதுக்கடைகளுக்கு இன்று மூடுவிழா

கொழும்பு, டிசெ.25

புனித நத்தார் பண்டிகையை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்து மதுபான சாலைகளும் இன்று மூடப்படும் என மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் ஆகியவற்றிலுள்ள மதுபான விற்பனைக் கூடங்களையும் மூடுமாறு திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலங்களில் மதுபானசாலைகள் திறந்திருப்பதன் காரணமாக அதிகமானவர்கள் மது அருந்திவிட்டு மதுபானசாலைகளிலும், பாதைகளிலும், பொது இடங்களிலும் தகாத முறையில் நடந்து கொள்கின்றனர். இதனால் புனித நாளான இன்று வீதி விபத்துகளும், சண்டைகளும் இடம்



பெறுவதற்கு வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன.

அத்துடன், மது அருந்துபவர்களின் தொந்தரவுகளால் ஏனையவர்களுக்கும் பண்டிகையைக் குதூகலமாகக் கொண்டாட முடியாத நிலை ஏற்படும். இதனைக் கருத்திற்கொண்டே இன்று மதுபானசாலைகள் மூடப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால்நேற்றையதினமே மதுபான சாலைகளில் பலர் முண்டியடித்துக் கொண்டு மதுபானங்களைக் கொள்வனவு செய்தததைக் காணக் கூடியதாக இருந்தது.(ங-சி)

## கடை உரிமையாளருக்கு கிளிநொச்சியில் வாள்வெட்டு

கிளிநொச்சி, டிசெ.25

கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் சென்ற நால்வர் கடை உரிமையாளர் ஒருவரை வெட்டிக்காயப்படுத்தி உள்ளனர்.

வெட்டுக்காயங்களுக்கு இலக்கானவர் விரைந்து செயற்பட்டதால் வந்தவர்களில் ஒருவர் மாட்டிக் கொண்டார்.

கனகபுரம் பகுதியில் கட்டடப்பொருள் கடையை நடத்தி வந்த எஸ்.அற்புதராசா (வயது -45) என்பவரே வெட்டுக் காயங்களுடன் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் தனது பெயரைக் கூறி அழைத்து வெட்டிக் காயப்படுத்தினர் என அற்புதராசா தெரிவித்தார்.

பிடிபட்டவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-6)

## மணிவாசகர் விழா

யாழ்ப்பாணம், டிசெ.25

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் 58 ஆவது ஆண்டு மணிவாசகர் விழா இன்று முதல் மூன்று தினங்கள் காரைநகர் ஈழத்துச் சிதம்பர மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மூன்று தினங்களும் தமிழகத்தில் இருந்து வருகை தந்துள்ள புலவர் மணி ச.அருணசடேசன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (த-250)

## பறிபோனது 12 பவுண் தாலி

யாழ்ப்பாணம், டிசெ.25

உடுவில் பகுதியில் பட்டப் பகலில் வீடு உடைத்து உள்நுழைந்த திருடர்கள் 12 பவுண் நிறையுடைய தாலிக் கொடியைத் திருடிச் சென்றுள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் நொட்டியாலடிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரது வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மரக்கறி வாங்குவதற்காக சந்தைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய போதே வீடு உடைத்து தாலிக்கொடி திருடப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் ஆசிரியர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

## நாட்டின் பல பகுதிகளில் 8 பேரின் சடலங்கள் மீட்பு

நாட்டின் பல்வேறு பகுதிகளில் 24 மணித்தியாலங்களுக்குள் 8 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றுள் கை, கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இரண்டு சடலங்களும், உருக்குலைந்த நிலையில் இரு சடலங்களும், நீரில் மூழ்கி இறந்த இருவரின் சடலங்களும், வாகன விபத்தில் இறந்த இருவரின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

**கைகள் வெட்டப்பட்ட சடலம்**

நிட்டம்புவ, ரன்பொக்குனகம பகுதியில் அடையாளம் காணப்படாத நிலையில் இரு கைகளும் வெட்டப்பட்ட நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை இச்சடலம் மீட்கப்பட்டபோது, இரு முழங்கைகளும் துண்டிக்கப்பட்டிருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இந்நபர் சுமார் 26 வயதுடையவராக இருக்கலாமென்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை நிட்டம்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**ஆணின் உருக்குலைந்த சடலம்**

திருகோணமலை, கிண்ணியாவில் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலத்தைப் பொலிஸாரால் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது.

தம்பலகாமம் பட்டிமேட்டையைச் சேர்ந்த கோணமலை சகாதேவன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் கிண்ணியா, ஈச்சந்தீவுப் பகுதியில் வாழ்ந்து வரும் ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

இவர் கிண்ணியா கண்டல்காடு பகுதியில் மாடுகளை பார்வையிட்டுவிட்டு திரும்புகையில் கடந்த 5 தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

**பெண்ணின் சடலம்**

நெலுவ பானாகொட பகுதியில் கழுத்து வெட்டி கொலை செய்யப்பட்ட நிலையில் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட பெண் பன்னிமுல்ல பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**இத்தாலிப் பிரஜை சடலமாக மீட்பு**

இத்தாலிய பிரஜை ஒருவரின் சடலத்தை நீர்கொழும்பு பொலிஸார் நேற்றுமுன்தினம் காலை மீட்டுள்ளனர். ரொபர்ட் ஸ்டபனில் (வயது - 60) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

நீர்கொழும்பு ஏத்துக்கால பிரதேசத்தில் உள்ள வீட்டிலிருந்து இவரது சடலம் மீட்கப்பட்டதாக ஏத்துக்கால சுற்றுலாத்துறை பொலிஸ் நிலையத்தை சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் டிஎஸ்.டிசுனில் பெரேரா தெரிவித்தார்.

சடலமாக மீட்கப்பட்ட இந்நபர் இம்மாதம் 3ஆம் திகதி இலங்கைக்கு வந்திருந்தார். நீர்கொழும்பு, ஏத்துக்கால பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்ததார்.

அயலவர் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று பார்த்தபோது இவர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார். இவர் கடந்த சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் உயிரிழந்திருக்கலாம் எனவும் இது இயற்கை இறப்பாக இருக்கலாம் எனவும் தாம் கருதுகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சடலம் பரிசோதனைக்காக நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**இராணுவச் சிப்பாய் இறப்பு**

வவுனியா, கனகராயன் குளத்திலிருந்து 215 மீற்றர் தொலைவில் உள்ள வீதியோர சோதனைச்சாவடியுடன் லொறி ஒன்று மோதி விபத் துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தின்போது சாவடியிலிருந்த இராணுவச் சிப்பாய் உயிரிழந்துள்ளார். மற்றுமொரு சிப்பாய் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று அதிகாலை 4.15 மணியளவில் விபத்து இடம்பெற்றுள்ளது. லொறியின் சாரதி நித்திரை மயக்கத்தில் வாகனத்தை செலுத்தியமையே விபத்திற்கான காரணம் என பொலிஸார் தெரிவித்தனர். குருநாகலிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஓடு ஏற்றிச் சென்ற லொறியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

**விபத்தில் ஒருவர் சாவு**

வாத்துவ, தள்பிட்டிய ரயில் கடவையில் வான் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி விபத்தில் மினுவன்கொடையைச் சேர்ந்த வான் சாரதியே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த வான் கற்பிட்டி ரயில் கடவையில், கொழும்பிலிருந்து அழுத்கம நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ரயிலுடன் மோதுண்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வாத்துவ பொலிஸர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

**நீரில் மூழ்கி உயிரிழந்த இருவரின் சடலங்கள் மீட்பு**

அக்கரைப்பற்று மற்றும் சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் நீரில் மூழ்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

அக்கரைப்பற்று, மீராவோடை களப்பில் படகொன்று கவிழ்ந்ததில் 19 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞன் அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்தவர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இதேவேளை, சம்மாந்துறை மாவடிப்பள்ளி பகுதியில் நீரில் மூழ்கி காணாமற்போன ஒருவருடைய சடலம் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ங-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் வியாபாரம் யாழ்.நகரில் படுசூடு

## அலைமோதியது சனக் கூட்டம்



*யாழ்ப்பாணம், டிசெ.25*
*நத்தார் வியாபாரம் நேற்று திங்கட்கிழமை படுசூடாக இருந்தது. நத்தார் பண்டிகைக் கொண்டாட்டத்துக்காக நேற்று நகரில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் ஆடைகள், அலங்காரப் பொருள்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.*

நத்தார் பண்டிகை இன்று கிறிஸ்தவ மக்களால் கொண்டாடப்படுகின்றது. இருப்பினும் இந்த வாரத்தின் ஆரம்பத்தில் நத்தார் கொண்டாட்டத்துக்கான பொருள் கொள்வனவு மந்த நிலையிலேயே காணப்பட்டது. சனக்கூட்டம் இல்லாமல் வியாபார நிலையங்கள் வெறிச்சோடிக்காணப்பட்டன.

இந்த நிலையில் நேற்றுக் காலையில் யாழ்.நகருக்குப் பெரும் எண்ணிக்கையான மக்கள் நத்தார் கொண்டாட்டத்துக்கான பொருள்கள் கொள்வனவுக்காக வந்திருந்தனர்.

நடைபாதை வியாபாரிகளும் யாழ்.நகரின் பல இடங்களில் தமது பொருள்களைப் பரப்பி விற்பனையில் ஈடுபட்டிருந்தனர். நகரிலுள்ள அழகுசாதனக் கடைகளில் செயற்கையான கிறிஸ்மஸ் மரங்கள் அமோகமாக விற்பனையாகின.

மக்கள் அலங்காரப் பொருள்கள் மற்றும் ஆடைக் கொள்வனவுக்காக யாழ்.நகரில் திரண்டமையால் நகரில் ஆஸ்பத்திரி வீதி, பெரியகடை வீதி, மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதி என்பவற்றில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்களில் மக்கள் கூட்டம் அதிகமாகக் காணப்பட்டது. அத்துடன் சவுக்கு மரங்களும் நேற்றுக் காலை முதல் நகரின் பல இடங்களிலும்வைத்துவிற்பனை செய்யப்பட்டன. (த-5-17)

## மரக்கறிச் செய்கையில் ஆர்வம்

யாழ்ப்பாணம், டிசெ.25
குடாநாட்டில் மரக்கறிச் செய்கையில் விவசாயிகள் தற்போது அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மரக்கறி வகைகளின் விலை உயர்வை அடுத்தே விவசாயிகள் மரக்கறி செய்கை யில் அதிக நாட்டம் கொண் டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. கத்தரி, கோவா, பயற்றை, வெண்டி, தக்காளி, பூசணி, பாகல் போன்ற மரக்கறி வகைகளே அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளதாக விவ சாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பெரும்பாலும் தைப்பொங்கலுடன் மரக்கறி வகைகளின் விலையில் சரிவு ஏற்படும்.

தற்போது திருவெம்பாவை விரத காலம் ஆகையால் மரக்கறி வகைகளின் விலைகள் திடீரென சூடு பிடித்துள்ளதாகத் தெரியவருகிறது. நேற்று திருநெல்வேலி சந்தையின் விலை நிலைவரம் வருமாறு:-

கத்தரிக்காய் (1கிலோ) - 120 ரூபா, பயிற்றங்காய் (1கிலோ)- 100 ரூபா, வெண்டிக்காய் (1கிலோ)- 80 ரூபா, பூசணிக்காய் (1கிலோ)- 60 ரூபா, கரட் (1கிலோ)- 120 ரூபா, மரவள்ளிக் கிழங்கு (1கிலோ)- 30 ரூபா, உருளைக்கிழங்கு (1கிலோ)- 120 ரூபா, பச்சைமிளகாய் (1கிலோ)- 250 ரூபா, வெங்காயம் (1கிலோ)- 140 ரூபா, கீரை (ஒருபிடி) - 10 ரூபா, தேசிக்காய் (ஒன்று) - 5 ரூபா. (த-17)

## நடமாடும் சேவையால் பயன்

யாழ்ப்பாணம், டிசெ.25
கோப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் அச்சுவேலி பகுதியில் இடம்பெற்ற பிறப்பு- இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கும் நடமாடும் சேவையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாகப் பிரதேச செயலாளர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

அச்சுவேலி வடக்கு, தெற்கு பத்தமேனி, இடைக்காடு, கதிரிப்பாய், தம்பாலை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இந்த நடமாடும் சேவை மூலம் பெரிதும் நன்மையடைந்தார்கள். (த-17)

## கழிவுப் பொருள்களுள் இரும்பு தேடும் இவர்கள்



யாழ்ப்பாணம், டிசெ.25
யாழ்.பொம்மைவெளிப் பகுதியில் கொட்டப்படும் கழிவுப் பொருள்களுக்குள் இருந்து இரும்புப் பொருள்களைத் தேடி எடுப்பதில் பெரும் போட்டி நிலவுகிறது.

யாழ்ப்பாணத்தில் பழைய இரும்புக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதை அடுத்துத் தினமும் இந்த நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

சிறியவர் முதல் வயோதிபர் வரைக்கும் இந்தப் பிரதேசத்தில் கொட்டப்படும் கழிவுப் பொருள்களுக்குள் இருந்து இரும்புகளைத் தேடி எடுத்து அவற்றை விற்பனை செய்து வருகின்றனர்.

வறுமையான குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இந்த இரும்பு சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (த-17)

## திராட்சைச் செய்கையாளருக்கு கைகொடுத்தது மாரி மழை

யாழ்.மாவட்டத்தில் திராட்சை செய்கையில் விவசாயிகள் ஆர்வம் இந்த வருடம் அதிகமாக உள்ளது. திராட்சைப்பழத்துக்கு தளம்பல் நிலை இல்லாத விலையும் திராட்சைப்பழத்தில் நோய்த் தாக்கம் ஏற்படாத நிலையும் விவசாயிகளை ஆர்வம் கொள்ளச் செய்துள்ளது.

அத்துடன் இம்முறை மாரி மழை இல்லாமையும் இவர்களது வருவாய் அதிகரிக்கக் காரணமாக உள்ளது.

தற்பொழுது 80 ஹெக்ரேயர் அளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் திராட்சைச் செய்கை ஜனவரி மாதத்தில் மேலும் 20 ஹெக்ரேயரால் அதிகரித்து 100 ஹெக்ரேயர் ஆகலாம் என்று யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

யாழ்.மாவட்டத்தில் திராட்சைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு வங்கிக் கடன் உதவி மற்றும் யாழ். குடாநாட்டின் சமகால கால நிலை என்பன வாய்ப்பாக அமைந்துள்ளன. அத்துடன் திராட்சைப்பழத்தின் விலையும் வெளிமாவட்ட சுற்றுலாப் பயணிகள் வருகையை அடுத்து தளம்பல் இல்லாத நிலையில் உள்ளது.

கடந்தகாலங்களில் மாரிப்பருவ பழத்தில் கணிசமான அளவு அறுவடையின் போது அழுகிச் சேதமடைந்ததுண்டு.

மாரிமழை தொடர்ந்து பெய்தால் மழை நீர் பழங்களில் தங்கி நின்று முற்றிய திராட்சைக் காய்கள் வெடித்து அழுகிச் சேதமடைவது வழமை. இந்த வருடம் மாரி மழை இல்லாத நிலையில் திராட்சை அறுவடையில் குறிப்பிடத்தக்க பாதிப்பு ஏற்படவில்லை எனக் கூறப்படுகிறது.

திராட்சைப்பழ விலையில் தளம்பல் இல்லாத நிலை, திராட்சைச் செய்கைக்கு வங்கிகளின் கடன் உதவி வசதி, சந்தைப்படுத்தலில் காணப்படும் இயல்பு நிலை என்பன யாழ்.மாவட்ட விவசாயிகளை திராட்சைச் செய்கையில் மேலும் ஆர்வம் கொள்ளச் செய்துள்ளன.

1995ஆம் ஆண்டு இடப்பெயர்வு, ஏ-9 பாதை மூடப்பட்ட நிலை, இராணுவ நடவடிக்கை என்பவற்றால் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த திராட்சைச் செய்கை ஏ-9 திறக்கப்பட்டதை அடுத்து இயல்பு நிலைக்குவந்துள்ளது. (ம-11)

# வடக்கின் மீள் எழுச்சித் திட்ட தண்ணீர் வழங்கலுக்கு காணி சிபார்சு

வடமராட்சி, டிசெ.25
வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டத்தில் வல்வெட்டித்துறை, மருதங்கேணி பிரதேசங்களுக்குக் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்குத் தேவையான காணிகளை வழங்க பருத்தித்துறைப் பிரதேச சபை சிபார்சு செய்துள்ளது.

இந்தத் திட்டங்களுக்குத் தேவையான காணிகளைத் தெரிவு செய்த தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அவற்றைப் பெறுவதற்குச் சிபார்சு செய்யுமாறு பருத்தித்துறை பிரதேச சபையிடம் கோரியிருந்தது.

இந்தச் சிபார்சு தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் மருதங்கேணி, குடத்தனை ஆகிய இடங்களில் பொது அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களுடன் அண்மையில் பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் தலைமையில் நடைபெற்றது. மருதங்கேணியில் 8.69 ஏக்கர் நிலமும் மணற்காட்டில் 54.5 ஏக்கர் நிலமும் இந்தத் திட்டத்துக்காக கோரப்பட்டிருந்தது.

மருதங்கேணியில் செம்பியன்பற்று உப அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் கருத்துத் தெரிவிக்கையில்:-

குடிதண்ணீர்த் திட்டத்துக்கு காணி வழங்குவது தொடர்பாக பொது அமைப்புக்கள், திணைக்களங்கள் மற்றும் பொதுமக்களின் அபிப்பிராயங்களைப் பெற்றே காணி வழங்குவதில் பிரதேச சபை சிபாரிசு செய்ய வேண்டிய கடமைப்பாடு உண்டு. வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்ட காணியிலிருந்து 300 மீற்றருக்கு அப்பால் மக்கள் குடியிருப்பு உள்ளது. ஒவ்வொரு நீர் வழங்கும் மூலங்களில் இருந்தும் 100 மீற்றர் சுற்றாடலிலுள்ள நிலம் மாசடையும் செயற்பாடுகளும் மேற்கொள்தல் ஆகாது.

குறிப்பிடப்பட்ட பிரதேசத்தில் பிரதேச செயலாளர் எதிர்காலத்தில் குடியிருப்புத் திட்டத்துக்கோ அல்லது வேறு தேவைகளுக்கோ காணிகள் வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

பிரதேச சபைச் செயலாளர் திருமதி த.சந்திரபாமா கருத்துத் தெரிவிக்கையில்:-

காணி வழங்கும்போது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிபாரிசையும் பெற்றே காணி பராதீனப் படுத்தப்படல் வேண்டும் என்றார்.

குடியிருப்புக் காணிகளைக் கருத்தில் கொண்டே காணி வழங்க முடிவு எடுக்கப்பட்டது என்று மருதங்கேணி பிரதேச செயலகக் காணி உத்தியோகத்தர் கூறினார்.

தண்ணீர்த் திட்டத்துக்கு வழங்கப்படும் காணியூடாகவே கடல் இடர்களின் போது மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றார்கள்.

எனவே வழங்கப்படும் காணியைச் சுற்றி முட்கம்பி வேலி எல்லைப்படுத்தப் படுமாஎனக்கேள்விஎழுப்பினார்.

இறுதியாக இந்தத்திட்டத்துக்கான காணிகளை வழங்க பருத்தித்துறை பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சிபாரிசு செய்வதென தீர்மானிக்கப்பட்டது. (ம-8)


## இலங்கை சுதந்திர பட்டதாரிகள் மாநாட்டுக்கான அழைப்பு - 12.01.2013



அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து இலங்கை சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் 12.01.2013 சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு சுகததாசா விளையாட்டு அரங்கில் பட்டதாரிகள் மாநாடு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அங்கஜன் இராமநாதனின் தலைமையில் யாழ்.சுதந்திர பட்டதாரிகள் சங்கம் நிறுவப்பட்டு அதில் உறுப்பினர்களாகவுள்ள அனைவருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் அனைத்து சுதந்திர பட்டதாரி உறுப்பினர்களும் புதிய பட்டதாரிகளும் இணைந்து யாழ். மாவட்டத்தில் உள்ள பட்டதாரிகளுக்கான அனுகூலங்களினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அங்கஜன் இராமநாதன் கேட்டுக் கொள்கிறார்.

அங்கஜன் இராமநாதன், யாழ். சுதந்திர பட்டதாரிகள் சங்கத் தலைவர்,
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர்.

(சி/5047)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
வீதிகள் நேற்றும் தடைப்பட்டிருந்தன.

வவுனியா ஆச்சிபுரம் கிராமம் முற்றாக நீரில் மூழ்கியுள்ளதால் 300 குடும்பங்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளன. இதுவரை தமக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை என அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் தாம் உணவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர் எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கவனம்செலுத்த வேண்டும் என அந்த மக்கள் கோரியுள்ளனர்.

வவுனியா நொச்சிகுளம் பகுதியில் மழை காரணமாக அள்ளுண்டு வந்த இரண்டு சக்தி வாய்ந்த கண்ணிவெடிகளை இராணுவத்தினர் மீட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவை ஒவ்வொன்றும் 15 கிலோகிறாம் எடைகொண்ட வாகன கண்ணி வெடிகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-400)

## ஓ/எல்....

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இதனைத் தெரிவித்துள்ளார்.

### 9, 10ஆம் திகதிகளில் மீள் பரீட்சை

இதேவேளை, நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக பரீட்சைகளை எழுதத் தவறிய மாணவர்களுக்காக விசேட பரீட்சை நாள்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் இந்த பரீட்சைகள் இடம்பெறும் என கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பலர் கணிதம், அழகியற்கலை பரீட்சைகளுக்கு தோற்றவில்லை.

### மேலும் மூவர் கைது

இதேவேளை, சாதாரண தர விஞ்ஞான பாட வினாத்தாள், பரீட்சைக்கு முன்னதாக வெளியிட்ட சம்பவம் தொடர்பில் பரீட்சை திணைக்களத்தைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று கடுவல நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரினால் இதற்கு முன்னர் கைதுசெய்யப்பட்டிருந்த தனியார் கல்வி நிலைய ஆசிரியர் உள்ளிட்ட இருவர் மற்றும் இந்த மூவரையும் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (சி)

## காணாமல்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
எச்சரித்து விட்டுச் சென்றுள்ளனர் என அப்பகுதி மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர் என வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காகக் குரல் கொடுக்கின்ற அமைப்பொன்றின் தலைவி தெரிவித்துள்ளார்.

தம்பலகாமத்துக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் இராணுவ வாகனமொன்றில் சென்ற நபர்கள், விடுதலைப் புலிகளோடு தொடர்புடைய எவராவது அங்கு வசிக்கிறார்களா என்று தேடிச்சென்றனர் என போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் தலைவி கூறினார்.

மக்கள் தமது காணாமல்போன உறவினர்கள் தொடர்பில் வெளிநாட்டு அமைப்புகளிடம் முறையிடக்கூடாது என படையினர் எச்சரித்துச் சென்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

தமது கணவன்மாரும் பிள்ளைகளும் கடத்தப்பட்டபோது அவர்களை விடுவிப்பதற்காக தம்மிடம் கப்பம் பறித்த ஆயுதக் குழுக்களைச் சேர்ந்த பலரும் எந்தவிதமான பிரச்சினைகளுமின்றி தமது பிரதேசங்களில் நடமாடி வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

கடத்தப்பட்டு காணாமல்போனவர்களின் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் மிகவும் சிரமப்படுகின்றனர் எனவும் அந்தக் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க அரச அதிகாரிகள் முன்வரவேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கூறுகின்றன.

2008 முதல் 2009 வரையான காலப் பகுதியில் போர் உச்சத்தில் இருந்தபோது, ஆயுதக் குழுக்களால் கடத்தப்பட்டு காணமல் போனவர்களின் நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் தமது அமைப்பில் அங்கம் வகிக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தம்பலகாமம் பகுதியில் மக்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இலங்கை படைத்தரப்பின் கருத்துக்கள் கிடைக்கப்பெறவில்லை என்றும் பி.பி.ஸி. செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## காணிப் பதிவகங்கள் இரண்டு புதிதாக திறப்பு

இலங்கையில் மேலும் இரண்டு காணிப் பதிவகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மற்றொரு காணிப்பதிவகம் எதிர்வரும் ஜனவரி மாதம் திறந்து வைக்கப்படவுள்ளது என்று மேலதிக பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் இதுவரை 42 காணிப் பதிவகங்கள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன.அவற்றைவிட மேலதிகமாகவே காலி மாவட்டம் எல்பிட்டியவில் கடந்த மாதம் ஒரு காணிப்பதிவகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த மாதம் கடந்த 15 ஆம் திகதி கம்பஹா மாவட்டம் அத்தனகல்ல என்ற இடத்தில் இன்னொரு காணிப்பதிவகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதம் இரத்தினபுரி மாவட்டம் எம்பிலிப்பிட்டிய என்ற இடத்தில் மற்றொரு கணிப்பதிவகம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் சனத்தொகைக்கு ஏற்ப காணிப்பதிவகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை ஆகிய இடங்களில் காணிப்பதிவகங்கள் உள்ளன. கொழும்பு மாவட்டத்தில் நான்கு காணிப்பதிவகங்கள் உள்ளன - என்றார். (த-4)

## கைது...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

நவம்பர் மாத இறுதி வாரத்துக்குப் பின்னதாக யாழ். மாவட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

சில பல்கலைக்கழக மாணவர்கள், மாணவிகள் விசாரணைக்காக தொடர்ந்து வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

யாழ். குடாநாட்டில் தொடர்ச்சியாக இந்தச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்த மாதம் 5 ஆம் திகதி கைது செய்யப்பட்டவர் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த 16 ஆம் திகதி நெல்லியடியில் வைத்துக் கைது செய்யப்பட்டவர் தொடர்பில் நேற்று திங்கட்கிழமை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரையில் யாழ். குடாநாட்டைச் சேர்ந்த 39 பொதுமக்கள், 2 பல்கலைக்கழக மாணவர்கள், கிளிநொச்சியைச் சேர்ந்த 4 பொதுமக்கள் என்று 45பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (த-5)

## மஹிந்தவின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இளைஞர்கள், நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன, சட்டத்தரணி குணரட்ன வன்னிநாயக்க, இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ ஆகியோர் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ ஆட்சியின் இறுதிக்காலத்தில் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. லலித் அத்துலத்முதலி கொலைசெய்யப்பட்டார். இந்தக் கொலை தொடர்பில் ஜனாதிபதி பிரேமதாஸவுக்குத் தெரியாது என ஊடகங்களில் அப்போது செய்தி வெளியிடப்பட்டது. அந்த நிலைமைதான் இப்போதும் இருக்கிறதா?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் கட்டவிழ்த்துவிடப்படுகின்ற அரச பயங்கரவாதம் அவருக்குத் தெரியாமலா கட்டவிழ்த்துவிடப்படுகிறது?

இதற்கு மன்னர் காலத்து கதை ஒன்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம். அதாவது, மன்னர் ஒருவரின் தலையில் ஈ ஒன்று அமர்ந்துள்ளது. அந்த ஈயை விரட்டுவதற்காக மன்னருக்குப் பணிபுரிந்த முட்டாள் சேவகன் ஒருவன் வாளை எடுத்து ஈயை ஓங்கி வெட்டியுள்ளான். ஆனால் ஈ பறந்துவிட்டது. மன்னரின் தலை துண்டாக வெட்டப்பட்டு அவர் இறந்துவிட்டார்.

இதேபோல, தற்போது நாட்டில் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அரச பயங்கரவாதத்துக்கு ஜனாதி[illegible] வேண்டும். இ[illegible] வைக்காவிடின் அது அவருக்கே பாதகமானதாகிவிடும் - என்றார் ஹேமகுமார. (சி)

## இரணைமடுவில் வான் கதவுகள் 2 அடிக்கு திறப்பு

கிளிநொச்சி, டிசெ. 25

இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் அனைத்தும் திறந்துவிடப்பட்டுள்ளன. குளத்தின் நீர்மட்டம் 31.2 அளவை எட்டிய நிலையில் அனைத்து கதவுகளும் 2 அடி அளவுக்கு நேற்றுத் திறக்கப்பட்டன. இதனால் பன்னங்கண்டிக் கிராமத்தைச் சேர்ந்த 18 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த 25 பேரும் அங்குள்ள பாடசாலை ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சமைத்த உணவுகளை வழங்க கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை குளத்துக்கான நீர்வரத்து அதிகரித்திருப்பதால், தாழ் நிலப்பகுதியில் உள்ள மக்களை எச்சரிக்கையாக இருக்கும்படி மாவட்ட இடர் முகாமைத்துவப்பிரிவு அறிவுறுத்தியுள்ளது. (த-9-6-422)

## சர்வதேச...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கான நிலையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து மற்றும் சுமந்திரன் போன்றோரின் இலக்கும் இதுவாகத்தான் உள்ளது எனவும், சர்வதேச சக்திகளின் ஒப்பந்தத்தின் பிரகாரமே நீதிச்சேவை ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டது என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரச மின் ஊடக மொன்றுக்கு வழங்கிய செவ்வியின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்ட அமைச்சர், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் தெளிவுபடுத்தினார்.

அவர் அந்தச் செவ்வியில் முக்கியமாகக் கூறியதாவது:-

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் தெளிவானதொரு விசாரணை முறைமை இல்லை என்றும், போதுமான காலவகாசம் இல்லை என்றும் எதிர்த் தரப்பு உறுப்பினர்கள் ஆரம்பம் முதலே குற்றச்சாட்டுக்களை சுமத்திவந்தனர்.

பிரதம நீதியரசர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வாவும் இதனைத்தான் கூறியிருந்தார்.

குறிப்பாக முன்னாள் நீதியரசர்களுள் ஒருவரான நெவில் சமரகோன் நாடாளுமன்றத்துக்கு விசாரணைக்கு வருகை தந்தபோது, அவர் நாடாளுமன்ற சந்தியில் வைத்து இறக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகளின் பின்னரே நாடாளுமன்றத்துக்குள் உட்பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டார்.

சட்டத்தரணி ஒருவரே அவர் சார்பில் முன்னிலையான பதிலளித்தார். அவர் அமைதியான முறையில் இருந்தார். தெரிவுக் குழுவுக்கோ அல்லது நாடாளுமன்றத்துக்கோ சவால் விடுக்கும் விதத்தில் நடந்து கொள்ளவில்லை. அப்போது நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளும் இருக்கவில்லை. எனினும், தற்போதைய நீதியரசர் கௌரவமான முறையிலேயே வரவழைக்கப்பட்டார். பரிசோதனை நடவடிக்கைகள் எதுவும் இன்றியே அவர் அனுமதிக்கப்பட்டார். அத்துடன், சட்டத்தரணிகளையும் முற்பட அனுமதித்தோம்.

அவர்கள் ஒரு வார கால அவகாசம் கோரினர். நாம் வழங்கினோம். குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிப்பதற்கு அவர்கள் தயாராக வரவில்லை. அதன் பின்னர் நீதியரசரும், எதிர்த்தரப்பினரும் வெளிநடப்புச் செய்தனர். இது முன்கூட்டியே திட்டமிட்ட ஒரு செயல் என்பதை அவர்களது நடவடிக்கைகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

அதேவேளை, வரவு- செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதை உத்தியோகபூர்வமாக அறிவிக்குமாறு அவர் கோரிக்கை விடுத்தார். இதனையடுத்து மனிதாபிமான அடிப்படையில் ஜனாதிபதியின் செயலாளர் அவருக்கு அழைப்பு விடுத்தார்.

அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, இதே நீதிச்சேவையின் சுயாதீனத்துக்கு இடையூறு விளைவிக்கப்படுகின்றது என நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவரான நீதியரசர் அதன் செயலாளர் ஊடாக ஊடகங்களுக்கு அறிக்கை விடுத்தார். இது உலகத்துக்கு விடுக்கப்பட்ட அறிக்கையாகும். ஏனெனில், ஜனாதிபதியை சந்தித்தீர்களா அல்லது இல்லையா என நாட்டு மக்கள் இதனைக் கோரவில்லையே.

ஜனாதிபதி இவ்வாறு சந்திப்பது சாதாரண விடயம் என்றும், தான் தனியாகவே சென்றுள்ளார் என்றும் முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வாகூட தெரிவித்துள்ளார். எனவே, யார் பிரச்சினையைத் தோற்றுவித்தனர் என்பதை இதன்மூலம் அறிய முடியும். திவிநெகும சட்டமூலம் அல்ல பிரச்சினை. எந்தவொரு சட்டமூலத்தையும் அரசால் இலகுவில் நிறைவேற்றிக்கொள்ள முடியும். மூன்றிலிரண்டு பெரும்பான்மை அரசுக்கு உள்ளது.

அதேவேளை, தனது கணவர் குறித்தான வழக்கு விசாரணைக்கு வந்தபோது அதை ஏன் பிரதம நீதியரசர் விசாரித்தார். இது எந்த வகையில் நியாயம்? நீதிமன்றத்தின் சுயாதீனம் குறித்து பேசுபவர்கள், இவ்வாறான சந்தர்ப்பங்களில் அதிலிருந்து விலகியிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யவில்லை. செலிங்கோ வழக்கு விசாரணை குறித்தான சிபாரிசும் புறக்கணிக்கப்பட்டு ஐந்து நீதியரசர்கள் விசாரிக்க வேண்டிய வழக்கை மூவருடன் நீதியரசர் விசாரித்தார்.

நீதியரசர் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கும்போது அதிகாரப் பகிர்வு குறித்து கட்டுரை எழுதியுள்ளார். பாக்கியசோதி சரவணமுத்துவின் இணையத்தளம் மற்றும் 'தமிழ் நெற்' ஆகிய இணையத்தளங்களில் அவை பிரசுரிக்கப்பட்டிருந்தன. நானோ அல்லது கலாநிதி குணதாச அமரசேகரவோ ஏதாவது எழுதியிருந்தால் மேற்படி இணையத்தளங்கள் அதைப் பிரசுரிக்குமா? இது குறித்து புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் கூட்டாக இணைந்து சரத்பொன்சேகாவை தோளில் தூக்கிவைத்து நின்றனர். எனினும் நாட்டு மக்கள் ஜனாதிபதிக்கே வாக்களித்தனர். மேற்குலக சக்திகளுக்கு வளைந்துக் கொடுக்காது நாட்டைக்காக்கும் தலைவனே தற்போது ஆட்சியில் உள்ளார். மக்கள் வாக்குகளால் அரசைக் கவிழ்க்க முடியாது எனத் தெரிந்தே இவ்வாறான நிகழ்ச்சி நிரல்களை வகுக்கின்றனர்.

மக்களால் மாத்திரமே இந்த அரசை விரட்டியடிக்க முடியும். மக்கள் அரசுக்கு எதிராக உள்ளனரென்றால் எதிர்க்கட்சிகள் நாளை வேண்டுமானாலும் தேர்தலை ஜனாதிபதியிடம் கோரலாம். அதைவிடுத்து டொலர்களுக்கும், சர்வதேச சக்திகளின் தேவைகளுக்கும் ஏற்ப நாட்டில் எவரும் செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடாது.

குறிப்பாக, நீதித்துறைக்கும் சட்டவாக்கத்துக்கும் இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதற்கு பிரதம நீதியரசர் முயற்சிக்கின்றார். இதை சர்வதேச ஒப்பந்தம் இல்லை எனக் கூறமுடியுமா?

இலங்கையில் நீதித்துறையில் சுயாதீனம் இல்லை, அங்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது போன்ற காரணிகளைத் துரும்பாகப் பயன்படுத்தி சர்வதேச சக்தி இலங்கையில் சுயாதீன விசாரணை நடத்தவேண்டும் என ஜெனிவாத் தொடரில் கோரிக்கை விடுக்கும். இதற்கான நிரல்களையே நீதியரசர் உருவாக்கி வருகின்றார்.

## தெரிவுக்குழுவின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
முடிவெடுப்பதற்காக நான் எனது சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசித்து வருகிறேன்.

தெரிவுக்குழுவின் பணி முடிவடைந்து அக்குழு கலைக்கப்பட்டாலும்கூட நீதிமன்றம் சில தெளிவுகளைப் பெறுவதற்காக அதற்கு அழைப்பாணை விடுக்கமுடியும். அதற்குச் சட்டத்தில் இடமுண்டு.

இந்த விடயம் தொடர்பில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவுக்குழு உறுப்பினர்களாக இருந்த எம்மிடம் எதுவும் கூறவில்லை. நாம் நீதிமன்றம் சென்றால் அது பிழையில்லை.

நீதிமன்றம் செல்ல சபாநாயகரின் அனுமதி எதையும் பெறத் தேவையில்லை. தனித்தனியாக அழைப்பாணை விடுக்கப்பட்டிருப்பதால் முன்னிலைப்படுத்த எவரிடமும் அனுமதி பெறத் தேவையில்லை.

இந்த விடயம் தொடர்பில் எமது சட்டத்தரணிகளுடன் பேசி இன்னும் ஓரிரு நாள்களில் நாம் இறுதி முடிவு எடுப்போம் - என்றார். (சி)

தெரிவுக்குழு பிழையானது என தீர்ப்பளித்து அதை இரத்துச் செய்யுமாறு தீர்ப்பொன்றைப் பெற்று தொடர்ந்தும் பதவியிலிருக்கவே வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இவ்வாறான கருத்துக்களை தெரிவிப்பதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்துவிட்டேன் என எனக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், நாட்டு மக்களைத் தவிர நான் வேறு யாருக்கும் அச்சப்பட வேண்டியதில்லை. தெரிவுக்குழுவில் நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஏன் எவரும் கதைப்பதில்லை - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத மீன்பிடி; வலைகள் சிக்கின



எருவில்,டிசெ.25

மட்டக்களப்பு, ஏறாவூர், சொறுவாமுனை வாவியிலிருந்து சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான சட்ட விரோத மீன்பிடி வலைகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சட்டவிரோத மீன்பிடி வலைகள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படும் என்று மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் ஏ.ஏ.பரீட் தெரிவித்தார்.

சட்டவிரோத மீன்பிடி வலைகளைப் பாவித்து ஏறாவூர் வாவியில் மீன்பிடிக்கும் நடவடிக்கை நீண்டகாலமாக இடம்பெறுவதை அறிந்தே இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது என்று அவர் கூறினார்.

இந்தச் சட்டவிரோத மீன்பிடி வலைகள் கைப்பற்றப்பட்டுள்ளபோதிலும், வலையின் உரிமையாளர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார். (ச-31)

### அதிகளவு நிதியை கையாண்டு நிவாரணம் வழங்க

# அபிவிருத்திச் சங்கங்களுக்கு விசேட அனுமதியை வழங்குக

### கிழக்கு முதல்வரிடம் கோருகிறார் சுபைர்





அம்பாறை,டிசெ.25

*கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள மழை, வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கு ஏதுவாக கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அதிகளவு சங்க நிதிகளைக் கையாள்வதற்கு விசேட அனுமதியை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணசபை பிரதித் தலைவர் எம்.எஸ்.சுபைர், கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத்திடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.*

கிழக்கு மாகாணத்தில் தொடர் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாகப் பல்வேறு பிரதேசங்களிலும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ள இடரால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு, நிவாரண உதவிகளை நம்பியிருக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளன.

குறிப்பாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகள், குடிதண்ணீர் சுகாதார வசதிகளை ஏற்படுத்த இந்தச் சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று சுபைர் முதலமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

**கிராம அபிவிருத்திச் சங்கங்கள் சங்க நிதியிலிருந்து ஐயாயிரம் ரூபாவை மட்டுமே பெற முடியுமென்ற நியதியிருப்பதால் நிவாரண நடவடிக்கைகளுக்கு அதிகளவு நிதியைப் பெறமுடியாத நிலை உள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.**

**இந்த நிலையில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெள்ள இடர் பாதிப்பை கவனத்தில்** கொண்டு, நிதிவளமுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களின் நிவாரண உதவிகளை மக்கள் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

எனவே நிதிவளமுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மக்களுக்கு உதவும் வண்ணம், தேவையான கூடிய நிதியைச் சங்கத்திலிருந்து பெற்று நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு விசேட அனுமதி வழங்க வேண்டும் என்று அவர் முதலமைச்சரைக் கோரியுள்ளார்.

கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்குக் குறித்த விசேட அனுமதியை கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு வழங்குமாறு பணிப்புரை விடுத்து உதவுமாறும் அவர் வேண்டியுள்ளார். (ச-30)



நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணி கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்டார்.

## கிண்ணியாவில் ஆணின் சடலம் மீட்பு

**திருகோணமலை, கிண்ணியாவில் உருக்குலைந்த நிலையில் ஆணொருவரின் சடலத்தை பொலிஸார் நேற்று திங்கட்கிழமை காலை மீட்டுள்ளனர். கிண்ணியா, மயிலப் பின்சேனை பகுதியிலேயே இந்தச் சடலத்தை கிண்ணியா பொலிஸார் மீட்டுள்ளனர். இந்தச் சடலம் தம்பல காமம், பட்டிமேட்டையைச் சேர்ந்த கோணமலை சகா தேவன் என்பவரது சடலமாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.**

**இவர் கிண்ணியா, கண்டல்காடு பகுதியில் மாடுகளை பார்வையிட்டுவிட்டு திரும்புகையில் மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று உறவினர்கள் தெரிவித்தனர். (ச)**

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட்டார் விவசாய அமைச்சர்



மட்டக்களப்பு,டிசெ.25

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைக் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் பார்வையிட்டார்.

திருகோணமலையிலிருந்து மட்டக்களப்புக்கு சென்ற அமைச்சர், படையினரின் உதவியுடன் வெள்ளத்தை கடந்து சென்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மக்களைப் பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்துக் கொடுப்பதற்கான நடவடிக்கையையும் அமைச்சர் மேற்கொண்டுள்ளார். (ச)

# 2013 இல் கல்முனைக்கு அதிகளவில் அபிவிருத்தி

### ஹரீஸ் எம்.பி. சொல்கிறார்

அம்பாறை,டிசெ.25

அடுத்த ஆண்டிலிருந்து கல்முனை மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் அதிக அபிவிருத்தியைக் காணும் என்று திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனை பிரதேசத்தின் அபிவிருத்தி சம்பந்தமாக பொதுமக்களிடையே எழுந்துள்ள கருத்து வேறுபாடுகளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும்போது கல்முனை பிரதேசம் அபிவிருத்தியில் பின்தங்கியுள்ளமைக்கு அண்மைக்கால அரசியல் மாற்றங்களே பிரதான காரணமாக உள்ளது.

எவ்வளவுதான் அபிவிருத்திப் பணிகள் கல்முனையில் முன்னெடுத்துச் செல்லப்பட்டபோதிலும், அவை மக்கள் மத்தியில் எடுத்துக் கூறப்படவில்லை. அதனால் பொதுமக்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் தற்போது நிலவி வருகின்றது.

கல்முனை பிரதேசத்தில் உள்ள மக்களின் எதிர்பார்ப்புகள் காத்தான்குடியில் இருப்பது போன்று பிரதான வீதியில் மரங்கள் நடப்படுவதனையே அபிவிருத்தி என்று எண்ணுகின்றனர். அதற்கு கல்முனை பிரதேசத்திலுள்ள துறைசார் உத்தியோகத்தர்களும், வர்த்தகர்களும் தமது பூரண ஒத்துழைப்பை எதிர்காலத்தில் வழங்க வேண்டும்.

அரசியல் ரீதியில் கல்முனை பிரதேசம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செல்வாக்கில் இருப்பதால் அரசுடன் இணைந்து செயல்படுவதில் கடந்த காலங்களில் பல சிக்கல்கள் தோன்றியிருந்தன.

அதனால் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத் [illegible] கடி தடைகள் ஏற்பட்டிருந்தது.

**இப்போதுள்ள சூழ்நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசின் பங்காளிக் கட்சியாக உள்ளமையினால் எதிர்காலத்தில் கல்முனை மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல பிரதேசங்களும் அபிவிருத்தியடையவுள்ளன.**

**பொதுமக்களின் அபிப்பிராயம் பெறப்படாத எந்தவொரு திட்டமும் வெற்றியளிக்கவில்லை.**

**எனவே கல்முனை பிரதேச எதிர்கால திட்டங்கள் அனைத்தும் துறைசார் அதிகாரிகளிடமும் பொது மக்களின் அபிப்பிராயத்துடனும் முன்னெடுத்துச் செல்லப்படும் - என்றார்.** (ச)

### அம்பாறை மாவட்ட நில அதிர்வுகள்:

# மலைக்கு வெடிவைத்து அதிகாரிகள் பரீட்சிப்பு

அம்பாறை,டிசெ.25

அம்பாறை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் உணரப்பட்ட நில அதிர்வின் காரணத்தைக் கண்டறியும் நோக்கில் கல் மலையொன்று வெடிவைத்து உடைக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டது. எனினும் அதன் சத்தம் பூகம்பப் பதிவு நிலையங்களில் பதிவாகவில்லை என்று புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் என்.பி. விஜயானந்த நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மழைக்காலம் ஆரம்பமான பின்னர் எந்தவொரு நில அதிர்வும் பதிவாகவில்லை.

கடந்த நவம்பர் மாதம் 24 ஆம் திகதி முதல் அம்பாறை மாவட்டத்தின் ஆறு கிராமங்களில் அவ்வப்போது நில அதிர்வுகள் உணரப்பட்டன. அந்த அதிர்வுகள் யாவும் பல்லேகலவிலுள்ள நில அதிர்வுப் பதிவு மையத்தில் பதிவாகி இருக்கின்றன. அதன் பின்னர் எதுவித அதிர்வும் உணரப் படவில்லை. இந்த அதிர்வுகள் இயற்கையானவையா? அல்லது மனித செயற்பாடுகளின் விளைவானவையா? என்பதைக் கண்டறிவதற்கான ஆய்வுகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம்.-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர் அஞ்சலி

எமது ஆலய பரிபாலனசபை
உப தலைவர்
சி.முத்துக்குமாரசுவாமி அவர்களின் அன்பு மாமன்


## முத்தையா இரத்தினசாபாதி

அவர்கள் சிவபதமடைந்த செய்தி எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோண்டாவில் மேற்கு,
கந்தர்வளவு ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோயில். (காளிகோயில்) - பரிபாலனசபை.


(27178) (2.6)

# பதவி வெற்றிடம்



1. லேத் ஒப்றேற்றர் (Lathe man)
2. மில்லிங் ஒப்றேற்றர் (Miller)
3. Ac/Fridge ரெக்னீசியன் (Air conditioner)

ஆகிய வேலைகளுக்கு 2 வருட அனுபவம் உள்ளவர்கள் 26,27.12.2012 - 09.00Am - 12.00Pm நேரில்வரவும் சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.





முகாமையாளர்.
லக்ஸ்மி இஞ்சினியரிங்
105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

T.P:- 021 567 0256




15.12.2012 அன்று கொழும்பு ஜோன்.டீ.சில்வா நினைவு மண்டபத்தில் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சினால் 28ஆவது வருடாந்த அரச விருது வழங்கும் விழாவில்

*வாத்தியத்துறைக்கான கலாபூசண விருதினை*

யாழில் தவில் மற்றும் மிருதங்க உற்பத்தியில் தனித்தன்மையுடன் மிளிரும் எமது தந்தையாகிய **ஆறு. சின்னத்தம்பி தில்லைநாதன்** அவர்களை மேலும் பட்டங்கள் பெற்றும்,நீடூழி வாழவும் நல்லூர்க் கந்தனைப் பிரார்த்தித்து அகமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

**தரன் மரக்காலை & சிற்பாலயம்**
**நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு.**

**பிள்ளைகள்.**

# After O/Level's

## Join Sri Lanka's # 1

**DiTEC INTERNATIONAL**
Diploma in Information Technology

**சிறப்பம்சங்கள்** — **காலம் 4 மாதங்கள்**

* இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட Malaysia இல் அச்சிடப்பட்ட சான்றிதழ்.
* சர்வதேசத்தினால் (Edexcel-UK) வழங்கப்படும் மேலதிக சான்றிதழ்.
* BCS-UK இனால் வழங்கப்படும் Transcript
* பட்டப்படிப்பிற்கான முதல் ஆண்டிற்கு சமனான கற்கைநெறி (B.Sc 1st Year)
* தரமான ஆசிரியர் குழாம் மற்றும் அதிக Practical வகுப்புக்கள்
* IT கற்கைநெறி கற்பவர்களுக்கு Diploma in English இல் 20% கட்டணச்சலுகை

**NEW BATCHES**

@ 9.00 am & 2.00 pm

2nd Jan 2013
5th Jan 2013
7th Jan 2013

HOTLINE 077 309 9 308

**ESOFT Metro Campus - Jaffna**
137, K.K.S Road, Jaffna. Tel : 021 222 4142
Email:jaffna@esoft.lk web: www.esoft.lk

இலங்கை அரசாலும் UK, USA, Australian மற்றும் European நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்ட உடனடித் தொழிலொன்றைப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கும்

**DiCA**
Diploma in Computerized Accounting

முற்றிலும் இலவசம், எவ்வித கட்டணங்களும் கிடையாது. இவ் அரிய வாய்ப்பு எம்மிடம் மட்டுமே....!!!

* MYOB
* ACCPAC
* Peachtree
* Quick Books
* SAGE
* Tally

காலம் 4 மாதங்கள்



ESOFT
The Leader in Professional ICT Education
Trusted IT Partner

## Other Diplomas

- DiWE — Diploma in Web Engineering — காலம் 6 மாதங்கள்
- DiBM — Diploma in Business Management — காலம் 4 மாதங்கள்
- DiSE — Diploma in Software Engineering — காலம் 6 மாதங்கள்
- DiE — Diploma in English — காலம் 4 மாதங்கள்
- DiHN — Diploma in Hardware & Networking — காலம் 4 மாதங்கள்
- DiGD — Diploma in Graphic Designing — காலம் 4 மாதங்கள்

இம் மாத பதிவுகளுக்கு எங்களுடன் இணைந்து T-SHIRT ஒன்றினை FREE இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்

ESOFT
The Leader in Professional ICT Education

| Jaffna 2nd Branch | Kilinochchi | Nelliady |
|---|---|---|
| 17/1, Brown Road | 01, Kanagapuram Rd, | 151, Jaffna Road |
| 021 222 0345 | 021 228 5444 | 021 226 4940 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# நாட்டை இருளுக்குள் தள்ளும் அபாயம் அரும்ப அனுமதிப்பதா?

நீதித்துறைக்கும் சட்டவாக்கத்துக்கும் இடையிலான பிரச்சினை இன்று தீர்வு ஏதுமின்றி மிகவும் மோசமான கட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. ஜனநாயக ஆட்சியின் இரண்டு பிரதான அலகுகள் தமக்கிடையே மோதிக்கொள்ளும் நிலையை உருவாக்கி உள்ளது. அது நாட்டின் எதிர்காலத்தை இருளடைந்த நிலைக்குத் தள்ளும் அபாயத்தைத் தோற்றுவித்துள்ளது.

பிரதம நீதியரசரை விசாரணை செய்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கும், சபாநாயகருக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ள நிலையில், எதிர்வரும் எட்டாம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது நாடாளுமன்றத்தின் அதிகாரம் மற்றும் நியாயாதிக்கம் குறித்து அதிவிசேட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பொன்றை சபாநாயகர் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உயர்நீதிமன்றம் தனக்கும், பிரதம நீதியரசரை விசாரணை செய்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கும் விடுத்துள்ள அறிவித்தலை நிராகரிப்பதாக மாத முற்பகுதியில் சபாநாயகரால் நாடாளுமன்றத்தில் தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டிருந்தது. இதேபோன்ற பிரச்சினைகளில் எதிர்வரும் காலங்களிலும் இத்தீர்ப்பு பொருந்தும் என்று சபாநாயகர் அப்போது தெரிவித்திருந்தார்.

ஆகவே, சபாநாயகரோ, தெரிவுக்குழு உறுப்பினர்களோ மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அழைப்பாணையை ஏற்கப்போவதில்லை என்பது தெளிவாகிவிட்டது. அதற்கான முன்னோட்டமாக, தெரிவுக்குழு உறுப்பினர்களில் ஒருவரான ராஜித சேனாரத்ன, நீதிமன்றத்தின் அழைப்பாணை சபாநாயகரையோ, தெரிவுக்குழு உறுப்பினர்களையோ கட்டுப்படுத்தாது என்று கருத்து வெளியிட்டிருக்கிறார்.

மேலும் தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் முடிவடைந்துவிட்டதால் அது தற்பொழுது இயங்குவதில்லை. அதனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அழைப்பாணை தெரிவுக் குழுவைக் கட்டுப்படுத்தாது என்கிறார் அவர். இத்தகைய இழுபறிகளுக்கு மத்தியிலேயே சபாநாயகரின் அதி முக்கியத்துவம் வாய்ந்த விசேட அறிவிப்பு நாடாளுமன்றத்தில் வெளியிடப்படவுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை மீதான விவாதம் ஜனவரி 15ஆம், 16ஆம் திகதிகளில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் இன்றைய நிலையில், முரண்பாடுகள் மேன்மேலும் அதிகரிக்கும் சூழ்நிலையே காணப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற நீதிச்சேவை அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றிய ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், வெளிமட்டச் சுதந்திரத்துக்காக நீதித்துறை தற்பொழுது முன்னெடுத்து வரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு தெரிவித்துள்ளார். இப்போராட்டத்தை நீதித்துறைக்காக மட்டும் அல்ல, ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்காகவும் தொடர்வது அவசியம் என்று அவர் வலியுறுத்தி உள்ளார். ஆகவே விட்டுக்கொடுப்புக்கு இனி இடம் இல்லை என்ற நிலை வெளிப்படையாகியுள்ளது.

பிரதம நீதியரசரைப் பதவிநீக்கம் செய்து அவருக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்பதில் அமைச்சர்கள் சிலர் பிடிவாதமாக இருக்கின்றனர். நீதித்துறையின் சுதந்திரத்துக்காக இறுதிவரை போராடுவது என்று சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துவிட்டது. சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷவின் வீட்டின் மீது சில தினங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு காரணமாக இப்பிரச்சினையில் சட்டத்தரணிகள் சங்கத்தின் போக்கு மேலும் இறுக்கமாகிவிட்டது.

இத்தகைய நிலையில் அரசில் உள்ள அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் தெரிவித்துள்ள யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படுமானால், நெருக்கடி தணிவதற்கான வாய்ப்புகள் உண்டெனப் பரவலாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கொள்கை உடைய அமைச்சர்களான திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் நாடாளுமன்றின் கூட்டத்தொடரை ஒத்திவைக்குமாறு ஜனாதிபதியிடம் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர். சிரேஷ்ட அமைச்சரும் முன்னாள் பிரதமருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க, நாட்டின் எதிர்காலம் கருதி இரு தரப்பினரும் ஒவ்வொரு அடி பின்னால் வைக்கவேண்டும் என்று புத்திமதி கூறியுள்ளார். வீதிகள், பாலங்கள் அமைப்பது நாட்டின் அபிவிருத்தியில் ஒரு பகுதி. ஆனால் அவற்றைவிட முக்கியமானது இந்த நாட்டு மக்கள் மதிப்புடன் வாழக்கூடிய சமூகம் ஒன்றை உருவாக்குவதே என்றும் அவர் அறிவுறுத்தி உள்ளார். இரு தரப்பினரும் ஒவ்வொரு அடி பின்வாங்கவேண்டும் என்பது இரு தரப்பினரும் விட்டுக்கொடுக்கவேண்டும் என்பதனையே அர்த்தப்படுத்துகிறது.

நீதித்துறைக்கும் சட்டவாக்கத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையிலான போட்டியில் நாடு மிகவும் மோசமான நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டிருப்பதை அரசில் அங்கம் வகிக்கும் இந்த நான்கு சிரேஷ்ட அமைச்சர்களும் உணர்ந்துகொண்டிருக்கும்போது, ஏனையோர் அதுகுறித்துக் கண்டுகொள்ளாமல் இருப்பது இந்த நாட்டுக்கு ஒரு சாபக்கேடாகும்.

மொத்தத்தில் நீதித்துறைக்கும் சட்டவாக்கத்துக்கும் இடையேயான தற்போதைய மோதலின் முடிவு எவ்வாறு அமையப்போகிறது என்ற கேள்வி இன்று நாட்டு மக்களைக் குழப்பத்தில் மூழ்கச் செய்துள்ளது என்பதே யதார்த்தம்.

# அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களிடம் உங்கள் பணத்தை வைப்பிலிடுங்கள்

## மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.25

மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய நிதி நிறுவனங்களிடம் உங்கள் பணத்தை இழந்து விடாதீர்கள்.

தற்போது நாட்டின் பல பாகங்களிலும் ''உங்களுக்கு அதிர்ஷ்ட சீட்டிழுப்புகளில் பெருந்தொகைப் பணம் கிடைத்துள்ளது. நீங்கள் ஒரு தொகைப் பணத்தை அனுப்பி வைத்தால் உங்களுக்கான பணம் வந்து சேரும்'' எனக் கூறி மோசடி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

படித்த உயர்ந்த பதவிகளில் இருப்பவர்கள் கூட இப்படியான மோசடிகளுக்குள் சிக்கிக் கொள்கிறார்கள். எனவே அவதானத்துடன் இருங்கள்.

இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர் இவ்வாறு தெரிவித்தார்.

வங்கியியல் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். தென்னிந்திய திருச்சபை பேராயர் அதிவண.டானியல் எஸ்.தியாகராசா தலைமையில் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கவனயீனம் காரணமாகவே பெரும் இழப்புகளை நீங்கள் சந்திக்கும் நிலைமைகள் உள்ளன.

கொஞ்சம் அவதானமாகச் செயற்பட்டால் இழப்புகளைக் குறைக்க முடியும்.-என்றார். (ம-7)

## உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில்

# வடக்கு காடுகள், கடல் வளத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 25

வடமாகாணத்தில் உள்ள காடுகள் மற்றும் கடல் வளங்களை உல்லாசப் பயணிகள் பயன்படுத்தும் விதத்தில் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் மேற்கொள்ளவுள்ளது.

உல்லாசப் பயணிகள் தமது சுற்றுலாப் பயணத்தை கழிப்பதற்கான பிரசித்தமான இடங்கள் வடமாகாணத்தில் அதிகம் உள்ள போதும், அவை உரிய முறையில் அபிவிருத்தி செய்யப்படாது உள்ளன. இதனால் பிரசித்தமான ஆலயங்கள், நகர்ப்புறங்கள் போன்றவற்றையே உல்லாசப் பயணிகள் அதிகம் பயன்படுத்துகின்றனர்.

இதன் காரணமாக வடமாகாணத்தில் பல்வேறு இடங்கள் உல்லாசப் பயணிகளைக் கவரக் கூடிய விதத்தில் இல்லாமல் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

குறிப்பாக வடமாகாணத்தின் சொத்துக்கள் எனக் கருதப்படும் காட்டுவளம், கடல்வளம் அதிகமாக உள்ள போதும், அவை தொழிலுக்காக மட்டுமே பயன்படுத்தப் படுகின்றன. இதனால் வன்னிப் பிரதேசத்தில் உள்ள காட்டு வளங்கள் மற்றும் தீவகப் பகுதிகளில் உள்ள கடல்வளங்கள் போன்றவற்றை உல்லாசப் பயணிகள் பயன்படுத்தும் விதத்தில் அபிவிருத்தி செய்ய வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாடுகளில் காடுகளில் நடைபயணத்தை மேற்கொள்ளும் சுற்றுலாத்துறையினர் அதிகம். அதன் மூலம் அதிகளவான வருமானங்களையும் பெற்று வருகின்றனர்.

அதனைப் போன்று எமது பிரதேச வளங்கள் அரிய சொத்துக்களாக உள்ள போதும் அதனைத் தகுந்த முறையில் அபிவிருத்தி செய்து அதன் மூலம் வருமானம் பெற்றுக் கொள்ளக்கூடிய வழி காட்டல் எமது பிரதேசத்தில் இல்லை.

இந்த நிலையில் வடமாகாணத்தின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய உரிய முதலீட்டாளர்கள் கை கொடுத்தால் வெகு விரைவில் காடு மற்றும் கடல் வளங்களை உல்லாசப் பயணிகள் பயன்படுத்துவதற்கும், தங்கியிருந்து சுற்றுலாப் பயணத்தைக் கழிப்பதற்குமான வழிகளை வடமாகாண சுற்றுலாத் துறை ஒன்றியம் மேற்கொள்ளும் என்று கூறப்பட்டது. (ம-14)

# அதிபர் சேவை தரம் ஒன்றுக்கு தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

அதிபர் சேவைத்தரம் 2-1 இல் நீண்டகாலம் கடமையாற்றி அதிபர் சேவைத்தரம் I வழங்கப்படாமல் உள்ள அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்குத் தகுதியானவர்கள் அடுத்த ஆண்டு ஜனவரி 14 ஆம்திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதிபர் சேவைத்தரம் 2-1 இல் இருக்கும் பலருக்கு நீண்டகாலமாக பதவியுயர்வு வழங்கப்படாமல் இருப்பதை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், கல்வி அமைச்சிடம் சுட்டிக் காட்டியது. அதனை ஏற்றுக் கொண்ட கல்வி அமைச்சு உடனடி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இந்தப் பதவியுயர்வுக்குப் பொருத்தமானவர்கள் குறித்த காலத்துக்குள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலதிக விவரங்களை அறிய விரும்புவோர் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் அல்லது தலைவருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-5)

# இருமுடி கட்டும் நிகழ்வுக்கு யானைப் பவனி நாளை

யாழ்ப்பாணம், டிசெ.25

கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயத்தில் நடைபெற்றுவரும் மண்டல பூசைத் தொடரில் நாளை புதன்கிழமை காலையில் சுவாமிமாருக்கு இருமுடிகட்டும் வைபவம் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஐயப்பன் யானைமீது ஆலயத்துக்குப் பலாலி வீதி வழியாகப் பவனி செல்வார். இருமுடி கட்டிய சுவாமிமார்களும் ஐயப்பனைத் தொடர்ந்து நடைபவனி செல்வர்.

அந்த நிகழ்வை ஒட்டி நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் அன்னதானம் நடைபெறும். இன்று செவ்வாய்க்கிழமை ஐயப்பன் ஆலயத்தில் பக்தர்கள் யானையைத் தரிசனம் செய்யலாம் என்று ஆலய அறங்காவலர் பிரம்மஸ்ரீ அரிஹரசுதன் சாமி தெரிவித்தார்.

# வடக்கு, கிழக்கில் 9 மாவட்டங்களில் மாற்றுவலுவுள்ளோருக்கு பயிற்சிகள்

## சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 25

வடக்கு, கிழக்கு உட்பட 9 மாவட்டங்களில் மாற்று வலுவுள்ளோருக்கு அடுத்த ஆண்டு விசேட தொழிற்பயிற்சி வழங்கி அவர்கள் வருமானத்தை ஈட்டும் வகையில் செயற் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்காக இலங்கை அரசும், உலக வங்கியும் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளன. அத்துடன் இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுக்கும் வகையில் அனுமதியும் கிடைத்துள்ளது.

இவ்வாறு சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் மாற்று வலுவுள்ளோருக்கு தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனை அடுத்த ஆண்டு வடக்கு, கிழக்கிலும் விஸ்தரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாற்று வலுவுள்ளோருக்கு தொடர்ச்சியாக தொழிற்பயிற்சிகள் வழங்குவதற்காக உலக வங்கியின் நிதியும், இலங்கை அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் சமூக சேவைகள் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியும் பயன்படுத்தப் படவுள்ளன.

வடக்கு, கிழக்கு உட்பட 9 மாவட்டங்களில் முன்னெடுக்கப் படவுள்ள இந்தச் செயற்திட்டத்துக்கு அனுமதியும் கிடைக்கப் பெற்றுள்ளது.

மாற்றுவலுவுள்ளோருக்கான இந்த தொழிற்பயிற்சி அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தின் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மாற்றுவலுவுள்ளோருக்கு அவர்களது இயலுமைக்குரிய வகையில் தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்கள் தொழில் ஆரம்பிப்பதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்படும்.-என்றார். (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுகதி வேகத்தில் பஸ்கள்; பயணிகளோ திண்டாட்டம்

## பரந்தன் – முல்லை வீதியில்

பரந்தனில் இருந்து புதுக்குடியிருப்புச் சந்தி வரை வீதி செப்பனிடப்பட்டுள்ளதால் கடுகதியில் பஸ்கள் செல்கின்றன.

புதுக்குடியிருப்பு, டிசெ.25

முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்கள் பந்தையக் குதிரை ஓடுவதுபோல் போட்டிபோட்டு ஓடுகின்றன. இதனால் தாம் பஸ்ஸில் ஏற பலதடவைகள் யோசிக்க வேண்டியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பரந்தன் - புதுக்குடியிருப்பு ஊடான முல்லைத்தீவுக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பருத்தித்துறை, கொழும்பு, வவுனியா மற்றும் விசுவமடு ஆகிய பகுதிகளிலிருந்து தனியார் மற்றும் அரச பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில் பஸ்கள் அனைத்தும் சிறிதுநேர வித்தியாசங்களில் சேவையில் ஈடுபடுவதால் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டு ஓடுகின்றன.

அரச , தனியார் பஸ்களே இவ்வாறு போட்டி போடுகின்றன.

பரந்தனில் இருந்து புதுக்குடியிருப்புச் சந்தி வரை வீதி செப்பனிடப்பட்டுள்ளதால் கடுகதியில் பஸ்கள் செல்கின்றன. இதனால் அந்த வீதியில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் பயணிகளைக் கூட கவனிப்பதில்லை. இதனால் தூர இடங்களுக்குச் செல்லவேண்டிய பலர் கால் கடுக்க பலமணி நேரம் அடுத்த பஸ்ஸுக்காகக் காவல் நிற்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

இதேவேளை இந்தப் பஸ்களில் பயணம் செய்யும் பலர் உயிரைக் கையில் பிடித்த வண்ணமே பயணிக்க வேண்டி உள்ளதாகத் தெரிவிக்கின்றனர். (ஐ-400)

# பூநகரிக் கோட்டப் பாடசாலைகளில் 31 வகையான அபிவிருத்திப் பணிகள்

கிளிநொச்சி, டிசெ.25

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பூநகரி கல்விக் கோட்டத்தில் இயங்கி வரும் 23 பாடசாலைகளிலும் 31 அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பல்வேறு நிதிநிறுவனங்களின் உதவியுடன், பல்வேறு வகையான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டில் மேற்படி 23 பாடசாலைகளிலும் ஆசிரியர் விடுதிகள் அமைத்தல், குடிதண்ணீர் விநியோகத் திட்டங்களை அபிவிருத்தி செய்தல், சிறுவர் விளையாட்டு முற்றங்களை அமைத்தல். சுற்றுமதில் அமைத்தல் போன்ற 31 வகையான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் 26 வரையான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தற்போது நிறைவு பெற்றுள்ளன. இதில் குடிதண்ணீர் விநியோகத் திட்டங்கள் தொடர்பாக 17 வேலைத் திட்டங்களில் 8 வேலைத்திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன என கடந்த 13 ஆம் திகதி பூநகரிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## முல்லைத்தீவு மாவட்டத்தின்

# நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் கோருகின்றனர் இடமாற்றம்

முல்லைத்தீவு, டிசெ, 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களாகப் பணிபுரியும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தோர், வருடாந்த இடமாற்றத்தின்போது தாம் புறக்கணிக்கப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

2005 ஆம் ஆண்டு நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட வெளி மாவட்டங்களைச் சேர்ந்த 10 பேர் முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் தமது சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெறுவதற்கு விண்ணப்பித்த போதும் தமது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றிய பலரது இடமாற்றம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்ட போதும், -

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நாள் முதல் கடமையாற்றியவர்களுக்கு இடமாற்றம் தர மறுப்பது அநீதியானது என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

தாம் தங்கி நிற்பதற்கு உரிய விடுதி வசதிகளோ, உணவு வசதிகளோ இல்லாத சூழ்நிலையில் பெருமளவு பணத்தைப் போக்குவரத்துக்கும், உணவுக்கும் செலவு செய்து தினமும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது நிலையைக் கருத்தில் கொண்டு தமக்குரிய இடமாற்றத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-400)

## நத்தார் தினத்தையொட்டி 650 குடும்பங்களுக்கு உதவி

கிளிநொச்சி, டிசெ. 25

கிளிநொச்சி பூநகரியில் நிலை கொண்டுள்ள 662 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் நத்தார் தினத்தையொட்டி 650 குடும்பங்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பரந்தன், பூநகரி, உருத்திரபுரம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சுமார் 650 வரையான கிறிஸ்தவக் குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்கள் கடந்த 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வழங்கப்பட்டுள்ளன. (த-6)

# ஆசிரியருக்கான புதிய விடுதி தொடர்ந்து மூடப்பட்ட நிலையில்

## திறந்து வைக்கத் தயக்கம் ஏன்?

கிளிநொச்சி, டிசெ. 25

கிளிநொச்சி, அக்கராயன் மகாவித்தியாலயத்தில் சுமார் பன்னிரண்டு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட ஆசிரியர் விடுதி பயன்படுத்தப்படாமல் பூட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

அக்கராயன் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பித்துவரும் வெளி மாவட்டங்களையும் தூர இடங்களையும் சேர்ந்த ஆசிரியர்கள் தங்கக்கூடிய வகையில் இந்த விடுதி அமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

ஆனால் இந்த விடுதி, பயன்படுத்தப்படாமல் பூட்டப்பட்ட நிலையில் காணப்படுவதுடன் பற்றைச் செடிகள் வளர்ந்தும் காணப்படுகின்றது. (ஐ-6)

# கண்டாவளைப் பிரதேசத்தில் கழிவு வாய்க்கால் புனரமைப்பு

## உணவுக்கான வேலைத்திட்டத்தின் கீழ்

கிளிநொச்சி, டிசெ. 25

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேசத்தில் சுமார் பத்துக் கிலோ மீற்றர் நீளமான கழிவு வாய்க்கால் 'உணவுக்கான வேலைத் திட்டத்தின் கீழ்' புனரமைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள கழிவு நீர் வாய்க்கால்கள் புனரமைக்கப்படாமல் காணப்பட்டமையால் வெள்ள நீர் தேங்கிக் காணப்பட்டது. இந்த நிலையிலேயே இந்தக் கழிவு வாய்க்கால் உணவுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ளது.

2 கிலோ மீற்றர் நீளமான தருமபுரம் 13 ஆம் யுனிற் கழிவு வாய்க்கால் 2,341 மனித நாள்களிலும், ஊரியான் உடுப்புக்கண்டலில் 2.5 கிலோ மீற்றர் நீளமான கழிவு நீர் வாய்க்கால் 2,635 மனித நாள்களிலும், தருமபுரம் மேற்கு, 4ஆம் யுனிற் கழிவு வாய்க்கால் 1,747 மனித நாள்களிலும், புன்னை நீராவி நாதன் குடியிருப்புப் பகுதியில் உள்ள கழிவு வாய்க்கால் 2,012 மனித நாள்களிலும், கல்மடு ரங்கன் குடியிருப்பில் உள்ள கழிவு வாய்க்கால் 2,197 மனித நாள்களிலுமாக பத்துக் கிலோ மீற்றர் நீளமான கழிவு வாய்க்கால்கள் 10ஆயிரத்து 932 மனித நாள்களில் புனரமைக்கப்பட்டுள்ளன. (ஐ-6)

# குடிதண்ணீர் தாங்கி விஷமிகளால் சேதம்

புதுக்குடியிருப்பு, டிசெ.25

ஆனந்தபுரம் கிராமசேவகர் பிரிவில் குடிதண்ணீர் வழங்குவதற்கென வைக்கப்பட்டிருந்த நீர்த்தாங்கி,விஷமிகளால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

ஆனந்தபுரம் பகுதியில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் மக்களுக்காகப் பிரதேச சபையால் 10 நீர்த்தாங்கிகள் அந்தப் பகுதிகளில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றே விஷமிகளால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

சுமார் ஆயிரம் லீற்றர் நீர் கொள்ளளவையுடைய இந்தத் தாங்கி பயன்படுத்த முடியாத அளவுக்குச் சேதமாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகப் புதுக்குடியிருப்புப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தவேளை கைவேலிப் பகுதியிலும் இவ்வாறு நீர்த்தாங்கி ஒன்று அண்மையில் விஷமிகளால் சேதமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-400)

# பொதுநோக்கு மண்டபம் மக்களின் பாவனைக்கு

## இராணுவம் வழங்கியுள்ளது

கிளிநொச்சி, டிசெ. 25

பூநகரி, நல்லூர் பொதுநோக்கு மண்டபம் இராணுவத்தினரால் பொதுமக்களின் பயன்பாட்டுக்காகக் கிராம அலுவலரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பூநகரி, நல்லூர் பொதுநோக்கு மண்டபத்தை அந்தப் பகுதியில் உள்ள 662 ஆவது படைப்பிரிவு இராணுவத்தினர் நீண்டகாலமாக சிவில் பாதுகாப்பு அலுவலகமாகப் பயன்படுத்தி வந்தனர்.

இது குறித்து கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினால் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கு அந்தப் பகுதி இராணுவப் பொறுப்பதிகாரி குறித்த பொதுநோக்கு மண்டபத்தை உரியவர்களிடம் ஒப்படைப்பதாகக் கூறினார்.

அதன் பிரகாரம் குறித்த மண்டபத்தைத் தம்மிடம் இராணுவத்தினர் ஒப்படைத்துள்ளனர் என்று பூநகரி நல்லூர் கிராம அலுவலர் ஏ.பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ-6)

# கிளிநொச்சி, ஜெயபுரம் பகுதியில் சுற்றயல் கூறு மருத்துவமனை

## அடுத்த ஆண்டில் அமைக்கத் திட்டம்

அடுத்த ஆண்டு ஆரம்ப சுற்றயல் கூறு வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கிளிநொச்சி, டிசெ. 25

கிளிநொச்சி, ஜெயபுரம் பகுதியில் ஆரம்ப சுற்றயல் கூறு வைத்தியசாலை ஒன்று அடுத்த ஆண்டில் அமைக்கப்படவுள்ளதாக கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி ப.கார்த்திகேயன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, ஜெயபுரம் பகுதியில் உள்ள மக்கள் மருத்துவ வசதிகள் இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த மக்களின் மருத்துவ தேவைகளை நிறைவு செய்து தருமாறு பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

இந்த நிலையில் அடுத்த ஆண்டு ஆரம்ப சுற்றயல் கூறு வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை அந்தப் பகுதியில் மாதத்தில் இரண்டு தடவைகளாவது நடமாடும் சேவையொன்றையும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி ப.கார்த்திகேயன் தெரிவித்தார். (ஐ-6)



கடும் மழையை அடுத்து வவுனியா மாமடு குளத்தில் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. (த-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவில் சந்தேகமான முறையில் நடமாடியவர் மடக்கிப்பிடிப்பு

தென்மராட்சி, டிசெ.25

வரணி இடைக்குறிச்சிப் பகுதியில் இரவு வேளையில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய நபரை ஊர் மக்கள் திரண்டு மடக்கிப் பிடித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதை அவதானித்த ஊர் மக்கள் தொலைபேசி மூலம் தகவலைக் கொடுத்துச் சுற்றி வளைத்துப் பிடித்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸ் விசாரணையில் குறித்த நபர் பல திருட்டுச் சம்பவங்கள் தொடர்பான வழக்குகள் உள்ளன. இவர் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்தவர் என்று கூறப்பட்டது. (ம-9)



நத்தார் புதுவருட பண்டிகையை முன்னிட்டு குருநகர் சின்னக்கடைச் சந்தைப் பகுதியில் நடைபாதை வியாபாரம் நடைபெற்ற வேளையில்.... (ம-17-135)

# மீள்குடியமரும் மாதகல் மக்களுக்கு இந்திய வீட்டுத் திட்டம் மிகவும் அவசியம்

## முன்னுரிமை அடிப்படையில் வழங்குமாறு மானிப்பாய் பிரதேச சபை கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.25

இந்திய வீட்டுத் திட்டத்தில், இடம்பெயர்ந்து மீள் குடியமரும் மாதகல் கிழக்கு, மாதகல் மேற்கு, மாரீசன் கூடல் பிரதேச மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு வழங்கப் படுகின்ற முன்னுரிமையை விட இரட்டிப்பு முன்னுரிமை இந்தப் பிரதேச மக்களுக்கு வழங்க வேண்டும்.

மானிப்பாய் பிரதேச சபையின் உறுப்பினர் வெ.அன்ரன் ஜோன்சன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மிகவும் பாதிக்கப்பட்டு மீளக் குடியமரும் மாதகல் பிரதேச மக்களுக்கு வீட்டு வசதியளித்து உதவுங்கள் எனும் தலைப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசம் 28 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டது.

இந்தப் பிரதேசங்களில் கடந்த 20 வருடங்களுக்குப் பின்னர் பல தடைகளைத் தாண்டி மக்கள் மீளக்குடியமர தமது சொந்தப் பிரதேசங்களுக்கு வருகின்றனர்.

இவர்களுக்கு சண்டிலிப்பாய் பிரதே செயலர் க. முரளிதரன் பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகிறார். அதே வேளை, அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் உதவிகளை வழங்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

எனினும் வலி.தென்மேற்கில் உள்ள 28 கிராம அலுவலர் பிரிவுகளிலுமுள்ள ஏனைய பிரிவு மக்களை போல் அல்லாது மாதகல், மாரீசன் கூடல் பிரதேச மக்களுக்கு இந்தியன் வீட்டுத் திட்ட உதவியில் கூடுதல் புள்ளிகள் இட்டு அவர்களது பேண்தகு நிலையான வாழ்வுக்கு உதவ முன்வரவேண்டும்.

யாழ். செயலக வீடமைப்புத் திட்ட அதிகாரிகளும், ஐ.நா. உறைவிட திட்ட அதிகாரிகளும் இந்த விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறினார். (ம-50)

## சாவகச்சேரி பிரதேச சபை 'பட்ஜெட்'டும் ஏற்கப்பட்டது

தென்மராட்சி, டிசெ.25

சாவகச்சேரி பிரதேச சபையின் அடுத்த வருடத்துக்கான உத்தேச வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் உட்பட்ட பல்வேறு செயற்றிட்டங்கள் சபையில் இரு தினங்களாக விவாதிக்கப்பட்டு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சபையின் விசேட கூட்டத்தில் சபை உறுப்பினர்களின் முழுமையான ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்று பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா தெரிவித்தார். (ம-9)

## அடிக்கடி பழுதடைகின்றது மலக்கழிவு சுத்திகரிப்பு யந்திரம்

### தரவைப் பகுதிகளில் கொட்டும் நிலை

கொடிகாமம், டிசெ.25

சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் மலக்கழிவு சுத்திகரிப்பு நிலைய இயந்திரம், அடிக்கடி பழுதடைவதால் அதனைப் பயன்படுத்த முடியவில்லை என்று உள்ளூராட்சி சபையினால் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைகளால் அந்தந்த சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மலக்கழிவு இயந்திரத்தின் மூலம் தாங்கியில் சேகரிக்கப்படும் கழிவுகளை மிருசுவிலில் அமைக்கப்பட்ட சுத்திகரிப்பு நிலையத்திற்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

எனினும் அங்குள்ள இயந்திரம் அடிக்கடி பழுதடைவதால் வாகனங்களில் சேகரிக்கப்படும் கழிவுகளை நிலையத்துக்கு வழங்க முடியாதமையால் சன நடமாட்டமில்லாத தரவைப் பகுதிகளில் கொட்ட வேண்டிய நிலை ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச சபையினரால் கொடிகாமம் சந்தை மற்றும் பஸ் நிலையங்களில் வாகனத்தில் சேகரிக்கப்படும் கழிவுகள் கூட இந்த நிலையத்துக்கு வழங்க முடியாத நிலை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

**சுத்திகரிப்பு நிலையத்துக்கு விநியோகிக்க முடியாததால் உள்ளூராட்சி சபைகளில் பணம் செலுத்தியும் மல கூடங்களில் கழிவுகள் எடுக்கப்படாமல் உள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.**

சுத்திகரிப்பு நிலையத்துக்கு விநியோகிக்க முடியாததால் உள்ளூராட்சி சபைகளில் பணம் செலுத்தியும் மல கூடங்களில் கழிவுகள் எடுக்கப்படாமல் உள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இயந்திரம் அடிக்கடி பழுதடைவதால் புதிய இயந்திரம் பொருத்த பிரதேச சபையினரை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கேட்டுள்ளனர். (ம-9)

## புலோலி நூலகத்துக்கு கணினிகள்

தென்மராட்சி, டிசெ.25

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் புலோப்பளை பொது நூலக வாசகர் நலன்கருதி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கணினிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்தக் கணினிக்கூடம் சனிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவால் பொதுமக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

பிரதேச சபைத் தலைவர் பெ.டொ.அன்ரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் பெரும் எண்ணிக்கையில் பொதுமக்களும் வாசகர்களும் கலந்து கொண்டனர்.

கணினிகளுக்கு இணையத் தளவசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## ஆஸி.செல்லவேண்டாம் வடமராட்சியில் சுவரொட்டி

வடமராட்சி, டிசெ.25

ஆஸ்திரேலியாவுக்கு படகில் செல்லல், இதனால் எந்தப் பயனும் இல்லை என்ற ஆஸ்திரேலிய அரசின் அறிவிப்புக் கொண்ட சுவரொட்டிகள் வடமராட்சிப் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த அறிவிப்புகள் வாகனத்தில் ஒலிபெருக்கி மூலம் தமிழ் மொழியில் பல இடங்களிலும் அறிவிக்கப்பட்டு வருகிறது. (ம-8)



நத்தார் தினத்தையொட்டி பாலன் குடில் அலங்கரிப்புக்குப் பயன்படுத்தும் சவுக்கு மரக்கிளைகள் விற்பனை யாழ்.கரையோரக் கிராமங்களில் அமோகமாக நடைபெற்று வருகிறது. (ம-135)

## முதற்கட்டமாக 23 பயனாளிகளுக்கு ஊரத்தியில் காணி பங்கிடத் திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.25

வலி.மேற்கில் அராலி ஊரத்தியில் பிரதேச சபைக்குச் சொந்தமான காணிகளுக்கு 23 பயனாளிகள் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வார முதற்பகுதியில் காணிகள் பங்கீடு செய்யப்பட்டு அளவை அடிப்படையில் ஒதுக்கும் நடவடிக்கை இடம்பெறும்.

**காணிகளை அளவிட்டுப் பங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.**

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் இதற்காக முழுமையான நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

ஏற்கனவே இந்த வருடம் வழங்கப்படும் என்று கூறப்பட்ட போதும் அடுத்த வருட நடுப் பகுதியில் அராலி மக்களுக்கான காணிப் பங்கீடுகளுக்கான உறுதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

பெப்ரவரி மாதத்தில் சங்கானை மத்தி மக்களுக்கான காணிப் பங்கீட்டுடன் சேர்த்து மொத்தம் 72 குடும்பங்களுக்கு சுபீட்சமான நடவடிக்கையை சபைத் தலைவர் திரு.நா.ஐங்கரன் மற்றும் சபை உறுப்பினர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (ம-50)

## சாவகச்சேரி நகரப் பகுதியில் ஆதன புதிய வரி மதிப்பீடு

### புதிய ஆண்டில் நடைமுறைக்கு

தென்மராட்சி, டிசெ.25

சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட ஆதனங்களுக்கான புதிய வரி மதிப்பீடுகள் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத் தப்படவுள்ளன.

கடந்த 2009 ஆம் ஆண்டு மதிப்பீட்டு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆதன மீள் மதிப்பீடுகள் செவ்வை பார்க்கப்பட்டு நகரசபை உத்தியோகத்தர்களால் யாழ். விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தில் வைத்து தயாரிக்கப்பட்டு கொண்டு வரப்பட்டுள்ளன.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட அனைத்து ஆதனங்களுக்கான அறிவித்தல்கள் தயாரிக்கும் பணிகள் நகரசபை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருவதால் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் குடியிருப்பாளர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது எனவும் மதிப்பீடு தொடர்பாக பார்வையிட விரும்புபவர்கள் அலுவலக நேரத்தில் பார்வையிடம் எனவும் நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்துள்ளார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்கு அஞ்சலி



தமிழகத்தின் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் 25 ஆவது நினைவு தினம் நேற்று நினைவுகூரப்பட்டது. முதல்வர் ஜெயலலிதா, அமைச்சர்கள், பிரமுகர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சகிதம் அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள எம்.ஜி.ஆரின் நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்தினார்.

## வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு ஸ்ரீரங்கத்தில் சொர்க்கவாசல் திறப்பு



ஸ்ரீரங்கம், டிசெ.25

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு நேற்று ஸ்ரீ ரங்கம் ரங்கநாதர் ஆலயத்தில் நடைபெற்ற சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சியில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

மகாவிஷ்ணுவின் 108 திவ்ய தேசங்களில் முதன்மையானதாக போற்றப்படுவது ஸ்ரீ ரங்கம் ரங்கநாதர் ஆலயம். இங்கு ஆண்டுதோறும் மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசியன்று சொர்க்கவாசல் திறப்பு நிகழ்வு நடைபெறும். இதற்கான விழா கடந்த 13 ஆம் ஆரம்பமாகியது. முக்கிய நிகழ்வான சொர்க்கவாசல் திறப்பு நேற்று அதிகாலை 4.45 மணிக்கு நடை பெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் "கோவிந்தா, கோவிந்தா..." என்ற முழக்கத்துக்கு இடையே பரமபத வாசல் என அழைக்கப்படும் சொர்க்கவாசல் திறக்கப்பட்டது.

பக்தர்கள் வெள்ளத்தில் பெருமாள் பரமபத வாசலை கடந்து, திருக்கொட்டகையில் பிரவேசித்தார். மூலவர், முத்தங்கி அலங்காரத்தில் காட்சி தந்தார். பக்தர்களின் பாதுகாப்பு வசதிக்காக மத்திய மண்டலபொலிஸ் அதிகாரி அலக்ஸாண்டர் மோகன் தலைமையில், உயர் அதிகாரிகள் மற்றும் 4 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணிக்காகக் குவிக்கப்பட்டுள்ளனர். தற்போது பிரபலங்கள் அனுமதிச் சீட்டுகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. (வ)

# மீனவர் தாக்கப்படும் விவகாரம் அசண்டையாகத் தமிழக அரசு

### குற்றம்சாட்டுகிறார் இணையமைச்சர் நாராயணசாமி



சென்னை, டிசெ.25

இலங்கை மீனவர் அமைப்புகளுடன் தமிழக மீனவ அமைப்பினரைப் பேச வைப்பது தொடர்பாக தமிழக அரசுக்கு வெளியுறவுத் துறை அமைச்சகம் தகவல் தெரிவித்தும், தமிழக அரசிடம் இருந்து முறையான பதில் வரவில்லை என்று மத்திய இணையமைச்சர் நாராயணசாமி குற்றம்சாட்டி யுள்ளார்.

நேற்று முன்தினம் நண்பகல் விமானம் மூலம் அமைச்சர் நாராயணசாமி சென்னைக்கு வந்தார். அங்கு அவர் அளித்த பேட்டி யில் மேலும் தெரிவித்த தாவது:-

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தொடர்ந்து தாக்கப்பட்டு வருவது மிகவும் கவலையளிக்கும் விடயம். இந்த பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு விரும்புகிறது. எனவே, இதுகுறித்து இரு நாடுகளையும் சேர்ந்த மீனவ அமைப்புகள் சந்தித்து பேசினால் தீர்வு ஏற்படும். மத்திய வெளியுறவு துறை அமைச்சகம் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. தமிழக மீனவ அமைப்பினரை குறித்த பேச்சில் கலந்து கொள்ள வைப்பதற்காக தமிழக அரசிடம் மத்திய வெளி யுறவுத் துறை அமைச்சகம் முறைப்படி தகவல் தெரி வித்துள்ளது. ஆனால், தமிழக அரசிடம் இருந்து இதற்கு முறையான பதில் வரவில்லை.

எனவே குறித்த பேச்சு நடப்பதில் தாமதம் ஏற்படுகிறது. தமிழக அரசு மீனவர்களின் நலன் கருதி உடனடியாகப் பேச்சுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். காவிரி நடுவர் மன்ற உத்தரவை அரசு இதழில் வெளியிட வேண்டும் என்று தமிழக முதல்வரிடம் இருந்து வந்துள்ள கடிதத்தை மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. ஆனால், மத்திய நீர்வளத் துறைதான் இதுபற்றி முடிவெடுக்க முடியும். அவர்கள் விரைவில் முடிவெடுப் பார்கள் என நம்புகிறேன்- என்றார். (வ)

## இந்தியா வந்தார் புடின்



டில்லி, டிசெ.25

ரஷ்ய ஜனாதிபதி விளாடி மிர் புடின் அரசு முறை பயணமாக நேற்று அதிகாலை புதுடில்லியை வந்தடைந்தார்.

இந்தியா - ரஷ்யா நாடுகளுக்கு இடையே ஆண்டுதோறும் நடை பெறும் நல்லெண்ண பேச்சு டில்லியில் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்பதற்காக புடினுடன் உயர் மட்டக் குழுவும் வருகை தந்துள்ளது.

விளாடிமிர் புடின் பிரதமர் மன்மோகன் சிங்குடன் பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கூடங்குளம் அணு மின் நிலைய விரிவாக்கப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து மன்மோகன் சிங் குடன் விளாடிமிர் புடின் பேச்சு நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பேச்சுக்குப் பின்னர் இரு நாட்டு தலைவர்களும் எரிசக்தித்துறை, கட்டமைப்புத் துறை, தொழில்நுட்பத் துறை உட்பட பல முக்கிய துறைகள் தொடர்பான ஒப்பந் தங்களில் கைச்சாத்திடவுள்ளனர். (வ)

## பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் ஊடகவியலாளர் உயிரிழப்பு

மணிப்பூர் மாநிலத்தில் திரைப்பட நடிகை மீது நடத்தப்பட்ட பாலியல் தாக்குதலைக் கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஊடகவியலாளர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வாகனம் ஒன்றுக்கு தீ வைத்ததை அடுத்து பொலிஸார் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியிருந்தனர். டில்லியில் சென்றவாரம் குறித்த நடிகை பலரால் ஒரேநேரத்தில் கொடூரமான முறையில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப் பட்டதைக் கண்டித்துப் பல இடங்களிலில் அடுத்தடுத்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. (வ)

## மோடி பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்கிறார் ஜெயலலிதா



குஜராத்தில் மீண்டும் வெற்றிபெற்றுள்ள நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்பதற்காக முதல்வர் ஜெயலலிதா நாளை புதன்கிழமை குஜராத் செல்ல உள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட அறி விப்பில் குறிப்பிட்டுள்ள தாவது:-

குஜராத் மாநில சட்டப் பேரவைத் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றதை அடுத்து அந்த மாநில முதல்வர் நரேந்திர மோடிக்கு தொலைபேசி மூலம் முதல்வர் ஜெயலலிதா கடந்த 20 ஆம் திகதி வாழ்த்துத் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து அமைச்சரவை பதவியேற்பு விழாவில் பங்கேற்குமாறு முதல்வர் ஜெயலலிதாவுக்கு நரேந்திர மோடி அழைப்புக் கடிதத்தையும் அனுப்பி யுள்ளார்.

மோடியின் அழைப்பை ஏற்று முதல்வர் ஜெயலலிதா நாளை புதன்கிழமை குஜ[illegible] பாத் செல்லவுள்ளார். (வ)

## அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம் புடினின் வருகைக்கு கடுமையான எதிர்ப்பு

### கூடங்குளம் அணு உலைகளையும் எடுத்துச் செல்லட்டும்

நெல்வேலி, டிசெ.25

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்திய வருகைக்கு அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, திருநெல்வேலி மாவட்டம் இடிந்தகரையில் கூடங்குளம் அணு மின் நிலையத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வரும் அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம் சார்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

ரஷ்ய ஜனாதிபதி புடினின் இந்திய வருகைக்கு கடுமையான ஆட்சேபத்தை தெரிவித்துக் கொள்கிறோம். ரஷ்ய அரசு இந்திய உள் விவகாரங்களில் தலையிட்டு வருகிறது. மேலும், இந்திய மக்களுக்கு பெரும் பொருளாதார இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்தியாவுக்கான ரஷ்யத் தூதர் இந்திய உள்விவகாரங்களில் தலையிட்டு, இந்தியாவின் எரிசக்தி கொள்கை, வளர்ச்சி கொள்கை, நாட்டின் எதிர்காலம் மற்றும் மக்களின் போராட்டங்கள் குறித்து தேவையில்லாத கருத்துகளைத் தெரிவித்துள்ளார். பல திறனில்லாத ஒப்பந்தங்கள் மற்றும் பொருள்கள் விநியோகம் செய்வதில் கால தாமதம் போன்றவற்றால் இந்தியாவுக்கு ரஷ்யா அதிகமான பொருளாதார இழப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

2005 ஆம் ஆண்டிலேயே மின் உற்பத்தியை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்த கூடங்குளம் அணு மின் நிலையத்தில், 2012 ஆம் ஆண்டு இறுதிவரை மின் உற்பத்தி ஆரம்பிக்கப் படவில்லை. அணு உலைக் குத் தேவையான உதிரிப் பாகங்களை விநியோகம் செய்வதில் ஏற்பட்ட கால தாமதம்தான் இதற்குக் காரணம் என்று இந்திய அணுசக்தித் துறையும், இந்திய அணுசக்தி கழகமும் தெரிவித்துள்ளன.

இதற்கு ரஷ்ய ஜனாதிபதி தான் முழுப்பொறுப்பு. எனவே, அவர் இந்தியா வருவதை நாம் எதிர்க்கிறோம். அவர் திரும்பிச் செல்ல வேண்டும். தன்னுடன் கூடங்குளம் அணு உலைகளையும் அவர் எடுத்துச் செல்லட்டும்- என்றுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 60 பேர் சாவு:

## உணவு வாங்குவதற்காக வரிசையில் காத்திருந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் மீது சிரிய விமானப்படை கடும் தாக்குதலை மேற்கொண்டது.



டமஸ்கஸ், டிசெ.25

காலை உணவு வாங்குவதற்காக வரிசையில் காத்திருந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் மீது சிரிய விமானப்படை கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டது. இதில் 60 பொதுமக்கள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். காயமடைந்த பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்தப்பட்ட ஹல்பாயா நகரைக் கடந்த வாரமே புரட்சியாளர்கள் கைப்பற்றினர். ஹல்பாயா நகரில் காலை உணவுக்காக பேக்கரி ஒன்றின் முன் காத்திருந்த மக்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் பெண்கள் குழந்தைகளே அதிகம் பலியாகியிருக்கக் கூடும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதல் நடந்த பகுதிக்கு ஊடகங்கள் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் இழப்பு எண்ணிக்கை குறித்து உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

புரட்சியாளர்கள் கைப்பற்றிய பகுதிக்கு சிரிய அரசு உணவு மற்றும் மின் தடைகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால் மக்கள் அத்தியாவசியப் பொருள்களுக்குத் திண்டாடி வருகின்றனர்.

## ஈரான் தலைவர் பெயரில் பேஸ்புக் கணக்கு

### ஆரம்பித்தவர் குறித்து விசாரணை

தெஹ்ரான், டிசெ.25

ஈரானின் தலைவர் அயதுல்லா அலி ஹாமினியின் பெயரில் முகப்புத்தகக் கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தக் கணக்குக் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈரானில் இணைய தளங்களை உபயோகிப்பது கட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன் பல சமூக வலைத்தளங்களும் தடை செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் தலைவர் ஹாமினியின் பெயரில் கணக்கொன்றை யார் தொடங்கியிருப்பார் என்ற மர்மம் எழுந்துள்ளது.

இந்தக் கணக்கில் அயதுல்லா ஹாமினியின் படங்கள், அவரைப்பற்றிய தகவல்கள், பேச்சுகள் என்பன பகிரப்பட்டுள்ளன. ஈரானுக்கு வெளியில் அவரது கருத்துக்களைக் கொண்டுசெல்வதற்கே இது தொடங்கப்பட்டுள்ளது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

## 700 பலஸ்தீனியர்கள் சாவு?

டமஸ்கஸ், டிசெ.25

சிரிய அகதிகள் முகாமில் இடம்பெற்ற மோதலில் 700 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீன அகதிகள் விடுதலை அமைப்பு அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 21 மாதங்களுக்கு முன்னர் சிரியாவின் டமஸ்கஸில் உள்ள அகதிகள் முகாமில் யார்முக் அகதிகள் முகாம் உள்ளிட்ட முகாமில் நடந்த மோதலில் 700இக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

எனினும் அப்போது இந்த எண்ணிக்கை மிக குறைத்தே வெளியிடப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கெய்ரோவில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

### அமெரிக்கா வரை இலக்கு வைக்கக்கூடிய

## அணு ஆயுத ஏவுகணையை வடகொரியா தயாரிக்கும்

### அச்சம் வெளியிடுகிறது தென்கொரியா

சியோல், டிசெ.25

10 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கும் நவீன அணு ஆயுத ஏவுகணையை வடகொரியா தயாரிக்கும் அபாயம் நிலவுகிறது என்று தென்கொரியா இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

''வடகொரியா 10 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கும் நவீன அணு ஆயுத ஏவுகணையைத் தயாரிக்கும் வாய்ப்பு நிலவுகிறது. இது அமெரிக்காவின் மேற்கு கடற்கரை வரையிலான இலக்கு தூரமாகும். தற்போது ஏவப்பட்ட ஏவுகணை 500 கிலோ முதல் 600 கிலோ ஆயுதங்களை சுமந்து செல்லக்கூடியதாகவும் இருக்கும். ஏவுகணையை ஏவிய விதம் மற்றும் அதில் பயன்படுத்தப்பட்ட பொருள்களை வைத்து இதை ஊகிக்க முடிகிறது''- என்று தெரிவித்துள்ளனர் தென்கொரிய இராணுவ அதிகாரிகள்.



அண்மையில் வடகொரியாவால் ஏவப்பட்ட ஏவுகணையின் சிலபாகங்களைக் கண்டெடுத்துள்ள தென்கொரியா அவற்றை வைத்து ஆராய்ந்துள்ளது.

## வணிக வளாகத்தில் பற்றியது தீ

### சீனாவில் 3 பேர் சாவு

பீஜிங், டிசெ.25

சீனாவில் யானன் நகரிலுள்ள பல மாடிகள் கொண்ட வணிக வளாகத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் சிக்கி 3 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். பலர் காயங்களுக்கு உள்ளாகினர்.

தீயணைப்புப் படையினரின் பலத்த போராட்டத்துக்குப் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. தீ ஏற்பட்ட காரணம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறுவன் சேகரித்த முட்டைகளில் வெளிவந்தன பாம்புக் குட்டிகள்!

மெல்பேர்ன், டிசெ.25

ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாகாணத்தில் டவுன்ஸ்வில்லி பகுதியைச் சேர்ந்த டோனா சிம் என்பவரின் 3 வயது மகன் கிலே குமிங்.

தன்னுடைய வீட்டுத் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் கிலே அங்கு சிதறிக் கிடந்த முட்டைகளை விளையாட்டாக எடுத்தான். தான் எடுத்த 12 முட்டைகளை வீட்டுக்கு எடுத்து வந்த குமிங் தன் அறையில் உள்ள ஒரு பாத்திரத்தில் போட்டு மூடி வைத்திருந்தான்.

இவனது தாய் டோனா சமையல் செய்வதற்காக அறையில் இருந்த பாத்திரத்தை எடுத்துத் திறந்தபோது அதில் ஒன்பது விஷப் பாம்பு குட்டிகள் நெளிவதை கண்டு திடுக்கிட்டார்.

உடனடியாக அந்த பாத்திரத்தை மூடி வைத்து விட்டு வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார். அவர்கள் வந்து ஒன்பது பாம்பு குட்டிகளையும் எடுத்துச் சென்று காட்டில் விட்டனர். இது குறித்து வனத்துறை அதிகாரிகள் தெரிவிக்கையில், ''இந்த பாத்திரத்தை சிறுவன் திறந்து விளையாடி இருந்தால் கடும் விஷமுடைய அந்தப் பாம்புக் குட்டிகளால் கடிபட்டு இறந்திருப்பான்''- என்று தெரிவித்துள்ளனர்.

## எல்லையற்ற முழு அதிகாரம்

### எகிப்து மக்கள் ஆதரவு?

கெய்ரோ, டிசெ.25

எகிப்தில் ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரம் அளிக்கும் அரசமைப்புத் திருத்தம் மீது நடந்த வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக 71 சதவித பேர் வாக்களித்துள்ளனர்.

எகிப்து ஜனாதிபதி முகமது முர்சி, தனக்கு எல்லையற்ற அதிகாரம் அளிக்கும் வகையில் புதிய அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார். இதை எதிர்த்து எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டன.

அதனையடுத்து சட்டத்திருத்தம் குறித்து மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இறுதி வாக்கெடுப்பில் 71.4 சதவீதம் பேர் புதிய சட்டத்திருத்தத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆனால் வாக்கெடுப்பில் 30 சதவீதத்தினர் மட்டுமே பங்கேற்றனர் என்றும், இந்த முடிவுகள் சரியானவை அல்ல என்றும் எதிர்க்கட்சியினர் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.


## கனடாவில் கடும் பனி

ரொறன்ரோ, டிசெ.25

கனடாவில் வீசிய பனிப்புயலால் ஒன்ரோரியா, கியூபெக் மாகாண மக்கள் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளனர். தெற்கு ஒன்ரோரியாவில் கடுமையான மழையை தொடர்ந்து, உறைய வைக்கும் பனிப்பொழிவு அதிகளவு இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

50 செ.மீ. அளவுக்கு பனிப்பொழிவு இருக்கும் என்றும், மத்திய ஒன்ரோரியாவில் தான் அதிகளவு பனிப்பொழிவு இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் கியூபெக் மாகாண மக்கள் மின்சாரமின்றி இருளில் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

## 600 கடைகள் தீயில் நாசம்



காபூல், டிசெ.25

ஆப்கன் தலைநகர் காபூலில் உள்ள சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் தீ விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் சுமார் 600 கடைகள் அடியோடு எரிந்து சாம்பலாகின. கடைகளில் இருந்த பல கோடி ரூபா மதிக்கத்தக்க பொருள்கள் எரிந்து நாசமாகின. உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை. தீ ஏற்பட்டமைக்கான காரணம் தெரியவில்லை. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இளவரசர் ஹரியின் தாக்குதலில் தலிபான் தளபதி உயிரிழப்பு

காபூல், டிசெ.25

ஆப்கனில் பாதுகாப்புப் படையில் பணியாற்றிய இளவரசர் ஹரியின் தாக்குதலில் தலிபான் தளபதி ஒருவர் உயிரிழந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரிட்டன் இளவரசர் ஹரி ஆப்கனில் உள்ள பிரிட்டிஷ் படையில் இடம்பெற்றுள்ளார். அங்கு ஹெல்மாண்ட் மாகாணத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தார்.

பிரிட்டன் விமானப் படையின் அப்பாச்சி ரக ஹெலிகொப்டரில் விமானியாகப் பணியாற்றும் ஹரி, தலிபான்கள் மீது நடத்திய தாக்குதலில் தலிபான் தளபதி ஒருவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவல் பிரிட்டன் ஊடகங்களில் முக்கிய இடம் பிடித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியாசமான காதல்



உலகிலேயே மிகவும் உயரமான டீன் ஏஜ் பெண் என்ற பெருமையைக் கொண்டவர் பிரேஸில் நாட்டின் 17 வயதுப் பெண் எலிசனி டா குரூஸ் சில்வா. இவர் அண்மையில் தனது 22 வயதுக் காதலருடன் பிரேஸில் கடற்கரையில் உற்சாகமாகச் சுற்றி வந்தார். இதைப் பார்க்கப் பெரும் திரளானோர் கடற்கரையில் கூடினர்.

17 வயதான எலிசனியின் உயரம் 6 அடி 8 அங்குலம். இவரது காதலர்தான் பிரான்சினால்டோ டா சில்வா கார்வால் ஹோ. 22 வயதான இவர் சாதாரண உயரம் கொண்டவர். அதாவது 5 அடி 4 அங்குலம்தான். இருவரும் சேர்ந்து பிரேசிலில் நாட்டின் முக்கிய பகுதிகளுக்கு அவ்வப்போது சுற்றுலா செல்லத் தவறுவதில்லை. அப்போதெல்லாம் இவர்களைப் பார்க்கப் பெரும் கூட்டம் கூடிவிடும். எலிசனியின் பிட்யூட்டரி சுரப்பியில் ஏற்பட்ட ஒருகட்டி காரணமாகவே அவருக்கு அபரிமிதமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

''மாறுபட்ட உயரம் காரணமாக எங்களுக்குள் எந்தப் பிரச்சினையும் வந்ததில்லை. வெளியில் போனால் இருவரும் கை கோர்த்துக் கொண்டு போக முடியாது. முத்தம் கொடுக்க வேண்டும் என்றால் நான் நன்றாக குனிந்து முத்தமிட வேண்டும் அவ்வளவுதான். உண்மையில் நான் அவரைத் தேர்வு செய்யவில்லை, கடவுள் தான் இந்தத் தேர்வை செய்தவர்'' என்று கூறுகிறார் எலிசனி.

# தேர்தல் நடக்காவிட்டால் அமைதி குலைந்துவிடும்

## பாகிஸ்தான் நிலைமை குறித்து எச்சரிக்கிறார் பஞ்சாப் முதல்வர்

லாகூர், டிசெ.25

பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நிறுத்தப்பட்டால் வன்முறைகள் வெடிக்கும் என்று பஞ்சாப் மாகாண முதல்வர் ஷாபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

ஷாபாஸ் ஷெரீப், முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபின் இளைய சகோதரர் ஆவார்.

பாகிஸ்தானில் 2013ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால், பொதுத் தேர்தல் சில மாதங்களோ, ஆண்டோ பிற்போடப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அவ்வாறு தேர்தல் பிற்போடப்பட்டால் 2 ஆண்டுகளுக்கு தற்காலிக அரசு ஏற்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையிலேயே ஷபாஸ் ஷெரிப் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''2013ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் ஒத்தி வைக்கவோ, நிறுத்தி வைக்கப்படவோ கூடாது. மக்கள் தங்கள் வாக்குகளின் மூலம் மாற்றத்தைக் கொண்டு வர விரும்புகின்றனர். தேர்தல் நடைபெறா விட்டால் நாட்டில் வன்முறைகள் வெடிக்கும். தெஹ்ரிக் -இ- மிஹாஜுல் குரான் உள்ளிட்ட சில சக்திகள் நாட்டில் தேர்தல் நடைபெறுவதை விரும்பவில்லை. அசம்பாவிதம் நிகழ்ந்தால் அதற்கு அந்த அமைப்புகள்தான் பொறுப்பேற்க வேண்டும். தேர்தலை ஒத்திப் போட வைப்பதற்கான பேச்சு நடைபெறுகிறது. மக்களுக்கு எதிரான சதியாலோசனை நடைபெறுகிறது.'' என்றார்.

தெஹ்ரிக் -இ- மிஹாஜுல் குரான் அமைப்பின் தலைவரும், மதத்தலைவருமான தாஹிருல் குவாத்ரி ''நாட்டைக் காப்பாற்றுங்கள், அரசியலை அல்ல'' என்று அண்மையில் தெரிவித்திருந்தார். தேர்தலுக்கு முக்கியத்துவம் அளிக்கத் தேவையில்லை என்ற கருத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உணவின்றி வாடும் சிரிய அகதிகள்

டமஸ்கஸ், டிசெ.25

சிரியாவில் முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் உணவின்றி தவிப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

சிரியாவில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், சிரியா- துருக்கி எல்லைப் பகுதியில் இலட்சக்கணக்கான அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர்.


இவர்களுக்கு உணவு, குளிரைத் தாங்கவல்ல ஆடைகள், கழிப்பிடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கூட இல்லாத சூழல் நிலவுகிறது.

பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் குழந்தைகள், பெண்கள் என அனைவரும் தங்கியுள்ளனர்.

குளிரின் காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதிலும் கஷ்ட நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் வெப்பத்தை ஏற்படுத்தவோ, சமைக்கவோ எரிபொருள்களும் இல்லாத நிலையில், முகாமில் போதிய அளவில் உணவு வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.



## சோதனை ஓட்டம் வெற்றி; விண்வெளிக்கு சுற்றுலா செல்லலாம்



நியூயோர்க், டிசெ.25

விண்வெளிக்குச் சுற்றுலா செல்லும் விசேட விண்கலத்தின் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடந்தது.

பொதுமக்களை விண்வெளிக்குச் சுற்றுலா அழைத்து செல்லவுள்ளதாக அமெரிக்காவின் ரிச்சர்ட் பிரான்சன் விமான நிறுவனம் அறிவித்திருந்தது. அதைத் தொடர்ந்து விண்வெளிக்குச் சுற்றுலா செல்ல ஏராளமானவர்கள் முன்பதிவு செய்தனர்.

சுற்றுலா செல்வதற்கான விசேட விண்கலம் ஒன்றை அந்த நிறுவனம் தயாரித்து வந்தது.

இந்த விண்கலத்தின் சோதனை ஓட்டம் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள மொஜாவ் வின்வெளி மையத்தில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது. இந்தத் தகவலை அந்த நிறுவனத்தின் தலைமை அதிகாரி ஜோர்ஜ் ஒயிட்சைட்ஸ் தெரிவித்தார்.

அதிவேக சக்தி கொண்ட கலப்பின இயந்திரத்தில் உருவாக்கப்பட்ட இந்த விண்கலத்தில் 2 விமானிகள் மற்றும் 6 பயணிகள் என 8 பேர் பயணம் செய்ய முடியும்.


ஸ்ரீவாராஹி துணை

இன்பம் பொங்கும் எண்பதாவது

பிறந்த நாள் வாழ்த்து


கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் "வெண்மதி" ஆனைக்கோட்டையைப் புகுந்த இடமாகவும் கனடாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டவரும்
கொக்குவில் மேற்கு, வாராஹிபுரம் தன்னில் அமைந்துள்ள பேரருள் மிக்க அம்பிகையாம் ஸ்ரீ வாராஹி தாயின் ஆலய நிர்வாகஸ்தராகிய "சின்னமாம்பழம்" என்று எல்லோராலும்அன்பாக அழைக்கப்படும்

சுப்பையா நல்லையா

அவர்களது எண்பதாவது பிறந்தநாள் நிறைவுறும் இப் பொன்னாளில் (25.12.2012)
அன்பு மனைவி, செல்வப்புதல்விகள், மருமக்கள், பேரச்செல்வங்கள், பெறாமக்கள், மச்சான், மச்சாள்மார், சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஒன்றிணைந்து இனிதே நலமுடன் வாழ எல்லாம் வல்ல எங்கள் குலதெய்வம் ஸ்ரீ வாராஹி அம்பாள் திருவருள் வேண்டி இதய பூர்வமாக வாழ்த்துகிறார்கள்.

வாழ்க! நூறாண்டு!

ஓம் வாராஹி! ஓம் சக்தி!! ஓம் சக்தி!!!



திருமதி. இந்திராணி நல்லையா (மனைவி)
கனடா.

(1[illegible]3)(2,6,9)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பலவீனம், பலவீனம் அல்ல!

(6)

எனக்கு வயதாகி விட்டது. நான் என்ன சாதனை புரியப் போகிறேன் என்று சொல்லுகிறவர்கள் முயற்சியில் அக்கறை இல்லாதவர்கள். சாதனைகள் புரிவதில் ஆர்வம் இல்லாத வர்களுக்கு வயது காரணமாகி விடுகின்றது.

எனக்கு இன்னும் வயதாகவில்லை என்றால் என்ன சாதனை புரிய முடியும் எனக் கேட்கின்றவர்களின் கதையைப் பார்க்கலாம். ரேடியோவைக் கண்டுபிடித்தவர் மார்கோனி என்பது நமக்குத் தெரியும். கம்பித் தொடர்பு இல்லாமல் செய்தி அனுப்புகின்ற ரேடியோ தத்துவம் 20 - ஆம் நுாற்றாண்டில் திகழ்ந்த மிகப் பெரிய விஞ்ஞான சாதனைகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. ரேடியோ சம்பந்தப்பட்ட தத்துவத்தை மார்கோணி கண்டுபிடித்த போது அவருக்கு வயது 19.

பத்தொன்பது வயதிலேயே மார்கோனி சொன்னார். ''மின்காந்த அலைகளின் மூலம் மனிதர்கள் ஒருவரோடாருவர் எங்கிருந்தாலும் தொடர்பு கொள்ளக்கூடிய அதிசயம் நிகழப் போகிறது என்று. 21 ஆம் வயதில் கம்பித் தொடர்பு இல்லாமல் சில குறியீடுகளை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு அனுப்புவதில் மார்கோனி வெற்றி பெற்று விட்டார்.

மறந்து விடாதீர்கள் அப்போது அவருக்கு வயது இருபத்தொன்று தான். ஒரு விஞ்ஞானியின் கதை தான் இப்படி என்று கருத வேண்டாம். உலகத்தையே வெல்ல வேண்டுமென்று திட்டமிட்டு அலெக்ஸாண்டர் படை நடத்திப் புறப்பட்ட போது அவனுக்கு வயது பத்தொன்பது.

இந்த வயதில் இப்படி ஓர் எண்ணம் தோன்றுவதே சாதனைக்கு ஓர் ஆரம்பம். சர் ஐசக் நியூட்டன் தன்னுடைய இருபத்து நான்காவது வயதில் கணிதத் துறையில் ' இண்டெக்ரல் கால்குலஸ் என்கிற ஒரு புதிய பிரிவை உருவாக்கினார். கணிதத் துறையில் பல புதிய சிந்தனைகளுக்கு அது வித்திட்டது. இத்தனைக்கும் நியூட்டனுக்கு பள்ளிப் படிப்பு அதிகமில்லை. பத்து ஆண்டுகள் விவசாயப் பண்ணையில் வேலை பார்த்தார். ஐந்தாறு ஆண்டுகளே பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்றார். இந்தப் பின்னணியில் இருபத்து நான்கு வயதில் கணிதத் துறையில் பெரிய புரட்சியையும் அவரால் உருவாக்க முடிந்திருக்கிறது.

ஓ இதெல்லாம் பிறவியிலேயே மேதைகளாக இருந்தவர்களுக்கு சாத்தியமாக இருக்கலாம்.

நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் இளம் வயதில் என்ன பெரிய சாதனை செய்துவிட முடியும் என்று சிலர் வினவக் கூடும். மார்கோனி நியூட்டன் ஆகியோரை ஓர் எடுத்துக்காட்டுக்காகக் கூறியிருக்கிறேனே தவிர அவர்கள் வயதை ஒத்த ஒவ்வொருவரும் ஏதோ ஒரு புதிய கண்டுபிடிப்பைச் செய்து விட முடியும் என்று நான் சொல்ல வரவில்லை. இளம் வயதில் பெரிய சாதனைகள் செய்வது முடியாது என்கிற கூற்றை மறுப்பதற்காகத்தான் அலெக்ஸாண்டர், நியூட்டன், மார்கோனி ஆகியோரை எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

நாடுகளை வெல்லுவதும், புதிய கருவிகளைக் கண்டுபிடிப்பதும் தான் சாதனை என்பது என்னுடைய வாதமல்ல. இவர்களுக்கு இதெல்லாம் எப்படிச் சாத்தியமாயிற்று என்று நாம் யோசித்தால் நம்முடைய அளவில் நம்முடைய சக்திக்கு ஏற்ற விதத்தில் நமக்குத் தேவையான அளவில் நாமும் சாதனைகள் நிகழ்த்த முடியும் என்பது மட்டும் தான் என்னுடைய வாதம்.

இளமைப் பிராயத்திலேயே இவர்கள் ஏதோ ஒன்றில் கவனம் செலுத்தி அதற்கென்று தங்களுடைய சிந்தனையைச் செலவிட்டு இருக்கிறார்கள். அதற்கான திட்டங்களை உருவாக்கி இருக்கிறார்கள். திட்டங்களை செயற்படுத்துகின்ற முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். தடைகள் வந்த போதும் தளரவில்லை. தோல்விகள் வந்த போதும் துவண்டு விடவில்லை. நம்பிக்கையுடன் செயற்பட்டார்கள்.

சாதனைகளை நிகழ்த்தி அழியாத புகழைப் பெற்றார்கள்.

இதுதான் அவர்களுடைய வாழ்க்கையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய படிப்பினை. நம்முடைய சாதனைகள் உலகம் தழுவியதாக இருக்க வேண்டும்.

வரலாற்றில் இடம் பெறுகின்ற சாதனையாக இருக்க வேண்டும் என்பது அல்ல முக்கியம். சாதனைகளுக்கு சில குணங்கள் தேவைப்படுகின்றன. சிறிய சாதனைகளாக இருந்தாலும் பெரிய சாதனைகளாக இருந்தாலும் இந்த குணங்கள் தேவையாக இருக்கின்றன.

பரிணாம தத்துவத்தைக் கண்டறிந்த விஞ்ஞானி டார்வின் பல ஆண்டுகளைக் கடலிலேயே கழித்திருக்கிறார். சில ஆண்டுகளை காடுகளில் கழித்திருக்கிறார். இது வெளிப்படுத்துவது என்ன? தான் எடுத்துக் கொண்ட காரியத்தில் மிகக் கடினமான உழைப்புக்கு அவர் தயாராக இருந்திருக்கிறார்.

தோமஸ் ஆல்வா எடிசனின் வாழ்க்கையினைப் படித்தால் தூக்கமில்லாமல் உணவு உட்கொள்ளாமல் பல நாள்களை சோதனைச் சாலைகளில் அவர் கழித்திருப்பதைப் பார்க்க முடிகிறது. இந்த சக்தி எங்கிருந்து அவருக்குக் கிடைத்தது? இதற்கு அவரே பதில் சொல்லி இருக்கிறார். ' ஒரு காரியத்தில் நீங்கள் முனைப்புடன் ஈடுபடுகின்றபோது உங்களுக்குத் தேவையான சக்தி தானாகவே கிடைக்கிறது' என்கிறார் அவர்.

உலகத்தையே வெல்லுகின்ற சக்தி அலெக்ஸாண்டருக்கு அப்படித்தான் கிடைத்தது. ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்தபோது 20 மணி நேரம் வேலை செய்து விட்டு நான்கு மணி நேரமே தூங்கியிருக்கிறார். இப்படி உழைப்பதற்கு சக்தி அவருக்கு எங்கிருந்து கிடைத்தது.

சாதனை புரிந்த அனைவருமே கடினமான உழைப்பாளிகளாக இருந்திருக்கிறார்கள். அதற்குத் தேவையான சக்தியை இயற்கையிலிருந்து அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இதைத் தான் தோமஸ் ஆல்வா எடிசன் சொன்னார்.

பி.சி.கணேசன் (தொ டரும்)

# முன்பள்ளி ஆசிரியர்களின் தரத்தை கல்வி மட்டத்தில் மேம்படுத்தத் திட்டம்

## வலிகாமம் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

வலி.வடக்கு,டிசெ.25

யாழ்.மாவட்டத்தில் முன்பள்ளி ஆசிரியர்களின் தரத்தை கல்வி மட்டத்தில் மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வகையில் முன்பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியைகளுக்கு டிப்ளோமா கல்வி வழங்கப்பட்டு வருகின்றது.

வலிகாமம் கல்வி வலய முன்பள்ளிகளின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். குகனேசன் இவ்வாறு தெரிவித்தார்.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வித்தியாலய அதிபர் எஸ். சிவகுமரன் தலைமையில் நடைபெற்ற கலைமகள் முன்பள்ளி மாணவர்களை வழியனுப்பும் வைபவத்தில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்பள்ளி ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்களை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண பெறுபேறுகளுடன் இருந்த முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வி மேம்படுத்தப்பட்டு வருகின்றது.

உயர்தரத்தில் சித்தி அடைந்தவர்களே ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுவதுடன் சாதாரண தரத்துடன் இருக்கும் ஆசிரியர்கள் நீக்கப்பட்டும் வருகின்றார்கள்.

முன்பள்ளிகளுக்கு போதியளவு கட்டட வசதி காணப்படவில்லை. எதிர்காலத்தில் நிதி உதவி கிடைக்கும் சந்தர்ப்பத்தில் இந்த முன்பள்ளிகளுக்கு வேண்டிய கட்டட வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு எடுத்தவுடனேயே எண்ணும் எழுத்தும் கற்பிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்.

முன்பள்ளிச் சிறார்களுக்கான கல்வி என்பது விளையாட்டுடன் இணைத்தே ஊட்டப்படும்.

இன்று தரம் ஒன்றுக்கான பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் அனுமதி வழங்கப்படும் போதே எண்ணும் எழுத்தும் அடங்கிய பரீட்சைகளையும் நேர்முகப் பரீட்சைகளையும் அவை மேற்கொள்கின்றன.

இன்று முன்பள்ளி ஆசிரியர்கள் சர்வதேச அளவில் சிறந்த கல்வி உடையவர்களாகவும் பல்வேறு கற்பித்தல் தொழில் நுட்பத்தைக் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றார்கள் அதிக வருவாயும் பெறுகின்றனர்.

எமது பிரதேசத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் மிகவும் குறைந்த சம்பளத்துடன் கடமையாற்றுபவர்களாகவே உள்ளனர் - என்றார்.

(ம-86)

# பிரதேச சபைகளின் முன்னேற்றத்துக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்

## வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

சங்கானை,டிசெ.25

கடந்த பல வருடங்களாக மந்தநிலையில் இயங்கி வந்த பிரதேச சபைகள், தற்போது முன்னேற்றகரமான முறையில் தமது சேவையைப் பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றன.

இவ்வாறான முன்னேற்ற செயற்பாடுகளுக்கு, பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், சபை உறுப்பினர்களின் செயற்பாடுகளோடு, சபைகளுக்குட்பட்ட பொதுமக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் மிக முக்கியமானது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி சா.உருத்திரசம்பவன் தெரிவித்தார். வலி.மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிறைவு நாள் நிகழ்வு, சபையின் தலைவர் திருமதி நா.ஐங்கரன் தலைமையில், சித்தன்கேணி கணபதிப்பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனதுரையில்;

உள்ளூராட்சி வார நிகழ்வை வருடா வருடம் கொண்டாடி வருகின்றோம். எமது சபையானது இந்த ஏழு நாள்களிலும் சுகாதாரம், இயற்கைச் சூழலைப் பேணல் போன்றவற்றை முதன்மைப்படுத்தி நிகழ்வைக் கொண்டாடியது. மரம் நடுகை, சுற்றுச் சூழலால் ஏற்படும் தீமைகள் பற்றி பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்றவற்றை சபை செயற்படுத்தியது.

பொதுமக்கள் மூலம், சந்தைகள் மற்றும் சோலை வரி போன்றவற்றால், பெறப்படும் தொகை அவர்களின் தேவைகள் கருதியும், சபை மூலம் அவர்கள் பெறும் நன்மை கருதியும் செலவு செய்யப்படுகின்றது. இந்தச் சபை கடந்த இரு வருடங்களாக சிறப்பான முறையில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

நல்ல முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்கு பொதுமக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் தேவை என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உதயன், சுடர்ஒளி நிர்வாக இயக்குநர் திருமதி ய.சரவணபவன், உள்ளூராட்சி மன்றத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளை வழங்கிக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் 25 வருட சேவையை நிறைவு செய்த வருமான பரிசோதகர் சி.சிறிகாந்தாவுக்கு சிறந்த உள்ளூராட்சி சேவையாளர் விருது வழங்கப்பட்டது.

சுனாமி இடர்களைப் பற்றி பத்திரிகை மூலம் பெறப்பட்ட ஆவணப்படங்களை ஒன்றும் விடாமல் சேகரித்து பல கண்காட்சிகளில் காட்சிப்படுத்திய சங்கானையைச் சேர்ந்த மா.கணேஸும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வின் இறுதியில் சபையால் வெளியிடப்பட்ட வலி.மேற்கின் வசந்தம் [illegible] இடம்பெற்றது.

(ம-29)



வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின பொது நூலகத்தால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற மாணவன் ஒருவருக்கு சபையின் தலைமை அலுவலக தொழில் நுட்ப உத்தியோகத்தர் எஸ்.கணேசராஜா பரிசில் வழங்குகிறார். (ம-17)

# பண்ணிசைப் போட்டி வெற்றியாளர்கள்

வடமராட்சி,டிசெ.25

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வருடாந்த திருவாசக விழாவை ஒட்டி பாடசாலை மாணவர்களிடையே பண்ணிசைப் போட்டியை நடத்தியது. போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**கீழ்ப் பிரிவு-** கருணாகரன் தேனுகா - அராலி சரஸ்வதி மகா வித்தி., யோகராசா டிலின்சியா - பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி., சத்திவேல் அபிராமி - பருத்தித் துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**மத்திய பிரிவு-** திருச்செல்வன் சுபாஷ் - பருத்தித் துறை சித்தி விநாயகர் வித்தி., இ.ரஸ்மினி - ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தி.

**மேற்பிரிவு-** பரமேஸ்வரன் கௌரிசன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, ரவிச்சந்திரன் ஸகிஷ்னா- யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, கணேசமூர்த்தி காயத்திரி - கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, சிவகுமார் சங்கவி - பருத்தித் துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி (இருவர் மூன்றாம் இடம்)

(ம-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'திவிநெகும' திட்டத்துக்கு கட்டுப்பாடு விதித்து சிக்கலில் சிக்கிக் கொண்டார் ஷிராணி

## 'இந்து' பத்திரிகை தெரிவிப்பு



> "அரசு நீதிச்சேவை சங்கத்தின் வருடாந்த நிகழ்வைத் தடுக்க வெளிப்படையாகவே முயன்றுள்ளது. வழக்கமாக நீதிவான்கள் இந்நிகழ்வில் இரு தினங்களைச் செலவிடுவார்கள். பரஸ்பரம் உறவாட இது ஒரு வாய்ப்பாகவும் அமையும். இலங்கையில் சுயாதீன நீதித்துறை எதிர் நோக்கும் அச்சுறுத்தல் குறித்து நீதிவான்கள் கருத்துப் பரிவர்த்தனையில் ஈடுபடுவார்கள் என்ற வெளிப்படையான பயமே இதற்குக் காரணமாகும்"

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவால் முறைகேடான நடவடிக்கையில் 'குற்றவாளி'யாக அறிவிக்கப் பட்டுள்ள இலங் கைப் பிரதம நீதியரசர்ஷிராணி பண்டாரநாயக்க, நீதிக்குமுன் நிறுத்தப்பட இன் னும் சொற்ப நாள்களே உள்ளன. எனினும், அவர் மீதான குற்றச் சாட்டு எவ்வகையிலும் அவரைச் சூழும் பல்வேறு குழுக்களையும் தடுக்கவில்லை - என்று சென்னையிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளேடான 'த இந்து' தெரிவித்துள்ளது.

'இலங்கைப் பிரதம நீதியரசர் அரச விரோத பேரணியுடன்' என் னும் தலைப்பில் இது தொடர்பான செய்தியை 'த இந்து' தனது 21.12.2012 ஆம் திகதிய இதழில் வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

"இலங்கையில் இந்த விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. குற்றவியல் பிரேரணை முன்னெடுப்புகள் ஆரம்பமான போது இருந்த நிலை இப்போது இல்லை" என சிரேஷ்ட இராஜதந் திரி ஒருவர் குறிப்பிட்டார். ஒரு சில எதிரணி அரசியல்வாதிகள், சிவில் சமூகப் பணியாளர்கள் ஆகி யோருடன் இவ்விவகாரம் தொடர் பாக 'த இந்து' தொடர்புகொண்டது.

இந்த ஆதரவில் மிதக்கும் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க கடந்த புதன்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கண்டுபிடிப்பு களுக்கு சவால்விடத் தவறவில்லை. நீலகண்டன் மற்றும் நீலகண்டனை உள்ளடக்கிய இவருக்கான சட்ட நிறுவனம் தெரிவுக்குழு நேர்மை யான விசாரணைக்குப் பிரதம நீதியரசரை உட்படுத்தவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

"இயற்கை நீதி நியமங்களுக்கு நாட்டின் சட்டத்துக்கு அமைய விசாரணை நடத்தப்படவில்லை" என்றே மேற்படி சட்ட நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த மனுவின் முனைப்பான கட்டம் இதுதான்:

இந்த நிறுவனம் தெரிவுக்குழு வின் அமைப்பு விதியைச் சாடு கிறது. அதேவேளை, பிரதம நீதி யரசருக்கு எதிரான குற்றச்சாட்டு களை விசாரிப்பதற்காக நிறுவப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு இலங்கை அரசமைப்புக்கு முரண் பாடானது என்றும் அது தர்க்கிக் கிறது. (இந்த மனு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது)

'த இந்து' தொடர்புகொண்ட சட்டவல்லுநர்களும், நாடாளுமன் றத் தெரிவுக்குழுவின் நியமனமே அடிப்படை குறைபாடுகளைக் கொண்டது என்று கருத்து வெளி யிட்டுள்ளார்கள். "நாடாளுமன் றத் தெரிவுக்குழுவே ஜூரியா கவும், நீதிவானாகவும் செயற்பட முடியாது" என ஒரு நிபுணர் குறிப் பிட்டார்.

இந்த நிபுணரின் கருத்துப்படி இரண்டு நாடாளுமன்றக் குழுக்கள் இருக்கவேண்டும். ஒன்று குற்றச் சாட்டுகளை கிளறிவிசாரிக்கவேண் டும். இரண்டாவது குழு நீதி வானாகச் செயற்பட வேண்டும்.

சட்ட மேதைகளுக்கு மத்தியில் சட்டத்தரணிகளும், பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இவ்விவகாரத்தில் தலையிடுமா றும், குற்றவியல் பிரேரணை முன் னெடுப்புகளைத் தடுக்குமாறும் நிர்ப்பந்தித்து வருகிறார்கள்.

பின்னர், நான்கு உச்சமட்ட பௌத்த தலைவர்களும், இதர சமயங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவோரும் இவ்விவகாரம் தொடர்பாக ஜனாதிபதிக்குப் பகி ரங்கக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்கள்.

இவ்விவகாரத்தால் பரந்தள வில் உருக்கொண்டுள்ள நிலை வரத்தை அவதானித்து பிரதம நீதி யரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பான நாடாளு மன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை, சுயாதீனக் குழுவொன்றின் பரி சீலனைக்கும் உட்படுத்தப்படும் என டிசெம்பர் 11ஆம் திகதி ஜனா திபதி ராஜபக்ஷ அறிவித்தல் விடுத் தார்.

குற்றவியல் பிரேரணைக்கு எதிராக எங்கு நோக்கினும் சட்டத்தரணிகள் பேரணிகளுக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும், பகிரங் கக் கூட்டங்களுக்கும் ஏற்பாடு கள் செய்துள்ளார்கள். மக்கள் மத்தியில் கைச்சாத்து வேட்டை களும் மேற்கொள்ளப்பட்டுள் ளன. எதிரணி நிபந்தனைகளை வலுவிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் இவையாகும்.

இவற்றில் டிசெம்பர் 15ஆம் திகதி நடைபெற்ற இலங்கைச் சட் டத்தரணிகள் சங்கக் கூட்டம் அதி முக்கியமானது. சட்டத்தரணிகள் சங்கத்தின் விசேட கூட்டத்தில், 'பிழையான குற்றவியல் பிரேரணை' யால் ஏற்படுத்தப்பட்ட வெற்றி டத்துக்குப் புதிய பிரதம நீதியரசர் ஒருவரை நியமிப்பதை உத்தியோக பூர்வமாக வரவேற்பதைச் சங்கம் தவிர்த்துக்கொள்ளுமெனக் குறிப்பிட்டு தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசு மீது பகைமை கொள் ளாது, சுய நிலைப்பாட்டில் செயற் படும் சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள் கடினமான ஒரு தருணத்தை எதிர்நோக்குகிறார் கள். இதன் தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷவின் இல்லத்துக்கருகே வியாழக்கிழமை அதிகாலை துப் பாக்கி வேட்டுகளின் சப்தம் கேட் டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மேற்படி சங்கத் தலைவர் முறைபீடு செய்துள் ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ அன்று பின்னேரம் அவரது இல்லத்துக்கு சென்று பார்வையிட் டதாக 'டெய்லி மிரர்' அதன் ஒன்லைனில் குறிப்பிட்டுள்ளது.

நீதிமன்றத்துடனும் சட்டத் தரணிகள் அமைப்புடனும் அரசுக்கு வெறுப்பூட்டுவதற்காக, டிசம்பர் 21ஆம் திகதிய நீதிச்சேவைச் சங் கத்தின் வருடாந்த நிகழ்ச்சிக்கான அனுசரணை மீளப்பெறப்பட்டு விடுமென்றும் அறிவித்தல் விடுக் கப்பட்டது.

"நீதிவான்கள் தங்கள் சுய பங்களிப்புடன் ஒருநாள் கூட்டத்தை நடத்துவார்கள்" என்றும் அறி வித்தல் விடுக்கப்பட்டது என ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழு அதன் அறிக்கையில் குறிப் பிட்டுள்ளது.

"அரசு இந்த வருடாந்த நிகழ் வைத் தடுக்க வெளிப்படையா கவே முயன்றுள்ளது. வழக்கமாக நீதிவான்கள் இந்நிகழ்வில் இரு தினங்களைச் செலவிடுவார்கள். பரஸ்பரம் உறவாட இது ஒரு வாய்ப் பாகவும் அமையும். இலங்கை யில் சுயாதீன நீதித்துறை எதிர் நோக்கும் அச்சுறுத்தல் குறித்து நீதி வான்கள் கருத்துப் பரிவர்த்தனை யில் ஈடுபடுவார்கள் என்ற வெளிப் படையான பயமே இதற்குக் கார ணமாகும்" என்றும் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

அரசு சார்பற்ற பிறிதொரு சங்க மான சட்டத்தரணிகள் கூட்டு இந்த நடவடிக்கையைக் கண்டித்து அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அதில், "அமைச்சின் செயலாளர் (திருமதி மல்காந்தி விக்கிரம சிங்க) டிசம்பர் 18ஆம் திகதி நீதிச்சேவைச் சங்கத்துக்கு விடுத் துள்ள அறிவிப்பில் அமைச்சர் (வாசுதேவ நாணயக்கார) இந்த நிகழ்ச்சிக்கு (மாநாடு) அனுசரணை வழங்க விரும்பவில்லை என குறிப்பிட்டுள்ளார். இந்த மாநாட்டு நிகழ்வுக்காக, கைச்சாத்திடப்பட்ட பரஸ்பர புரிந்துணர்வு உடன் படிக்கை, முன்கூட்டியே முற்பணம் வழங்கல் ஆகியவற்றுக்கு இது ஒரு முரண்பாடான நடவடிக்கை. அமைச்சின் ஒரு தலைப்பட்ச மான அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக்கொண்ட முடிவால் யுஎன்டிபியின் அனு சரணையும் உத்தியோகபூர்வமாக மீளப்பெறப்பட்டுள்ளது" என் றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீதிவானாகவோ, சட்டத்தரணி யாகவோ செயற்படுவதற்கான அனுபவமற்றவர் என இப்போது ஊகிக்கப்படுபவரான கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவை உச்ச நீதிமன்றத் தலைவராக ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷவே தெரிவுசெய்தவராவார்.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் சகோதரர் பஸில் ராஜபக்ஷவின் அமைச்சின் கீழ் வரும் திவி நெகும வேலைத்திட்டத்துக்கு 80 பில்லியனை செலவிடுவது தொடர் பாக சட்டக்கட்டுப்பாட்டை விதித் தமைக்காக பிரதம நீதியரசர் இச்சிக் கலில் சிக்கியுள்ளார்போல் தெரிகிறது.

மாகாணங்களுக்கான அதிகாரத் தில் தலையிட்ட 'திவிநெகும' சட்டமூலம் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க தலைமையிலான அமர்வால் தடுக்கப்பட்டது. இது சகல மாகாணசபைகளிலும் நிறை வேற்றப்படவேண்டுமென வியாக் கியானம் அளிக்கப்பட்டது முதல் இச்சிக்கல் உருவாகியுள்ளது.

இது அரசுக்குப் புதிய பிரச்சி னைகளைத் தோற்றுவித்துள்ளது. எனினும், ஜனாதிபதி இதுவிட யத்தில் அலட்டிக்கொள்ளவில்லை. பிரதம நீதியரசரும், அவரது கணவ ரும் மிகப் பெரும் ஊழலில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற நிலைப்பாடே நாடாளுமன்றத் தெரிவுக்குழு, குற்றவியல் பிரேரணையைக் கொண்டுவரக் காரணமாயிற்று என்று உள்ளது. ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசுக்குச் சவாலாக அமையப்போகும் மனித உரிமைகள் பேரவைக் கூட்டம்

**பிரபல சிரேஷ்ட வழக்கறிஞர் கோமின் தயாசிறி 'திவயின' சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் வெளியிட்ட கருத்து.**

*தமிழில்-வீஎஸ்ரீ*

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு, தனது அறிக்கையில் தெரிவித்துள்ள சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசு செயற்திட்டமொன்றைத் தயாரித்துள்ள போதிலும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னெடுப்புக்கள் அரசினால் மேற்கொள்ளப்படுவதாகத் தோன்றவில்லை. அமைச்சுகளூடாக அவற்றை நடைமுறைப்படுத்த அரசு எதிர்பார்க்கின்ற போதிலும் இதுவரை அத்தகைய செயற்பாடுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்ட அறிக்கை, வெளிநாட்டமைச்சர் மூலம் அமெரிக்க ராஜாங்கச் செயலாளருக்கு கையளிக்கப்பட்டமை அநாவசியமானது. மேற்குலக நாடுகளைத் திருப்திப்படுத்துவதாகவோ, அவர்கள் கூறும் விதத்தில் செயற்படுவதாகவோ எமது நடவடிக்கைகள் அமைய வேண்டுமென்றில்லை. எமது நாட்டு நிலைமைக்குப் பொருத்தமானதும் அவசியமானதுமான விதத்திலேயே நாம் செயற்பட வேண்டும். இத்தகைய பொறுப்பை நாம் உரிய வகையில் மேற்கொள்ளத் தவறினால், அதனால் ஏற்படத்தக்க ஆபத்துகளுக்கு நாம் முகம் கொடுக்க நேரிடும்.

அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில், இலங்கைக்கு ஆதரவளிக்கும் ரஷ்யா, சீனா, கியூபா போன்ற நாடுகள் மனித உரிமைகள் குறித்த விசாரணைக் குழுவில் அங்கத்துவம் வகிக்காத நிலையில், இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் பிரேரணைக்கு நாம் முகம் கொடுக்க நேர்ந்திருப்பது எமக்கு பாரதூரமான பின்னடைவாக அமையக்கூடும். வெளிநாட்டமைச்சு மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்கள் இந்த விடயத்தில் தமது பொறுப்பை உரிய வகையில் மேற்கொண்டிருப்பின், இலங்கைக்கு இத்தகைய நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்திருக்காது.

எதிர்வரும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் மேற்குலக நாடுகள் இலங்கை அரசுக்கு ஏதோவொரு வகையான தண்டனையை வழங்க இடமுள்ளது. அது சிலவேளை, அண்மைக் காலத்தில் இலங்கையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்தும் முடிவை இரத்துச் செய்ய வைப்பதாகவோ, அல்லது அந்த மாநாட்டில் வெளிநாடுகளின் தலைவர்கள் பலர் கலந்து கொள்வதைத் தடுப்பதாகவோ அமையக் கூடும். அத்தகையதொரு நிலையில் அது இலங்கைக்கு எதிரான வெளிநாடுகளின் புறக்கணிப்பாக வெளிநாட்டு ஊடகங்களால் விமர்சிக்கப்படக் கூடும். அரசு தொடர்ச்சியாக தனது பொறுப்பை நிறைவேற்றத் தவறும் போக்கை மேற்கொண்டால், அது நாட்டுக்கு பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தத்தக்க நிலையை உருவாக்கும்.

அரசின் இந்தப் பொறுப்பை உரிய வகையில் முன்னெடுக்க வேண்டிய அதிகாரிகள் தரப்புக்களின் செயற்திறன் அற்ற தன்மையே இதற்கான காரணமாகும். இதற்குப் பொறுப்பான அரசியல் அதிகாரத் தரப்புக்களும் இது தொடர்பாக கண்காணிப்பதாகத் தோன்றவில்லை. வழங்கப்பட்ட பொறுப்புக்கள் உரிய விதத்தில் முன்னெடுக்கப்படுகின்றனவா என்பது குறித்து உயர் அதிகார மட்டங்கள் கவனம் செலுத்தாமையால் திட்டங்கள் வெற்றியளிக்கத் தவறுகின்றன. ஆதலால் எதிர்வரும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானம், பொருளாதார ரீதியில் நாட்டுக்குப் பின்னடைவை ஏற்படுத்துவதற்கான பொறுப்பை இவ்விரு தரப்புக்களுமே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜனாதிபதியினால் மட்டும் தனித்து இத்தகைய பொறுப்பை நிறைவேற்ற இயலாது என்பது யதார்த்தமானதொன்று. இந்த விடயம் தொடர்பான நிர்வாகத் தரப்பினரின் வினைத்திறனின்மை காரணமாக எதிர்வரும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு சர்வதேச ரீதியில் அபகீர்த்தி ஏற்பட இடமுண்டு. ஆதலால் இந்த விடயம் உடனடியாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட வேண்டியது அவசியமானதொன்றாகும். இன்று பல அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் தரப்பினரின் செயற்பாடு காரணமாக நாட்டின் பொதுமக்கள் அரசிலிருந்தும் தூரவிலக ஆரம்பித்துள்ளனர்.

சமஷ்டிவாதமோ, பிரிவினைவாதமோ அல்லாது, தமிழ் மக்களது நியாயமான கோரிக்கைகளுக்கு அவர்களது நாளாந்த வாழ்க்கையில் அவர்கள் எதிர்நோக்கும் சிரமங்களுக்கான தீர்வு இதுவரை கிட்டாததால் இந்த நாட்டின் தமிழ் மக்கள் அரசு மீது அதிருப்தியடைந்துள்ளனர். இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி புலம்பெயர் தமிழர் சமூகமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசைக் கண்டித்து விமர்சித்து வருகின்றன.

புலம்பெயர் தமிழர் தரப்புக்களதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் அத்தகைய முயற்சிகளை, இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களது நியாயமான கோரிக்கைகளுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் மட்டுமே முறியடிக்க இயலும். அப்போது தான் இந்த நாட்டின் தமிழ் மக்களை பிரிவினைவாத உணர்விலிருந்து விலக வைக்க இயலும். இது தொடர்பான தீர்வுத் திட்டமொன்றை முன்னெடுக்கும் போது அரசு தமிழ் போன்று சிங்கள கடுங்கோட்பாட்டுத் தரப்புக்கள் குறித்து எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். அரசு நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தனக்கான ஆதரவைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமானால் அம் மாகாணங்களில் பொதுமக்களது ஆதரவை ஈட்டிக்கொண்டிராத அரசியல் வாதிகளூடாக அதனை நிறைவேற்றிக்கொள்ள இயலாது.

அரசு நேரடியாக தமிழ் மக்களது குறைநிறைகளைக் கண்டறிந்து அவற்றுக்கான தீர்வை வழங்கி உதவுவதன் மூலமே தனது குறிப்பிட்ட குறிக்கோளை வென்றெடுக்க இயலும்.

இந்த நாட்டில் வாழும் சகல பொதுமக்களும் புரிந்துணர்வுடன் ஒன்றிணைந்து வாழத்தக்கதொரு சூழலை உருவாக்கிக் கொடுப்பதற்கான பொறுப்பு நாட்டை நிர்வகிக்கும் அரசைச் சேர்ந்ததே. அந்த வகையில் பிரிவினைவாதம் மற்றும் சமஷ்டி வாத நோக்கம் இந்த நாட்டிலிருந்து களையப்பட வேண்டியுள்ளதோடு, அதற்காக அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை ஒழித்துவிடவோ அல்லது அதில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவோ வேண்டியேற்படும். அதற்குச் சமாந்தரமாக நாட்டுக்குப் பொருத்தமான விதத்தில் தமிழ் மக்களது நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் சிபார்சுகள் அதற்கு வழிவகுத்துக் கொடுக்கக் கூடியதாக அமைவதால், அச்சிபார்சுகளை நடைமுறைப்படுத்தினால், அதன் மூலம் இந்த நாட்டின் தமிழ் மக்களது கோரிக்கைகளுக்குத் தீர்வு கிட்டுவதோடு, அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தைப் பலவீனப்படுத்துவதற்கான வாய்ப்பும் கிட்டும். ★

# வெலிஓயா தரும் வலி ஓயாதா..?

■ *சுழியன்*

இடப்பெயர்வு தமிழ் மக்களின் அகராதியில் ஆயிரம் அர்த்தம் கொண்ட ஒரு பொருள். வலி, வேதனை, விரக்தி, வறுமை, அலைச்சல், அகதி என அதன் வடிவங்கள் பல. ஈழத்தமிழ் நாட்டில் இடப்பெயர்வு என்ற அந்தச் சொல்லுக்கு பிள்ளையார் சுழி இடப்பட்டது எப்போது என்பது இன்னும் பலருக்கு அடி முடி தேடிய கதையாகவே இருக்கலாம்.

1983 ஐ யாருமே மறந்திருக்க வாய்ப்பில்லை. கறுப்புக்கறை படிந்த அந்த ஆண்டுதான் இடப்பெயர்வையும் தமிழ் மக்களுக்குத் திணித்தது. முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோர எல்லைப்புற பகுதியின் தமிழ்க் கிராமங்கள் வழமை போலவே சுறுசுறுத்துக் கொண்டிருந்தன. விவசாயம் ஒரு புறம், மீன்பிடி மறுபுறம், வாழ்வாதார வசதிகள் நிறைந்த அவ்வூரில் திடீரென ஏதோவொரு மாற்றம்.

அரச அறிவிப்பு பறந்து வருகிறது. இன்னும் 24 மணித்தியாலயத்திற்குள் பிரதேசத்தில் வசிக்கின்ற தமிழ் மக்கள் அனைவரும் வெளியேறுங்கள். அவ்வளவுதான்! கையில் கிடைத்தது கிடைக்காதது எல்லாவற்றையும் விட்டுவிட்டு மின்னல் வேகத்தில் மக்கள் வெளிக் கிளம்பினர். வந்தது அரச அறிவிப்பல்லவா....? தண்ணி காட்டாத மாடு.... இன்னும் கூட்டிப் பெருக்காத வீடு... பனைமரக்காடு எவற்றையும் கருத்தில்வைக்க நேர அவகாசம் கிடையாது. தமிழ் எறும்புகள் வீதியை நோக்கி வரிசை கட்டின. ஏதோ அவசர தேவை போல விசாரிப்போ ஏதோ..... மறுபடியும் மாலை கருகமுன் வந்து விடுவது தானே சனங்கள் தமக்குள் பேசிக் கொண்டனர்.

மார்கழி மாதமேகம் வேறு மழையாகி இறங்கிக்கொண்டிருந்தது. குழந்தைகள், பெரியவர்கள், பெண்கள், தாய்மார்கள், எல்லோருக்கும் மழைசவந்நியே கொடுத்தது. நனை! நனை! நனை! அன்று நடந்தவர்கள் தான். மாலை மங்க வீடு போவதாய் எண்ணியவர்களின் ஆசை மங்கிப் போக இருபத்து ஆண்டுகளும் இன்னும் சில உதிரியாண்டுகளும் கடந்தாயிற்று வெறும் அகதி அந்தஸ்துடன்....

இப்போது போர் முடிந்த இலங்கைக்குள் மீள் குடியேற்றமும் வாழ்வாதார வசதிகளும் வழங்கப்படுகின்றதான ஊடகப் பிதற்றல்களுக்கு நடுவில் இந்த மக்களுக்குப் பூவா..... தலையா நிலைதான்.

சில பத்து வருடங்களுக்கு முன் அரச அறிவிப்பின் பேரில் வெளியேற்றப்பட்ட இம் மக்களை மீண்டும் அதே இடங்களில் குடியேற்றம் செய்தாயிற்று. காணி எது, பனைமரக்காடு எது, எல்லை எது, வீட்டுக்கொல்லை எது என்று அறிய முடியாத நிலையில் அங்கிருந்ததோ வெறும் பற்றைக்காடு. இந்த நிலையில் தமது காணிகளை கஷ்டப்பட்டு எல்லை வகுத்து அவர்கள் குடியேறியும் விட்டார்கள். இப்போது தொடரும் வீட்டுத் திட்டங்கள், விவசாய உதவிகள் உட்பட எல்லாவற்றுக்கும் அவர்கள் நெருக்கடி நிலையையே எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது.

கரைதுறைப் பற்று உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட இந்தப் பிரதேசம் இப்போது வெலிஓயா உதவி அரச அதிபர் பிரிவு என்றாகி அதனுள் கொக்கிளாய் கிழக்கு, மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் கிழக்கு, மேற்கு, மத்தி, வடக்கு, நித்தியாகுளம் குமுளமுனை முந்திரிகைக்குளம் தண்ணிமுறிப்புக்குளம் தென்னை மரவாடி கென்பாம் டொலர் பாம் போன்றனவும் இன்னும் சில அயல்சிங்கள கிராமங்களும் உள்ளடக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பிரதேச திணைக்களங்களுக்கு சிங்கள அதிகாரிகள் பணிக்கமர்த்தப்படுவதாகவும் இதனால் தமிழ் மக்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் அதிக சிரமங்களையும் எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தற்போது வெலிஓயா என்ற முன்னைய மணலாற்றுப் பிரதேச மக்களில் ஒரு பகுதியினர் கடற்தொழிலில் ஈடுபட்டாலும் அதிகமான மக்களின் ஜீவனோபாயத் தொழிலாக விவசாயம் காணப்படுகின்றது. இன்று அவர்கள் மீளக் குடியேறிய பின் தமது பரம்பரை விவசாய நிலங்களில் செய்கை பண்ண முடியாத நிலை காணப்படுகின்றது. பெரும்பான்மையின மக்களின் அத்துமீறலே இதற்குக் காரணம் ஆகும். குறித்த பிரதேச மக்கள் 1983.12.22 அன்று வெளியேற்றப்பட்ட பின்னர் அரச உதவியுடன் இந்த சிங்கள குடியேற்றங்கள் நிறுவப்பட்டு அவர்களின் வாழ்வாதார விவசாயத் தேவைக்காக இந்த நிலங்கள் செய்கை பண்ணப்படுகின்றன. எரிஞ்சகாடு கொக்குவெளி, முந்திரிகைக்குளம், குஞ்சுக்குளம் கூமாமாடித் தண்டல், அடையக்கறுத்தான் போன்ற தமிழ் கிராம விவசாய நிலங்களே இவ்வாறு பெரும்பான்மை சிங்கள விவசாயிகளின் வயல்நிலமாக மாற்றப்பட்டிருக்கின்றன. மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னரும் கூட அவர்கள் குறிப்பிட்ட அந்த விவசாய நிலங்களில் செய்கை பண்ண இன்னமும் கூட முழுதாக அனுமதிக்கப்படவில்லை.

அதே நேரம் வெலிஓயா உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட 9000 சிங்கள குடும்பங்களை தமிழ் பிரதேசங்களுடன் இணைத்து குடிப் பரம்பலின் தன்மையில் மாற்றத்தைக்காட்ட அரசு முயற்சிப்பதே இதன் பின்னணி எனவும் கூறப்படுகின்றது.

தற்போதைய வெலி ஓயா உதவி அரசாங்க அதிபர் பிரிவு முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் பதியப்பட்டால் முல்லைத்தீவில் சிங்களக் குடிகளும் வாழ்ந்தார்கள் என்ற ஒரு எண்ணப்பாடு எழுவதும் தவிர்க்க முடியாதது ஆக இலங்கையின் எப் பாகத்திலும் தமிழர்கள் தனித்து பூர்வீகமாக வாழவில்லை சிங்களவர்களும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் போருக்கு முன்னரும் வாழ்ந்தார்கள் என்று காட்டவும் அதன் மூலம் அதிகாரத்தை நிலை நாட்டவுமே அரசு முனைகிறதா என்ற கேள்வி ஒவ்வொரு தமிழனுக்கும் எழுவது நியாயமானது அது தவிர்க்க முடியாததுங்கூட

ஆனால் அதற்கும் சற்று மேலே போய் யுத்தகாலங்களில் எல்லைக் கிராமங்களாக காணப்பட்ட முன்னைய மணலாறு என்ற வெலிஓயா பிரதேசத்தில் சுமார் 500 வீடுகள் வரை அரச செலவில் கட்டிக்கொடுக்கப்படும் என அரசவீடமைப்பு மற்றும்பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்த கருத்தும் இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

வெலிஓயாப் பிரதேசத்தின் ஹெலிபாவென, கஜபாபுர, கலியான் பரும, மொணரவெல மற்றும் எதுகஸ்வெள ஆகிய பிரதேசங்களிலேயே அரசாங்கத்தினுடைய இந்த வீடமைப்புப் பணிகள் நடைபெறும் என்றும் ஒவ்வொரு வீடும் சுமார் 3லட்சம் பெறுமதியில் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அது மட்டுமன்றி, இப் பிரதேச மக்கள் போர்க் காலங்களில் அச்சம் காரணமாக இப் பிரதேசங்களை விட்டு தாமாகவே வெளியேறியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்போது பல்வேறு நாடுகளின் நிதியுதவியின் மூலமும் வேறு வசதிகள் மூலமும் வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டாலும் சிங்கள அதிகாரிகளையும் அவர்களது ஆதரவுடனான அத்துமீறல்களையும் தாண்டி இவர்களால் தம் வாழ்வை நிலைநிறுத்தக் முடியுமா? என்ற ஏக்கமும் எல்லைப்புறக் கிராமங்கள் தூண்டப்படுகின்ற முரண்பாடுகளுக்கும் வீண் சண்டைகளுக்கும் மத்தியில் தொடர்ந்தும் நிலைக்குமா என்ற தவிப்பும் எழுகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக நடைபெற்று முடிந்த போரினால் பாதிக்கப்பட்டது எல்லைப்புறக் கிராமங்களின் வெறும் 500 சிங்களக் குடும்பங்கள் மட்டும் தானா என்ற சந்தேகத்தை அரசின் எந்தத் திணைக்களத்திடம் கேட்டுத் தெரிந்து கொள்வது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ நிந்தனை செய்யாதே!

உனக்கொரு துன்பம் வரும்போது, அதனைத் தாங்கிக் கொள்ள முடியாமல், நீ தெய்வத்தை நிந்தனை செய்கிறாய்.

கடவுள், உன்மேல் ஏதோ விரோதம் கொண்டு, உனக்கு அடுத்தடுத்து துன்பங்களையே தருவதாக நினைக்கிறாய்.

உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் இன்ப துன்பங்கள் இயல்பானதென்று உணர்.

இறைவன் கருணையே வடிவானவன்.

அனைத்துயிர்களின் மீதும் இறைவன் தன் பேரருளைப் பொழிகிறான்.

நீ முற்பிறப்பில் செய்த வினைகளின் பயனே இந்தப் பிறவி.

இன்ப துன்பங்களும் அப்படியே.

"செய்த வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்"

என்பதொரு பழம் பாடல்.

உன்னை நீ உணர்வாய் வெற்றி உனதே! எனவே, நீ செய்த வினையே உன் துன்பத்திற்குக் காரணம்.

அதற்காக நீ இறை நிந்தனை செய்வது உன் பாவத்தைக் கூட்டுமே தவிர, துன்பத்தைத் தீர்க்காது.

உண்மையில் துன்பம் என்பதும் ஒரு வரப்பிரசாதமே.

இரும்பை, நெருப்பிலிட்டு எவ்வளவுக்கெவ்வளவு பழுக்கச் காய்ச்சுகிறோமோ, அப்போதுதான் இலகுவாக இரும்பை வளைக்க முடிகிறது.

நீ எண்ணிய வடிவத்தில் கருவிகளை உற்பத்தி செய்ய முடிகிறது. தங்கத்தை நெருப்பில் இட்டுக் காய்ச்சினால் தான் ஆபரணங்களைச் செய்ய முடிகிறது. அரிசியை நீரிலிட்டு, நெருப்பின் உதவியால் நன்கு கொதிக்க வைத்தால்தான், உண்பதற்கேற்ற உணவு கிடைக்கிறது.

உணவு தயாரித்தலை 'சமைத்தல்' என்பர்.

'சமைத்தல்' என்றால் பக்குவப்படுத்துதல்' என்று பொருள்.

அதாவது பக்குவப்படுத்துவதற்கு நெருப்பு தேவைப் படுகிறது.

அதுபோல், துன்பமாகிய நெருப்பே, மனிதனைப் பக்குவப்படுத்துகிறது.

துன்பத்தில் தான் நீ இறைவனை அடிக்கடி நினைக்கிறாய்.

இன்பத்தில் அவனை மறந்தே போகிறாய்.

துன்பத்தில் நீ அவனை நினைப்பதால், அவன் உன்னுடனேயே இருக்கிறான்.

உன் துன்பத்தைத் தீர்த்து வைக்க அவன் விரும்புகிறான்.

அதற்கான நேரம் வரும்வரை உன்னருகிலேயே இருந்து, பெரிய ஆபத்துகளிலிருந்து காக்கிறான்.

இன்பம் வந்தால் அவனை நினைப்பது கூட இல்லை.

ஆதலால் அவன் உன்னை விட்டு விலகுகிறான்.

ஆதலால் துன்பங்கள் வரும்போது இறைவன் உன்னுடன் இருப்பதாக எண்ணி மகிழ்ச்சி கொள்.

அடியவர்கள் வரலாறான பெரிய புராணத்தைப் படித்துப் பார்.

அவர்களுக்கு இறைவன் வைத்த சோதனை மிகக் கடுமையானது.

அவ்வாறு இருந்தாலும் அவர்கள் யாரும் இறைவனை நிந்தனை செய்ததே இல்லை.

மாறாக அவர்களுக்கு மேலும் மேலும் பக்தி பெருகியது.

இந்தப் பக்தி என்ற மாபெரும் சக்தியே துன்பத்தைத் தீர்க்கும் மாமருந்து.

அதை விடுத்து, இறைநிந்தனை செய்தால் பாவம் அதிகமாவதுடன் அதற்குரிய தண்டனையும் நிச்சயம் கிடைக்கிறது.

இதற்கு உதாரணம் சிசுபாலன் வதம்.

மகாபாரதத்தில் சிசுபாலன், கண்ணனை நிந்தனை செய்தான்.

நூறு பிழைகள் வரை பொறுத்தான் கண்ணன்.

அதற்கு மேலும் சிசுபாலன், கண்ணனை வசைபாட, தன் சக்கராயுதத்தால் அவனைக் கொன்றான் கண்ணன்.

தெய்வம் உன் பிழைகளை மன்னிக்கக் கூடியதே.

ஆனால் அதற்கும் ஓர் அளவுண்டு.

எனினும் இறை நிந்தனை என்னும் பாவத்திற்கான பலனை எப்பிறவியிலேனும் ஒருவன் அனுபவித்தே ஆக வேண்டும்.

ஆதலால் தெய்வ நிந்தனை செய்யாதே!



பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# வணிகர் வீரகத்தியின் முயற்சியால் உருவான அத்தியடி சிதம்பர நடராஜர் வீரகத்தி விநாயகர்



- லக்ஸ்மன்

ஆதிகாலம் தொட்டே யாழ்ப்பாணத்துக்கும் தமிழகத்துக்குமிடையே கடல்வழிப் பயணத்தினூடாக வாணிபத் தொடர்புகள் இருந்து வந்துள்ளன.

அவ்வாறான வாணிபத் தொடர்பில் வீரகத்தி எனப்படும் பெருவணிகர் ஒருவர் விநாயகப் பெருமானின் பக்தர். அவர் தமிழகம் செல்லும் போதெல்லாம் சிதம்பரத்துக்குச் சென்று அங்கு நடராஜப் பெருமானைத் தரிசித்துத் திரும்புவது வழமை. அங்கேயுள்ள நடராஜப் பெருமானின் ஆடல் காட்சிகளைக் கண்டு தன்னை மறந்து வழிபாட்டிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்.

இவருக்கு தனது குல தெய்வமான விநாயகரது ஆடல் உருவைக்காண வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டது. விநாயகரது ஆடல் காட்சி அடிக்கடி தோன்றி மறைவதால் ஆடலுடன் கூடிய விநாயகர் உருவத்தை அத்தியடி என்ற பகுதியில் வைத்து வணங்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்.

அத்தியடி அத்திமரங்கள் அடர்ந்த பகுதியாக இருந்தது. யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக நல்லூர் ஒரு சமயம் இருந்துள்ளது. நல்லூரின் தென்பகுதி அத்திமரங்கள் நிறைந்த சோலையாகக் காணப்பட்டது. இதனால் அத்தியடி என்னும் பெயரைப் பெற்றுக் கொண்ட இந்தக் கிராமத்தில் விநாயகருக்கு ஆலயம் அமைக்க வேண்டும் என எண்ணினார் வணிகர் வீரகத்தி. அவர் சிதம்பரத்தில் சிற்பாசாரியர்களை அணுகி தனது மனதில் உள்ள விநாயகரின் ஆடல் காட்சியைத் தெரிவித்து அவ்வாறான ஒரு விக்கிரகத்தைச் செய்வித்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வந்தார்.

16 அங்குல உயரம் கொண்ட அந்த விக்கிரகத்தைச் சுமந்து தமிழகக் கடற்கரையில் இருந்து கட்டு மரத்தினூடாக கொழும்புத்துறையை வந்தடைந்தார் அடியார் வீரகத்தி. அங்கிருந்து சைவப்பெருமக்கள் புடைசூழ அத்திமரத் தோப்பில் ஏற்கனவே தன்னால் துப்புரவு செய்யப்பட்ட காணியில் உள்ள அத்தி மரம் ஒன்றின் கீழ் சிறிய குடிசையை அமைத்து அதில் விநாயகரைக் குடியமர்த்தினார். அங்கு தினமும் வழிபாடு செய்து வந்தார். அந்தப் பகுதியில் உள்ள சைவப் பெருமக்களும் அன்று முதல் விநாயகரைத் தரிசித்து வழிபாடு செய்து வந்தனர்.

> சிதம்பர நடராஜர் கோயில் சுற்றாட லில் உருவாகிய பிள்ளையார் யாழ்ப்பாணம் அத்தியடி என்ற இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட் டது. இதனால் ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் என நாமம் கொண்டு அழைக்கப்படலானார்.

சிதம்பர விநாயகர் நடராஜர் கோயில் சுற்றாடலில் உருவாகிய பிள்ளையார் யாழ்ப்பாணம் அத்தியடி என்ற இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதனால் ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் என நாமம் கொண்டு அழைக்கப்படலானார். விநாயகரை அத்திமுகன் எனவும் அழைப்பதுண்டு. விநாயகரின் பெயரும் கிராமத்தின் பெயரும் ஒருங்கே அமைந்திருப்பதால் ஊர் மக்கள் அதனை ஒரு சிறப்பு அம்சமாகவே கருதுகிறார்கள்.

அத்தியடி சிதம்பர வீரகத்தி விநாயகரின் திருவூஞ்சல் பாடப்பட்டு சுமார் 112 வருடங்களாகின்றன. ஆறுமுகநாவலரின் மாணாக்கர் வழியில் கல்வி கற்று பெரும்புலமை பெற்ற வரும் ஆசார சீலருமான கந்தவனம் வைத்தியலிங்கம் என்பவர் இந்தப் பாடலை எழுதியுள்ளார். இதன்படி அந்த ஆலயம் 1837 இல் சிறிய குடிசையாக ஆரம்பிக்கப்பட்டது என்று கருத முடியும்.

குலதெய்வமான விநாயகரின் அருளினால் வணிகர் வீரகத்தியின் தொழில் மேன்மேலும் விருத்தியடையத் தொடங்கியது. தனது தொழிலின் மூலம் பெற்றுக் கொண்ட லாபத்தில் ஒரு பகுதியை விநாயகருக்கென ஒதுக்கி சிறிய குடிலாக இருந்த கோயிலை கற்கோயிலாகக் கட்டினார். இந்தத் திருப்பணிக்கு கிராமத்தைச் சேர்ந்த மக்களுடன் அயற்கிராமங்களான ஆனைப்பந்தி, ஆரியகுளம், இராசாவின் தோட்டம், நல்லூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மக்களும் தம்மாலான உதவிகளை வழங்கி கருவறை தூபியுடன் கூடிய மண்டபம் அமைத்து குடமுழுக்கும் செய்தனர்.

ஆலய அறங்காவலரான வீரகத்தியின் மறைவை அடுத்து, ஊர் மக்களும் அயலவர்களும் ஒன்று சேர்ந்து ஆலயத்துக்கான பணிகளை முன்னெடுத்தனர். விநாயகரைத் தொழுத மக்கள் அனைவரதும் வாழ்வும் சிறந்து விளங்க கோயிலுக்குத் தேவையான பொருள்கள், சாதனங்களை தமது சொந்தப் பணத்தில் வழங்கி உதவினர். கட்டுமானப் பணிகளும் அவ்வாறே இடம்பெற்றன. உதவிய மக்களில் பாவட்டங்காட்டுப் பொன்னம்பலம் என்ற வர்த்தகர் முதன்மையானவர்.

தனது வர்த்தகத்தில் கிடைக்கும் லாபத்தில்பெரும் பகுதியைப் பிள்ளையாரின் திருப்பணி வேலைகளுக்கே செலவிட்டு வந்தார். இவரது முயற்சியால் மகா மண்டபம், அர்த்த மண்டபம், சபா மண்டபம் என்பவை கட்டப்பட்டன. பல வருடங்களாக அலங்கார உற்சவமாக நடந்து வந்த வருடாந்த உற்சவம் பொன்னம்பலம் காலத்தில் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி பெருந்திருவிழாவாக இடம்பெற்று வந்தது. கொடிமரத்தைக் கோயிலுக்கு வழங்கிய வரும் இவரே. இந்தக் கொடிமரமே தற்போது கோயிலில் காட்சி தருகின்றது.

அத்தியடியைச் சேர்ந்த கே.குணரட்ணம் கோயிலின் பெரும்பாலான திரும்பணிகளை நிறைவேற்றியுள்ளார். காலஞ்சென்றவரான அத்தியடியைச் சேர்ந்த கோடீஸ்வரரான அவர் தமது செலவிலேயே திருக்குடமுழுக்கு நிகழ்வையும் இறைவனின் ஆசியுடன் மிகப் பெரிய அளவில் சிறப்பாகச் செய்து முடித்தார். அத்துடன் புதிய சப்பரத்தையும் சித்திரத்தேர் ஒன்றையும் அமைத்து வெள்ளோட்ட விழாவையும் நடத்தி வைத்தார்.

ஊர் மக்கள், வர்த்தகப் பிரமுகர்கள், முன்னைய மக்கள் ஆலயத்தின் சிறப்புக்காக மேற்கொண்ட திருப்பணிகளை மறக்காத இன்றைய மக்களும் இந்தக் கோயிலின் வளர்ச்சியிலும் திருப்பணி சேவைகளிலும் ஒன்றுபட்டு செயற்பட்டு வருகின்றனர். புதிய கல்யாண மண்டபம் அமைந்துள்ளதுடன் கடந்த ஆண்டில் (2011 இல்) பஞ்சதள ராஜ கோபுரமும் அமைக்கப்பட்டது. இதற்கு உள்ளூர் புலம்பெயர்ந்த மக்களின் உதவிகள் கிடைத்துள்ளன. இரண்டு மணிக் கோபுரங்கள் வீதிக்கான மணிமண்டபம் அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொண்டு அடிப்படையில் கோயில் பூசகர் நடராசா குருக்கள் கணேசராசா குருக்கள் தினசரிப் பூசைகளை உரிய காலத்தில் மேற்கொண்டு வருகின்றனர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் குறித்து எவரும் சர்வதேசத்திடம் முறையிடக் கூடாது

## தம்பலகாமம் மக்களை மிரட்டுகின்றனர் படையினர்

திருகோணமலை,டிசெ.25

திருகோணமலை, தம்பலகாமம் கிராம மக்கள், பாதுகாப்புத் தரப்பால் எச்சரிக்கப்பட்டுள்ளனர் என்று வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் போரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக குரல் கொடுக்கின்ற அமைப்பு ஒன்றின் தலைவி பி.பி.சியிடம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் பி.பி.சிக்கு மேலும் தெரிவித்ததாவது:-

தம்பலகாமம் கிராமத்தில் கடந்த காலங்களில் கடத்தப்பட்டு காணாமற் போனவர்கள் குறித்து உறவினர்கள் ஐ.நா உள்ளிட்ட சர்வதேச அமைப் புகளிடமோ அல்லது வேறு வெளிநாட்டு நிறுவனங்களிடமோ முறைப்பாடு செய்யக்கூடாது என்று இராணுவத்தினர் எச்சரித்துள்ளனர்.

**காணாமல்போனவர்களின் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் மிகவும் சிரமப்படுகின்றனர்.அந்தக் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க அரச அதிகாரிகள் முன்வரவேண்டும்.**

தம்பலகாமத்துக்கு நான்கு நாள்களுக்கு முன்னர் இராணுவ வாகனமொன்றில் சென்ற நபர்கள், விடுதலைப் புலிகளோடு தொடர்புடைய எவராவது அங்கு வசிக்கிறார்களா என்று தேடிச்சென்றுள்ளனர்.

**கப்பம் வாங்கியோரும் சுதந்திரமாக திரிகின்றனர்**

தமது கணவன்மாரும், பிள்ளைகளும் கடத்தப்பட்ட போது, அவர்களை விடுவிப்பதற்காக தம்மிடம் கப்பம் பறித்த ஆயுதக் குழுக்களைச் சேர்ந்த பலரும் எந்தவிதமான பிரச்சினைகளுமின்றி நடமாடிவருகின்றனர்.

கடத்தப்பட்டு காணாமற்போனவர்களின் குடும்பத்தவர்கள் பொருளாதார ரீதியில் மிகவும் சிரமப்படுகின்றனர். அந்தக் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க அரச அதிகாரிகள் முன் வரவேண்டும்.

2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆயுதக் குழுக்களால் கடத்தப்பட்டு காணமல்போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் எமது அமைப்பில் அங்கம் வகிக்கின்றனர்.- என்றார்.

இதேவேளை தம்பலகாமம் பகுதியில் மக்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சம்பவம் பற்றி படைத்தரப்பின் கருத்துக்கள் கிடைக்கப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# ஜோசப் பரராசசிங்கத்தின் நினைவுதின நிகழ்வு இன்று

எருவில்,டிசெ.25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ஜோசப் பரராசசிங்கத்தின் 7ஆவது நினைவு தின நிகழ்வும், அஞ்சலிக் கூட்டமும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.



இந்தநிகழ்வு பிற்பகல் 4 மணிக்கு மட்டக்களப்பு, நல்லையா வீதியில் அமைந்துள்ள கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இந்த நினைவஞ்சலி நிகழ்வில் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் , பொது மக்கள் என அனைவரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துமாறு அவர் கேட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்தி ஜோசப் பரராசசிங்கத்தை கொலை செய்தவர்கள் எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி கிறிஸ்தவ தேவாலயத்தில் நத்தார் ஆராதனையின்போது தமிழ்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ஜோசப் பரராசசிங்கம் சுட்டுக் கொள்ளப்பட்டமை தெரிந்ததே. (ச-31)

# இரட்டைக் கொலைச் சந்தேகநபர் இனந்தெரியாத குழுவால் கடத்தல்

இரத்தினபுரி,டிசெ.25

கஹவத்த, கொடகேதெனயில் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேக நபர் ஒருவர் இனந்தெரியாத குழு ஒன்றினால் கடத்தப்பட்டுள்ளார்.

கஹவத்தையில் தாய், மகள் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் கடந்த சனிக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களினால் குறித்த நபர் கடத்தப்பட்டதாக அவரது மனைவி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அருகிலுள்ள கடைக்கு சென்று திரும்பும் போதே இனந்தெரியாத நபர்கள் தனது கணவனை கடத்திச் சென்றுள்ளதாக தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்தச்சம்பவம் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)



சாய்ந்தமருது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தில் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலமும் துண்டுப் பிரசுர விநியோகமும் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

# தமிழரசுக் கட்சியின் எதிர்கால செயற்பாடு குறித்து ஆராய்வு



மட்டக்களப்பு,டிசெ.25

தமிழரசுக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதிக்கான விசேட கூட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை களுவாஞ்சிக்குடி, இராசமாணிக்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் எதிர்கால செயற்பாடு தொடர்பாக ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேத்திரன், செல்வராசா,மாகாணசபை உறுப்பினர்களான துரைராஜசிங்கம், நடராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

**கந்தளாய் குளம் நிரம்பி வழிகிறது**

# இரு வான் கதவுகள் திறப்பு; சிறு குளங்கள் பெருக்கெடுப்பு



திருகோணமலை,டிசெ.25

கந்தளாய் குளத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டதால் ஈச்சங்குளம், குடாக்கல்பிட்டிய, பரவிப்பாஞ்சான் ஆகிய சிறு குளங்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பெருக்கெடுத்துள்ளன.

இதன் காரணமாக தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அக்குரபஞ்சியாய், முள்ளிப்பொத்தானை, ஹமீதியாபுரம், ஈச்சநகர், புஹாரிநகர் ஆகிய பிரதேச மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கந்தளாய் குளத்தில் வான் கதவு திறந்து விடப்பட்டதால் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கிண்ணியா- கந்தளாய்க்கான தரைவழிப்பாதை முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

யான்ஓயா பெருக்கெடுத்துள்ளதால் திருகோணமலை மாவட்டத்தில் பல வீதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

இந்த வீதிகளைப் பயன்படுத்துவோர் மாற்றுப் பாதையை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ச)

# கிழக்கில் மீண்டும் மழை; பல இடங்களில் வெள்ளம்

## பல இடங்களில் வழிப் போக்குவரத்து துண்டிப்பு

எருவில்,டிசெ.25

கிழக்கு மாகாணத்தில் மீண்டும் பெய்துவரும் அடைமழையை அடுத்து மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு தொடக்கம் பெய்துவரும் மழையால் மக்களுக்கான உணவு, குடிதண்ணீர் மற்றும் மருந்துப் பொருள்களைக் கொண்டுசெல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

**திருகோணமலையில்**

தொடர்ந்து பெய்துவரும் மழையால் மூதூர், கிண்ணியா, தம்பலகாமம், வெருகல், முள்ளிப்பொத்தானை, ரொட்டுவாவ முதலான பிரதேசங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

மூதூர் பிரதேசத்தின் ஹைறியா நகர், சந்தன வெட்டை, வேதத்தீவு முதலான பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வெருகல் பிரதேசத்தில் கங்குவேலி, மாவடிச்சேனை, சேனையூர், பூநகர் முதலான கிராமங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

இந்தப் பிரதேசத்திலுள்ள மக்கள் தமது இருப்பிடங்களை [illegible] பாடசாலைகளிலும் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் தங்கி உள்ளனர்.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் கிரான், சின்னக்கிரான், மஜீத்நகர், சோலைவெட்டுவான், கல்லறப்பு, பூவரசந்தீவு, ஈச்சந்தீவு, மயிலடப்பஞ்சேனை முதலான கிராமங்கள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளன.

தொடர்ச்சியான மழையை அடுத்து ஆடு, மாடு முதலான கால்நடைகள் குளிரினால் பாதிக்கப்பட்டுள்ளன. கால்நடைகளுக்குபோதியளவு மேய்ச்சல் கிடைப்பதில்லை என்று பண்ணையாளர்கள் கூறுகின்றனர்.

**பஸ் போக்குவரத்து பாதிப்பு**

தொடர்ச்சியான மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஹபரணை, மன்னம்பிட்டிய வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதன் காரணமாக மேற்படி இடங்களுக்கான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. எனினும், மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கான மாற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

[illegible], ஹபரண பகுதிகளில் வெள்ளப் பெருக்கு அதிகரித்துள்ளதால் இந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் விழிப்புடன் இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

**மட்டக்களப்பில்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழையால் 19,502 குடும்பங்களைச் சேர்ந்த 72,603 பேர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், ஓட்டமாவடி பிரதேச செயலர் பிரிவில் 6,900 குடும்பங்களைச் சேர்ந்த 24,026 பேரும், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலர் பிரிவில் 6,248 குடும்பங்களைச் சேர்ந்த 27,123 பேரும், வாழைச்சேனை பிரதேச செயலர் பிரிவில் 6,354 குடும்பங்களைச் சேர்ந்த 21,454 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அந்தந்தப் பிரதேச செயலர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, ஓட்டமாவடி பிரதேசசபைத் தலைவர் கே.பி.எஸ்.ஹமீட்டின் தலைமையில் வெள்ளநீர் வழிந்தோடுவதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.(ச-30-31-40)

# பல் பிடுங்கிய சிறுமிக்கு வலிப்பு மருந்து!

கண்டி,டிசெ.25

பல்லை பிடுங்கிக் கொண்ட சிறுமிக்கு வைத்தியரால் எழுதிக் கொடுக்கப்பட்ட மருந்துக்குப் பதிலாக வலிப்புக்கான மருந்தை கொடுத்த மருந்தகம் ஒன்றைச் சேர்ந்த மூவரைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

கண்டி, பேராதனை வீதியிலுள்ள மருந்தகத்தைச் சேர்ந்த மருந்தக உரிமையாளர் உள்ளிட்ட மூவரையே பொலிஸார் ஃகைது செய்துள்ளனர்.

வைத்தியர் எழுதிக் கொடுத்த மருந்துக்கு பதிலாக மாற்றி மருந்தை கொடுத்தமையினால் பாதிக்கப்பட்ட சிறுமி (வயது-9) மேலதிக சிகிச்சைகளுக்காக பேராதனை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. யாரையும் நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். வியாபாரத்தில் பழைய பொருள்களை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

**இடபம்:** முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம். உறவினர், நண்பர்களுடன் மனக்கசப்புகள் ஏற்படும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.

**மிதுனம்:** சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**கடகம்:** துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் குறையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். தாயாரின் நீண்ட நாள் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வீர்கள். பெண்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

**சிங்கம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். மாணவர்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள்.

**கன்னி:** எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். உதவி கேட்டு உறவினர்களும் தர்மசங்கடத்துக்கு ஆளாக்குவார்கள். உங்களின் திறமையைச் சிலர் குறைத்து மதிப்பிடுவார்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும்.

**நாளை**

மார்கழி -11 புதன்கிழமை 26.12.2012
திதி: திரயோதசி பி.ப. 12.03வரை
நட்சத்திரம்: ரோகிணி பி.இ. 01.18 வரை
சுபநேரம்: 04.57- 06.27 வரை
ராகுகாலம்: 12.27- 01.57 வரை

**துலாம்:** உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும்.

**விருச்சிகம்:** ஆரவாரமின்றி சில வேலை களை முடிப்பீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபார ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். பெண்கள் பெற்றோரின் சொல்படி கேட்டு நடப்பார்கள்.

**தனுசு:** மனக்குழப்பங்கள் நீங்கும். நம்பிக்கைக்குரியவர்களின் ஆதரவு கிட்டும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். மாணவர்களின் அறிவுத் திறன் மேம்படும்.

**மகரம்:** அதிரடியாகச் செயற்பட்டு சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் வெற்றியுண்டு.

**கும்பம்:** நீண்ட நாள்களாக முடியாமல் இழுத்தடித்த காரியங்களெல்லாம் இனி முடிவுக்கு வரும். பிள்ளைகளின் நீண்ட நாள் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வீர்கள். அரச வேலைகளில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

**மீனம்:** மன உளைச்சல் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மகிழ்ச்சியுண்டு. நட்பு வட்டம் விரிவடையும். மாணவர்களின் நினைவாற்றல் பெருகும். முன்கோபம் விலகும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | | | | 4 | | 3 | |
| | 2 | 3 | 6 | | 5 | | 4 | |
| | | | | 2 | | | 7 | 5 |
| | 4 | | | | | | | |
| 2 | | | | | | | | |
| 6 | | 9 | | | | | | |
| 9 | 5 | | | 6 | | | | |
| | 6 | | 5 | | 3 | 4 | 2 | |
| | 7 | | 9 | | | | 6 | 1 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 4 | 7 | 9 | 5 | 6 | 1 | 3 |
| 5 | 7 | 3 | 2 | 6 | 1 | 8 | 4 | 9 |
| 1 | 9 | 6 | 4 | 8 | 3 | 5 | 2 | 7 |
| 8 | 2 | 7 | 1 | 4 | 6 | 3 | 9 | 5 |
| 9 | 4 | 5 | 3 | 2 | 7 | 1 | 6 | 8 |
| 3 | 6 | 1 | 9 | 5 | 8 | 4 | 7 | 2 |
| 6 | 3 | 2 | 5 | 1 | 9 | 7 | 8 | 4 |
| 4 | 5 | 8 | 6 | 7 | 2 | 9 | 3 | 1 |
| 7 | 1 | 9 | 8 | 3 | 4 | 2 | 5 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ


# 31 ஆம் நாள் நினைவலைகள்



அமரர்

## சிவசுப்பிரமணியம் சிவயோகராஜன்

(உரிமையாளர் - மணியம் இம் பெக்ஸ், யாழ்ப்பாணம்)

மலர்வு
23.09.1952

உதிர்வு
24.11.2012

நேசத்துடன் எமை வளர்த்து நேர்வழியில்
வாழவைத்த எம் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கருவப்புலம் வீதி,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

(22131)(45-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகம் முழுவதும் வாழ்கின்ற கிறிஸ்தவர்கள் நத்தார் பண்டிகையை இன்று செவ்வாய்க்கிழமை கொண்டாடுகின்றனர். இந்நிலையில் கொழும்பில் நத்தார் பண்டிகைக்கான வியாபாரம் நேற்றுச் சூடுபிடித்திருந்தது. சைப்பிரஸ் மரங்களின் விற்பனையும் மும்முரமாக நடைபெற்றது.

## ரயிலுடன் வான் மோதி சாரதி சாவு

கொழும்பு,டிசெ.25

சொகுசு வான் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் வாகன சாரதி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் வாதுவ தல்பிட்டிய என்னும் இடத்தில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது. சுற்றுலாத்துறையினரை ஏற்றிக்கொண்டு ஹோட்டலுக்குச் செல்லும்போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் மினுவங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். வத்துவ பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# வெலிக்கடை சிறையில் சுழல்முறைத் துப்பாக்கி

கொழும்பு,டிசெ.25

வெலிக்கடை சிறைச்சாலையில் ரி 56 துப்பாக்கிகளுக்கு பதிலாக இயக்குவதற்கு சுழல்முறை துப்பாக்கிகளை வைத்திருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஜி. எஸ். வித்தானகே தெரிவித்தார்.

சிறைச்சாலையில் வன்முறைகள் ஏற்படும்போது கைதிகளால் ரி56 துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டால் அதன் மூலம் அதிக சேதங்கள் ஏற்படக்கூடும் என்று அவர் கூறினார்.

ஆனால் சுழல்முறை துப்பாக்கியின் மூலம் ஒரே தடவையில் 6 ரவைகளை மாத்திரமே வெளியாக்க முடியும்.

அதனால் பாதிப்புக்கள் குறைவாக இருக்கும் என்ற அடிப்படையிலேயே அவற்றை சிறைச்சாலையில் வைத்திருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

சுழல்முறை துப்பாக்கியின் மூலம் 25 மீற்றர் தூரத்துக்கே ரவைகளை செலுத்த முடியும்.

எனினும் ரி56 ரக துப்பாக்கியின் மூலம் 800 மீற்றருக்கு ரவைகளை செலுத்த முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## வேகத்தடை சமிக்ஞை பலகை ஜனவரி முதல் பொருத்தப்படும்

**வீதி அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் கூறுகிறார்**

கொழும்பு,டிசெ.25

வேகத் தடை சமிக்ஞை பலகைகள் அடுத்த மாதம் முதல் நாட்டில் பொருத்தப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் ஆர்.டபிள்யு. ஆர். பிரேமசிறி தெரிவித்தார்.

வேகக் கட்டுப்பாடு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. உயர்நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து 4 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த வேகக் கட்டுப்பாடு அகற்றப்பட்டிருந்தது என்று அவர் கூறினார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை வேகக் கட்டுப்பாடு தொடர்பான சமிக்ஞை பலகைகளைத் தயாரித்துள்ளது என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் எஸ். எம். ஹரிச்சந்திர தெரிவித்தார். (ச)

# நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து முட்டுக்கட்டைக்கு முடிவு காணுங்கள்

**இடதுசாரித் தலைவர்கள் ஜனாதிபதிக்கு யோசனை**

கொழும்பு, டிசெ. 25

நாடாளுமன்றத்தை தற்காலிகமாக ஒத்தி வைக்கும்படியும் இடைக்கால அவகாசத்தில் இப்போது நீதித்துறைக்கும் சட்டம் இயற்றும் துறைக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சிக்கலை தீர்த்துக் கொள்ளும் படியும் அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சிகளின் மூன்று தலைவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கேட்டுள்ளனர்.

சமசமாஜ கட்சியின் தலைவர், திஸ்ஸ விதாரண, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டி.ஈ. டபிள்யூ குணசேகர மற்றும் ஜனநாயக இடது சாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணாயக்கார ஆகியோரே இந்த அவசர கோரிக்கையை கூட்டாக விடுத்துள்ளனர்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி நீக்கம் செய்வதற்காக கொண்டு வரப்பட்டுள்ள குற்றப் பிரேரணை தொடர்பாக இன்று நாட்டில் அதிகரித்து வரும் பரபரப்பான சூழ்நிலையை நாடாளுமன்றத்தை தற்காலிகமாக ஒத்திவைப்பதன் மூலம் தணிக்கச் செய்ய முடியும் என்றும் அவர்கள் யோசனை தெரிவித்துள்ளனர்.

தற்காலிக ஒத்திவைப்பின் காரணமாக இப் போது நிலுவையிலுள்ள சபையின் பணிகள் யாவும் முடிவுக்கு வரும். அந்த நிலையில் நிலையியல் விதிகளில் திருத்தம் செய்வதற்கு அரசுக்கும் ஜனாதிபதிக்கும் அவகாசம் கிடைக்கும். அதேசமயம் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச் சாட்டுக்களை விசாரிப்பதற்கான சுயாதீனமான ஒரு சபையை நியமிப்பதற்கு ஏற்பாடுகளை செய்து கொள்ளவும் முடி யும் என்று இவர்கள் யோசனை தெரிவித்திருப்பதாக தெரிய வந்துள்ளது.

அவ்வாறான சுயாதீன சபையினால் பிரதம நீதியரசர் தவறாக செயல்பட்டுள்ளார் என்று கண்டறியப்படுமானால் அவரை பதவி நீக்கம் செய்யலாம் என்று அக்கட்சிகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் சபாநாயகர் இந்த மாதம் முற்பகுதியில் வழங்கிய தீர்ப்பொன்றில் உயர் நீதிமன்றத்தினால் தம் மீதும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் உறுப்பி னர்கள் மீதும் வழங்கப்பட்டிருந்த அறிவித்தல்களை நிராகரித்திருந்ததுடன் அக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக அவ்வாறான அறிவுறுத்தல்கள் அல்லது கட்டளைகள் விடுக்கப்பட்டாலும் இந் தத் தீர்ப்பு அனைவருக்கும் பொருந்தும் என்றும் தெரிவித்திருந்தார்.

"இருந்த போதிலும் மேல் முறையீட்டு நீதிமன்றமானது கடந்த வெள்ளியன்று சபாநாயகர், தெரிவுக்குழு உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியவர்கள் மன்றில் முன்னிலையாக வேண்டும் என்று அறிவித்தல் ஒன்றை விடுத்தது.

இது பற்றி மேற்படி கட்சிகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கையில்; நீதிமன்றம் சபாநாயகரின் தீர்ப்பை கவனத்தில் எடுத்துள்ள போதிலும் அறிவுறுத்தலை விடுத்திருப்பதானது இந்த விடயத்தில் நாம் முட்டுக்கட்டையான ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்" என்றார்.

நாடாளுமன்ற அலுவலர் ஒருவர் தெரிவிக்கையில்; "நீதிமன்ற அறிவுறுத்தல்கள் கிடைத்திருக்கின்றன. செயலாளர் நாயகம் நீதிமன்றின் முன் தோன்றுவாரா இல்லையா என்பது சபாநாயகருடன் கலந்தாலோசித்த பின்னர் முடிவு செய்யப்படும்" என்று தெரிவித்தார்.

ஜனாதிபதி விரும்பினால் இரண்டு மாத காலத்துக்கு நாடாளுமன்றத்தை ஒத்தி வைக்க முடியும். ஆனால் இது வரைக்கும் ஜனாதிபதி இந்த யோசனை பற்றி எதுவித கருத்தும் வெளியிட்டிருப்பதாகத் தெரியவில்லை. (ப)

## தொழிலாளர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதில் அரசு உதாசீனம்

**ஜயலத் ஜயவர்தன எம்.பி.குற்றச்சாட்டு**



கொழும்பு,டிசெ.25

தொழிலாளர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதில் அரசு உதாசீனப் போக்கைப் பின்பற்றி வருகிறது. இதுதொடர்பில் நாடாளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் குரல் கொடுக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுச் செல்லும் இலங்கையர்களது உரிமைகளை உறுதி செய்யக் கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதிகளவில் நாட்டுக்கு அந்நிய செலாவணி வருமானத்தை ஈட்டித்தரும் வெளிநாட்டு பணியாளர்களை அரசு உதாசீனம் செய்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

எனவே வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்வோர் தொடர்பில் அரசு கவனம் செலுத்துவதில்லை என்று அவர் தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் பிரகடனங்களை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசு தயக்கம் காட்டி வருகிறது என்று அவர் மேலும் கூறினார்.(ச)

# நிவாரணம் வழங்கினார் நாமல் எம்.பி.

கொழும்பு,டிசெ.25

அம்பாந்தோட்டையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வழங்கியுள்ளார்.

அம்பாந்தோட்டையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அவர் சென்று மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். (ச)

## ஒரு லட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் இரட்டைக் குடியுரிமையை கோருகின்றனர்

**குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் சொல்கிறார்**

கொழும்பு,டிசெ.25

ஒரு லட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் இரட்டைக் குடியுரிமை கோரி வருகின்றனர் என்று குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாட்டு குடியுரிமை பெற்றுக்கொண்ட இலங்கையர்களே இவ்வாறு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் ஊடாக இரட்டைக் குடியுரிமைக்காக விண்ணப்பித்துள்ளனர்.

எனினும், தமது கோரிக்கைக்கு குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் சாதகமான பதில் எதனையும் அளிக்கவில்லை என்று வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

வெளிநாட்டு குடியுரிமை பெற்றுக் கொண்ட இலங்கையர்களுக்கு 30 நாள் விசாவே வழங்கப்படுகின்றது. இதற்காக 50 அமெரிக்க டொலர் அறவீடு செய்யப்படுகின்றது.

வீசா காலம் முடிவடைந்ததன் பின்னர் தங்கியிருந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்



படுகின்றது. எனவே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் புதிய சட்ட திருத் [illegible] என்றார். (ச)

## தேர்தல் தொகுதிகளை மறுசீரமைக்க குழுக்கள்

**நியமித்தார் உள்ளூராட்சி அமைச்சர்**

கொழும்பு,டிசெ.25

இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல்கள் சட்டத்துக்கு அண்மையில் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின்படி, தேர்தல் தொகுதிகளை மறுசீரமைக்க ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட தேசிய குழுவை உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா நியமித்துள்ளார்.

இதற்கமைய நாடுமுழுவதிலும் உள்ள 22 தேர்தல் மாவட்டங்களிலும் மாவட்ட [illegible] அமைக்கப் [illegible]

தொகுதி மறுசீரமைப்புக்கான தேசிய குழுவுக்கு ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை முன்வைக்கவுள்ள மாவட்ட குழுக்களில் அரச அதிகாரிகள் மட்டுமே உறுப்பினர்களாக இருப்பர்.

தேர்தல் திணைக்களம், நில அளவை திணைக்களம், சனத்தொகை புள்ளிவிவர திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களின் பிரதிநிதிகளே மாவட்ட குழுக்களில் அங்கம் வகிப்பார்கள்.

இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்டம் அண்மையில் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பொலிஸ்காரர் விபத்தில் சாவு

கொழும்பு,டிசெ.25

காலி, தடள்ள பகுதியில், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் அக்குரஸ்ஸ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவரே உயிரிழந்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபான விற்பனை நிலையங்கள் இன்றும் வியாழனும் மூடப்படும்

யாழ்ப்பாணம்,டிசெ.25

நத்தார் பண்டிகை மற்றும் போயா விடுமுறை தினத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை மறு தினம் வியாழக்கிழமையும் சகல மது பான விற்பனை நிலையங்களும் மூடப் படும் என்று யாழ்.மதுவரித் திணைக் கள அத்தியட்சகர் என்.சோதிநாதன் தெரிவித்துள்ளார்.

பண்டிகை மற் றும் விடுமுறை தினங்களில் மதுப் பிரியர்களால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளைத் தவிர்க்கும் நோக் குடன் மதுவரித் திணைக்களத்தால் சகல மதுபான விற் பனை நிலையங் களும் மூடப்பட வேண்டும் என அறி வுறுத்தப்பட்டு வரு கிறது. இதற்கமை வாக இன்று செவ் வாய்க்கிழமை நத்தார் பண்டிகை என்பதாலும், நாளை மறுதினம் வியாழக்கிழமை போயா தினம் என் பதாலும் இரு தினங் களும் மதுபான நிலையங்கள் மூடப் பட வேண்டும்.

இதனை மீறும் மதுபான நிலை யங்களின் உரிமை யாளர்களுக்கு எதி ராக சட்ட நடவ டிக்கைகள் மேற் கொள்ளப்படும் எனவும் தெரிவித் துள்ளார். (ம-14)

## பறந்துபோன பத்தாண்டுகள்



மண்ணில்
01.10.1982

விண்ணில்
25.12.2002

செல்வி
### சோபியா ஜொய்சி மகேந்திரன்

அன்பு கமழும் மென்மையான அனுபவம் எல்லாம்
அழகு வாய்ந்த இனிமையான நினைவுகள் எல்லாம்
உன்னால் அன்றோ நாங்கள் கண்டோம்
தொலைத்து விட்டு ஏங்குகின்றோம்.

148, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி. (C/5061)(2.6)

மகேந்திரன் குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
14.05.1936



மறைவு
25.11.2012

அமரர் **மருதலிங்கம் பரமேஸ்வரி**

கடந்த 25.11.2012 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி மருதலிங்கம் பரமேஸ்வரி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (25.12.2012) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற வுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (26347)(6.11)

குடும்பத்தினர்.


## நச்சுத்தன்மையற்ற நுளம்பு Trapper

உங்களுக்கு பிரியமானவர்களை பயங்கர நுளம்புகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளுங்கள்

- பயனுள்ள வாழ்நாள் முதலீட்டு செலவு.
- அபாயகரமான அதிசக்தி வாய்ந்த மருந்துகளின் தாக்கத்தில் இருந்து மனித உடலை பாதுகாத்து ஓர் சிறப்பான சூழலை ஏற்படுத்தக்கூடியது.
- சுவாசத்தில் தடை ஏற்படுத்தல், ஒவ்வாமை, உடலில் வெளி பொருள் நுழைவதால் ஏற்படும் எதிர் விளைவுகள் என்பன ஏற்படாது.
- இவ்வுபகரனம் குழந்தைகள் மற்றும் ஆஸ்துமா நோயாளிகள், முதியோர் ஆகியோருக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது.
- இவ்வுபகரணம் Ultraviolet light trap, Human breath trapping, air-trapping ஆகியவற்றினை ஒன்றிணைக்கப்பட்டதாக காணப்படும்.

மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் நுளம்புகளிலிருந்து உங்கள் குடும்பத்தை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

- Kingsley - Jaffna - Free delivery Tel: 077 3413817
- Venkedeswara - Vavuniya Tel: 024 2222418
- Viga Stores - Pesalai Tel: 060 2230405
- New City Point - Mannar Tel: 0715 125903




(C/2757) (2.6)

MANTHRAA IMPORTERS
Call us : 077 3670828 ranil@manthraa.com



## Room தேவை

யாழ்.பேருந்து நிலையத்திலிருந்து எத்திசையிலாவது 2 கிலோ மீற்றருக்கு உட்பட்ட தூரத்தில் தனி Room தேவை.
தொடர்பு: 0756837683 (27198)(2.6)



## IELTS A1 B1 B2

02/02/2013 Exam in Jaffna Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre


## INTERNATIONAL CHRISTIAN MISSION MINISTRY சார்பில் கிறிஸ்மஸ் தின ஆராதனை

"பயப்படாதிருங்கள்!

இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்"

லூக்கா 2:10,11

ஜேர்மனி,சைப்பிரஸ்,லெபனான்,யோர்தான்,இஸ்ரவேல்,டுபாய், சாஜா,அபுதாபி, இந்தியா,சுவிஸ்,லண்டன், இலங்கை போன்ற நாடுகளில் அமைந்துள்ள Church of Crist (I.C.M.M)தலைமைப் போதகரும், உலகம் முழுவதும் வல்லமையைப் பயன்படுத்தப்படும் அப்போஸ்தலரும், தீர்க்க தரிசியுமான Rev.DANIEL அவர்களின் தலைமையில் நடைபெறும்.

காலம்: 25.12.2012 (செவ்வாய்க்கிழமை)

நேரம்: பி.ப. 2.30

இடம்: கிறிஸ்துவின் சபை (Church of Crist) 418, நாவலர் வீதி, மாம்பழச் சந்திக்கு அருகில், அரியாலை, யாழ்ப்பாணம்.

விசேஷ அறிவித்தல்:

31.12.2012 அன்று புதிய ஆலய பிரதிஸ்டையும் புதுவருட ஆராதனையும். Church of Crist இல.95, பழைய நீர்கொழும்பு வீதி, ஜாஎல, கொழும்பு. என்ற இடத்தில் நடைபெறும். அவ்வேளையில் தேசங்களுக்கான தீர்க்க தரிசனங்களும் தனி நபர்களுக்கான தீர்க்க தரிசனங்களும் வாக்குத் தத்த ஆராதனையும் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிறிஸ்துவின் சபை நிர்வாகத்தினர். 021 222 6821

## மரண அறிவித்தல்

### தம்பையா இராசதுரை

(முன்னாள் பொறியியலாளர் - லண்டன்)

சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாக வும் கொண்ட தம்பையா இராசதுரை 22.12.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் சகோதரரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) மைத்துனரும், மங்கையர்க்கரசி - சந்திரசேகரம் (கனடா), சறோஜா - மனோகரன் (லண்டன்), நித்தியானந்தராசா - ராதா (லண்டன்), கலாதேவி - ரட்ணசிங்கம் (கனடா) ஆகியோரின் மாமனும். ரவிச்சந்திரன் - ராஜவதனி, சுகந்தி - சதீஸ், சிவச்சந்திரன், ஆஷா, உமேஷ், கீர்த்தனா, அனுஷன், சாமந்தி, சாதனா ஆகியோரின் பேரனும் அஸ்னி, விதுஷன், அஸ்னா ஆகியோரின் பூட்டனும், கனகலிங்கம் -பரமேஸ்வரியின் உடன்பிறவாத சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (25.12.2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் தகனக்கிரியைக்காக காலையன் புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி. (27188) (45.6.7) தகவல்: குடும்பத்தினர்.


## வீடு வாடகைக்கு

முல்லைத்தீவு பட்டணத்தில் ½ மைல் சுற்றாடலில் கச்சேரி, ஆஸ்பத்திரி, ஆலயங்கள், அரசாங்கக் காரியாலயங்கள் அருகில் 1500 சதுர அடி பரப்பளவு கொண்ட சகல வசதிகளுடன் அமைந்த வீடு வாடகைக்குண்டு. Lodge ஆகவோ நிறுவனமாகவோ உபயோகிக்கலாம்.
தொடர்பு : ந. ஸ்ரீஇளஞ்சிங்கநாதன், வற்றாப்பளை, முள்ளியவளை -077 926 8455 (27176)(6.11)

## iPhone Lock உடைத்துத் தரப்படும்

iPhone 5/ iPhone 4S Lock உடைத்துக் கொடுக்கப்படும். எந்த நாட்டு iphone ஆக இருந்தாலும் lock உடைத்துத் தரப்படும்.
தொடர்பு : 077779 4324 (C/27336)(6.11)

## கோழிக் குஞ்சு விநியோகம்

புறோயிலர் நியு பேனாட் (New Bernard) (NO -1) குஞ்சுகள் விநியோகம். பதிவுகளை 27.12.2012 க்கு முன் மேற்கொள்ளவும்.
✱வளர்ந்த கோழிகள் திரும்பப் பெறப்படும்.
சிக்கன் பாம்
மீசாலை, சாவகச்சேரி.
T.P - 0777 366 784 (18094) (6.7.4)


## திருநெல்வேலி-அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம் ஆலய உதவியாளர்கள் தேவை

ஓய்வுபெற்றவர்கள் அல்லது 45வயதுக்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

நிர்வாகம்
ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(தொடர்பு: தாஸ் கடை, கலாசாலை வீதி) (27184)(5-6)


## வேலை ஆள்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு விற்பனையாளர் உடன் தேவை.
தங்குமிட வசதியுண்டு.
ஆண்கள்-வயது-18 - 23 வரை
தொடர்பு : 11A,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். - 021 222 3857 (27179)(6.11)

## Basic English with spoken

G.C.E(O/L) பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட ஆங்கில கற்கை 3 மாத கால பயிற்சி

- English vocabulary
- Reading Skills
- ஆங்கிலம் சரளமாக பேசுவதற்கான நவீன கற்பித்தல் வழிமுறைகள்
- English Writing skills with basic Grammar
- பயிற்சி நெறியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
- கொழும்பு ஆசிரியர்களால் விரிவுரைகள் வழங்கப்படும்

இலவசம் சான்றிதழுடன் கணினி பயிற்சி நெறி / ஆசிய அபிவிருத்தி வங்கியின் புலமைப் பரசில் / மகளிர்களுக்கான அழகுக்கலைப் பயிற்சி (27185) (2.6)

பயிற்சி நெறிகள் நடைபெறும் இடம்
International Knowledge Pool

| | |
|---|---|
| 19,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம் (மக்கள் வங்கி 3வது மாடி) | இளந்தொண்டர் சபை மண்டபம் இணுவில் கந்தசாமி கோவில் |
| கலைவாணி கல்வி நிலையம் கைதடி-மானிப்பாய் வீதி,கோப்பாய் | வதிரி வீதி, உடுப்பிட்டி உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அருகில் |

மேலதிக விபரங்களுக்கு: ☎2221864 / 0771895164


## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### கணவதிப்பிள்ளை குணசிங்கம்



அன்னை மடியில்
13.07.1933

சிவனடியில்
24.12.2004

திதி: திரயோதசி
[25.12.2012]

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
நேசத்துடன் வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய எம் அப்பாவே
உங்கள் நினைவுகளில் மிதக்கின்றோம் அய்யா

44/2,மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம். (27187) (5.6)

பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் தொற்றுநோய்கள்

## அவதானமாக இருக்க மக்களை கோருகிறது சுகாதார அமைச்சு

கொழும்பு,டிசெ.25

மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பரவும் வயிற்றோட்டம் மற்றும் தொற்று நோய்கள் தொடர்பில் மக்கள் அவதானம் செலுத்த வேண்டும் என்று சுகாதார அமைச்சு வேண்டு கோள் விடுத்துள்ளது.

**வெள்ள நீர் வற்றியுள்ள பிரதேசங்களில் உள்ள கிணறுகளுக்கு குளோறின் இடும் செயற்பாடு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது**

மழை, வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளில் வயிற்றோட்டம் மற்றும் தொற்று நோய்களால் பாதிப்புக்கு உள்ளான பலர் இனங்காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நோயாளர்களுக்கான பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்களுக்குத் தேவையான சிகிச்சைகளை இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களிலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ள இடங்களிலும் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெள்ள நீர் வற்றியுள்ள பிரதேசங்களில் உள்ள கிணறுகளுக்கு குளோறின் இடும் செயற்பாடு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச)

## மரத்திலிருந்து வீழ்ந்த மாணவன் பாதிப்பு

தென்மராட்சி, டிசெ.25

மரத்திலிருந்து தவறி வீழ்ந்ததில் 7 வயதுப் பாடசாலை மாணவனுக்கு தோள் எலும்பில் பாதிப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை வரணி நாவற்காட்டில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த ரசிந்தகுமார் சுரேன் (வயது 7) என்னும் மாணவன் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## சங்கத்தானை முன்பள்ளி சிறார் கலைநிகழ்வு

தென்மராட்சி, டிசெ.25

சாவகச்சேரி சங்கத் தானை ஸ்ரீ முருகன் முன்பள்ளி சிறார்களின் கலைவிழாவும் கௌரவிப்பு நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு முன்பள்ளி முன்றிலில் இடம்பெறும்.

சங்கத்தானை சனசமூக நிலையத் தலைவர் பொ.நாகரத்தினம் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக உதவிப் பிர தேச செயலர் செல்வி சபாரத்தினம் பிரேமினி கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி இலங்கை வங்கி கிளை முகாமையாளர் கோ.சேதுகாவலர், தென்மராட்சி பிரதேச செயலக அபிவிருத்தி உதவியாளர் சி.மதீஸ்வரன், மருத்துவர் எஸ்.எஸ்.அருளானந்தம், வர்த்தகர் க.கனகசபாபதி ஆகியோர் கலந்து கொள்வர். (3-9)

# பொதி செய்யப்பட்ட பொருள்களை உரிய விலைக்கே விற்பனை செய்க

## மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்களில் பொதி செய்யப்பட்டு விற்கப்படும் பொருள்களை அதில் குறிக்கப்பட்ட விலைகளுக்கே சங்கங்கள் நுகர்வோருக்கு விநியோகிக்க வேண்டும் என மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் சங்கங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சங்கங்களினால் தனியார் நிறுவனங்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு வரும் பொதி செய்யப் பட்ட சகல பொருள்களும் அதில் குறிக்கப்பட்ட விலை நிர்ணயத்துக்கே விநியோகிக்க வேண்டும். அந்த விலை நிர்ணயத்தை மீறி அதிகரித்த விலைக்கு விற்கப்படும் சங்கங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பொதி செய்யப்பட்ட பால்மா வகைகள், பிஸ்கட் வகைகள் மற்றும் பிற பொருள்கள் அனைத்தும் அதில் குறிக்கப்பட்ட விலைக்கு விற்குமாறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்களை அவர் கேட்டுள்ளார்.

இதை மீறி கூடுதல் விலைக்கு விற்கப்படும் சங்கங்களின் மீது, விலை நிர்ணய சபை மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

நுகர்வோரும் சங்கக் கிளைகளில் பொதி செய்யப்பட்ட பொருள்களை அதில் குறிப்பிடப்பட்ட விலையைப் பார்த்துப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட் டுள்ளார். (3-17)

# ஆலயத்தில் சைக்கிள் திருட்டு

தென்மராட்சி, டிசெ.25

திருவெம்பாவை உற்சவத்திற்கான ஆலய அலங்கரிப்பு சேவையில் ஈடுபட்ட பாடசாலை மாணவனின் புத்தம் புதிய லுமாலா சைக்கிள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு கோவிலாக்கண்டி சிதம்பர சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் இடம்பெற்றது.

திருவெம்பாவை உற்சவத்துக்காக ஆலய வளாகத்தில் உள்ள மணிக்கூட்டுக்கு கோபுரத்துக்கு அருகில் சைக்கிளை நிறுத்திப் பூட்டிவிட்டு அலங்கரிப்பு பணியில் ஈடுபட்டதாகவும் பணிகளை முடித்து விட்டு வீடு செல்வதற்காக சைக்கிளை எடுக்கச் சென்ற வேளையில் அதனைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1974, அனுசம், 7இல் செவ்வாய், பட்டதாரி ஆசிரியைக்கு அரச், தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு :077 1250 332

(27176)(6.11)

## பெரிய கல் விற்பனைக்கு

அத்திபாரக்கட்டுக்குரிய பெரிய கல் விற்பனைக்கு உண்டு. ஒரு ரக்ரர் (¾ கியூப்- முழுமையான அளவு)

விலை 4000.00

தொடர்பு : 077844 5417

(27125)(6.11)

## Christmas Dinner Party

Tuesday 25 December 2012 @ 7.00pm

Hotel Green Grass

Rs.999/=

* Buffet Dinner
* Santa Claus Entertainment,Games & Gifts For Kids
* Children Under 12 years- free of Charge

for more info 021 222 4385 / 0777 807 568

TCKETS AVAILABLE AT HOTEL RECEPTION, JEGAN PHARMACY, LOUISE HOTEL

(சி/2673) (6)

## இடமாற்றம்

கடந்த இரண்டு வருடங்களாக இல:388, ஆஸ்பத்திரி வீதி, என்ற முகவரியில் தற்காலிகமாக இயங்கிவந்த

பரகாத் பேப்பர் ரேடிங் கம்பனி

என்ற தொழில் ஸ்தாபனம் (24.12.2012) திங்கள் தொடக்கம் இல:184, ஆஸ்பத்திரி வீதி என்ற முகவரியில் தொடர்ந்து இயங்கும் என்பதை அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்:

Barakath Traders, 184, Hospital Road, Jaffna.

## ‘ஞானச்சுடர்’ வெளியீட்டு விழா

வடமராட்சி, டிசெ.25

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ‘ஞானச்சுடர்’ ஆன்மிக சஞ்சிகையின் மார்கழி மாத இதழ் வெளியீட்டு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேரவை உறுப்பினர் எஸ். அருணகிரிநாதன் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரமமண்டபத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை குப்பிளான் கிராம சேவையாளர் சோ.பரம்நாதனும், மதிப்பீட்டுரையை வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் நிகழ்த்துவர். (3-8)

## மரண அறிவித்தல்

### எலியாஸ் மரியநாயகம்

(முன்னாள் தலைவர்- பிரான்ஸ் பாடுமீன் விளையாட்டுக்கழகம்)



யாழ்.குருநகரைப் பிறப்பிடமாகவும், பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட எலியாஸ் மரிய நாயகம் 20-12-2012 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற எலியாஸ் தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ் சென்ற தீயோகுப்பிள்ளை- மலர் தம்பதியரின் ஆசை மருமகனும்,ஜெயராணி அவர்களின் பாசமிகு கணவரும்,காலஞ்சென்ற மதன் மற்றும் கியூமன் (பிரான்ஸ்), மேகலா (பிரான்ஸ்), றூபலா(பிரான்ஸ்), அல்பேர் (தயான்-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானமணி (லண்டன்), செபஸ்ரியான் (இலங்கை), காலஞ்சென்ற கெலன் மற்றும் அலோசியஸ்(பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயரட்ணம் மற்றும் லீலா (பிரான்ஸ்), சாள்ஸ் (பிரான்ஸ்), இந்திரா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வெரோனிக் (பிரான்ஸ்), றிச்சாட்(கபூர்-ஜேர்மனி), குயின்ரன் (ரமேஸ்-பிரான்ஸ்), ஜனனி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமனாரும், காலஞ்சென்றவர்களான நவரட்ணம், தேவதாஸ் மற்றும் அ.மெரினா, பபி, யூலியஸ், ஜெ.பத்திமா, செ.மாத்தா, காலஞ்சென்ற திருசூரி மற்றும் ஜெயசீலன் (இலங்கை), சா.பத்திமா(பிரான்ஸ்), குமார்(இலங்கை), ரஞ்சன் (இலங்கை), ஜெயமணி (இலங்கை), காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும், நிஜேன், அபிநயா, பெரடிக், ரொபேர், ஃபனி, புளோரா, கிம்பெர்லி, கிலியான், அஞ்சலா, அஞ்சலினா, அஞ்சலிக்கா ஆகியோரின் ஆசைப் பேரனும்,அஞ்சலி அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (26.12.2012) புதன்கிழமை பிரான்ஸ் நேரப்படி பி.ப.3.45 மணிக்கு பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு

*அலோசியஸ் - பிரான்ஸ்*
செல்லிடப்பேசி: +33751065125
*சாள்ஸ் - பிரான்ஸ்*
செல்லிடப்பேசி: +33628570637
*கியூமன் - பிரான்ஸ்*
செல்லிடப்பேசி: +33646771259
*மேகலா - பிரான்ஸ்*
செல்லிடப்பேசி: +33620332405
*றூபலா - பிரான்ஸ்*
செல்லிடப்பேசி: +33695431678
*தயான் - பிரான்ஸ்*
செல்லிடப்பேசி: +33649895415
*ரமேஸ் - பிரான்ஸ்*
தொலைபேசி: +33149630664
செல்லிடப்பேசி: +33606731892

24/8, மத்திய கிழக்கு வீதி,
குருநகர்.

தகவல்:
மைத்துனர் குடும்பத்தினர்.

(27020)(5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கர்-எடிசலாட் நிறுவனங்கள் இணைந்து முன்னெடுக்கும் 'வெப் பாட்டஷாலா' நிகழ்ச்சித் திட்டம்



நாட்டில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) எழுத்தறிவை முன்கொண்டு செல்லும் வகையில் எடிசலாட் லங்கா மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளில் மற்றுமொரு திட்டமான அந்நிறுவனத்தின் 'வெப் பாட்ட ஷாலா' ஈ-கற்றல் தளமேடையை ஊக்குவிப்பதற்காக, சில்லறை விற்பனைத் துறையில் பலம்பொருந்திய நிறுவனமாகத் திகழ்கின்ற சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனத்துடன் எடிசலாட் கைகோர்த்துள்ளது.

'வெப் பாட்டஷாலா' என்பது ஓர் இணையமாகவும் ஈ-கற்றலுக்கான கருவியாகவும் திகழ்கின்றது. இத்தளமேடையானது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தமக்குத் தேவையான கல்விசார் ஆவண விவரங்களை, தேசிய பாடத்திட்டத்தில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு வசதியளிக்கின்றது. இலங்கையின் சிறுவர்களுக்கு அறிவெனும் பரிசினை வழங்கும் நோக்கிலேயே இந்த தளமேடை உருவமைக்கப்பட்டது.

நாடு முழுவதும் அமைந்துள்ள 400 இற்கும் அதிகமான சிங்கர் விற்பனை நிலையங்களைப் பயன்படுத்தி நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் இத்திட்டம் சென்றடைவதை உறுதி செய்கிறது.

கிராமிய சிறுவர்களது கல்வி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப எழுத்தறிவுக்கு சிறந்த பங்களிப்புச் செய்யும் கருவிகளை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு வலுவூட்டுவதையும் வெப் பாட்ட ஷாலா நோக்காகக் கொண்டுள்ளது.

'வெப் பாட்டஷாலா' வசதியை இப்போது அனைத்து சிங்கர் விற்பனை நிலையங்களிலும் பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும். அதுமட்டுமன்றி, இலகு கொடுப்பனவு முறைமையின் ஊடாக கணினிகளைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பினையும் பெற்றுக் கொள்கின்றனர்.

இந்தப் பங்காளித்துவம் தொடர்பில் எடிசலாட் லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி துமிந்திர ரத்னாயக்க கருத்துத் தெரிவிக்கையில், வெப் பாட்ட ஷாலா திட்டத்தை அடுத்த மட்டத்திற்குக் கொண்டு செல்வதற்காகவும் ஈ-கற்றல் முறைமையின் சக்தியை நாடு முழுவதிலுமுள்ள சிறுவர்களுக்கும் கொடுக்கும் வகையிலும் இலங்கையின் மிகப் பெரிய சில்லறை விற்பனை வலையமைப்புடன் கைகோர்ப்பதையிட்டு உண்மையாகவே நாம் பெருமிதம் அடைகின்றோம்.

இந்த வெப் பாட்ட ஷாலா வசதிக்கு மேலதிகமாக, இப் பங்காளித்துவத்தின் மூலமாக கணினிகள் மற்றும் மடிகணினிகளை நியாயமான விலையிலும் இலகு கொடுப்பனவு முறையிலும் நாம் வழங்கவுள்ளோம். எனவே, இந்த கூட்டு முயற்சியின் ஊடாக வாடிக்கையாளர்கள் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகமான வழிகள் கிடைக்கும். - என்றார்.



# கறுப்புப் பணம்: இந்தியா 8ஆவது இடம்

உலக அளவில் கறுப்புப் பணம் புழக்கத்தில் உள்ள நாடுகளின் பட்டியலில், இந்தியா 8ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.குளோபல் பினான்சியல் இன்டிகிரிட்டி வெளியிட்ட அறிக்கையில், இந்தியா சுதந்திரம் பெற்றது முதல் 2010 வரையிலான கால் கட்டத்தில், 232 பில்லியன் டொலர்கள் கறுப்புப் பணத்தை இந்தியர்கள் வைத்திருந்தனர் என்றும் இது லஞ்சம், ஊழல் மற்றும் பல்வேறு வழிகளில் பெறப்பட்ட பணமாக இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இதே காலக்கட்டத்தில் கறுப்புப் பணம் மூலமாக இந்தியர்கள் வாங்கியுள்ள சொத்துக்களின் மதிப்பு 48% பில்லியன் டொலர்கள் என்றும் தெரிவித்துள்ளது.இந்த பட்டியலில் சீனா முதல் இடத்திலும் மெக்சிகோ, மலேசியா அடுத்தடுத்த இடங்களையும் வகிக்கின்றன.

# திசைகாட்டி நிறுவனத்தின் ஆடைத் தொழிற்சாலை



பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்ப பெண்களுக்கும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட பெண்களுக்கும் அதிகளவான முக்கியத்துவத்தை எமது ஆடைத் தொழிற்சாலை வழங்குகிறது.

பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள யுவதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு போதிய பயிற்சிகள் வழங்கப்பட்ட பின்னரே அவர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள் என திசைகாட்டியின் இணை நிறுவனமான 'முத்துமணி காமன்ஸ்' ஆரம்ப விழாவில் திசைகாட்டி குழுமத் தலைவர் எஸ்.செல்வராஜா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென் பகுதியில் ஆடைத் தொழிலில் ஈடுபடும் பெண்கள் பல துன்பங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.


எமது ஆடைத் தொழிற்சாலையில் யாழ்ப்பாணப் பிரதேச விழுமியங்கள் பேணப்படும். அனைத்து யுவதிகளுக்கும் பண்பாட்டைப் பேணும் சீருடைகள் வழங்கப்படும். அத்துடன் யாழ்ப்பாணக் கலாசாரத்தைப் பேணும் ஆடைகள் மட்டுமே தைத்துக் கொடுக்கப்படும்.

ஆரம்ப உற்பத்தி உள்ளூர் சந்தை வாய்ப்பினையும் சிறப்பு தேர்ச்சியின் பின்னான உற்பத்தி வெளிநாட்டு சந்தை வாய்ப்பினையும் மையப்படுத்தி அமையும் என்றார்.

இந்த நிகழ்வில் மனித உரிமைகள் சட்டத்தரணி எஸ்.நிறஞ்சன், நல்லை ஆதின குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் திசைகாட்டி நிறுவனத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(த-13)

# வருகிறது வளையும் போன்



மொபைல் போன் திரையை வளைத்து மடித்து எடுத்துச் செல்லும் வகையில் சம்சுங் நிறுவனம் அடுத்த வருடம் மொபைல் போன் வகைகளைத் தயாரிக்கவுள்ளது. திரைப் பகுதியை வளைத்து அமைப்பதில் பல ஆண்டுகளாக, எல்.ஜி., பிலிப்ஸ், ஷார்ப், சோனி மற்றும் நோக்கியா ஆகிய நிறுவனங்கள் கடும் ஆய்வினை மேற்கொண்டு வருகின்றன. ஆனால், இதில் சம்சுங் நிறுவனம் வெற்றிபெறும் எனத் தெரிகிறது. வரவிருக்கின்ற காலக்ஸி எஸ் 4 மற்றும் காலக்ஸி நோட் 3 போன்களில் இந்த வளைக்கக் கூடிய திரை வரலாம். இவற்றின் திரையை வளைக்கலாம், மடிக்கலாம், சுருட்டியும் வைக்கலாம்.

# விமான நிலையத்தில் Micro Panda Cross




இலங்கையில் முதலாவதாக மோட்டார் வாகனத்தை உற்பத்தி செய்து இலங்கையின் அபிமானத்தை உலகிற்கு எடுத்துச்சென்ற மைக்ரோ ஹோல்டிங்ஸ் தனியார்நிறுவனம் இம்முறை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கிறிஸ்மஸ் வர்த்தக களியாட்டத்தின் மூலம் Geely Micro Panda Cross மோட்டார் வாகனத்தின் உலக பார்வையை இலங்கை பக்கம் திருப்பி வெற்றிபெறச் செய்யத் தயாராக உள்ளது.

விமான நிலையம் மற்றும் விமான சேவை நிறுவனம் மூன்றாவது முறையாக ஒழுங்கு செய்திருக்கும் கிறிஸ்மஸ் வர்த்தக களியாட்டத்திற்கு மைக்ரோ ஹோல்டிங்ஸ் நிறுவனம் பிரதான பங்காளராகக் கைகோர்த்துள்ளது.

2012 டிசம்பர் மாதம் 1ஆம் திகதி ஆரம்பமான இக்களியாட்டம் சுற்றுலா பயணிகளுக்கு பெறுமதிமிக்க பரிசில்களை வழங்குவதோடு 2013 ஜனவரி 31ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 2 மாதங்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நடைபெறும் இந்த விழா மூலம் விமான நிலையத்துக்கு உள்வரும் இடத்திலும் மற்றும் வெளி யேறும் இடத்திலும் இருக்கும் வரியற்ற வியாபார நிலையத்தில் 10 அமெரிக்க டொலர்களுக்கு மேல் பொருட்களை கொள்வனவு செய்து விசேட பரிசளிப்புக் குத் தகுதி பெறுவோர்களுள் இப்பரிசளிப் பில் முதலாவது வெற்றியாளருக்கு மைக்ரோ ஹோல்டிங் தனியார் நிறுவனம் வழங்கும் Geely Micro Panda Cross மோட்டார் வாகனம் பரிசாக வழங்கப் படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர் தேவைக்கு

# இரணைமடுவை மட்டுமே நம்பியிராது மாற்று வழிகளையும் காணவேண்டும்

## கூறுகிறார் கிளிநொச்சி அரச அதிபர்

அக்கராயன்,டிசெ.25

***யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர் தேவைக்கு இரணைமடுக் குளத்தை மட்டுமே நம்பியிருக்காது மாற்று நீர் மூலங்களையும் இனம் காணவேண்டும் என கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.***

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இரணைமடுக்குளத்தில் இருந்து நீரை யாழ்ப்பாணத்துக்கு வழங்குவது தொடர்பான வேலை முன்னேற்றக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு இரணைமடுக் குளத்தில் இருந்து தொடர்ந்து நீரை எடுத்துச் செல்வதில் தங்கியிராது வேறு மாற்று நீர் மூலங்களையும் இனம் காண வேண்டும். இவ்வாறான மாற்று நீர் மூலங்களைத் தெரிவு செய்வதன் மூலமாக கிளிநொச்சி விவசாயிகளினதும் யாழ்ப்பாண மக்களினதும் முரண்பாடுகளைக் களைந்து ஒரு சுமுகமான நிலையைத் தோற்றுவிக்க முடியும்.

குறிப்பாக பூநகரியின் குடமுருட்டியில் வீணாகின்ற நீரை மாணப்பூகுளத்தை உருவாக்குவதன் மூலமாக யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்ல முடியும்.

மேலும் வீணாகச் செல்கின்ற பாலியாற்று நீரையும் மறித்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்லக் கூடிய மற்றொரு வழியையும் இனம் காணவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-18)

# பூநகரி நகரக் குளத்தின் வேலைகள் இடைநடுவில்

பூநகரி, டிசெ.25

பூநகரியிலுள்ள நகரக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தக் குளத்தின் வேலைகள் சுமார் 15 லட்சம் ரூபா செலவில் பூர்த்தியாகும் வகையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆனால் வேலைகள் பூர்த்தியாகாமல் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன.

ஒப்பந்தகாரர்களின் அசண்டையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குளத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்படும் பட்சத்தில் பூநகரி நகரத்திலுள்ள மக்கள் பெரும் பயனடைவர் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை மட்டுவில்நாடு பகுதியில் கட்டாக் காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது. குறிப்பாக இரவு வேளைகளில் சுதந்திரமாக நடமாடித் திரியும் இந்தக் கால்நடைகள் பயிர்களுக்குப் பெரும் சேதத்தை விளைவித்து வருகின்றன.

குறிப்பாக பெருவெளிப் பகுதியில் அமைந்துள்ள வயல் நிலங்கள் இத்தகைய கால்நடைகளால் பெரும் அழிவை எதிர்கொண்டு வருகின்றன. இதனால் விவசாயிகள் நெல் அறுவடையின்போது பெரும் நட்டத்தை எதிர்கொள்ள நேரிடுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இங்குள்ள கமக்கார அமைப்பினரால் கூட இவற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

(க-18)

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 'லீட்ஸ்'கற்றல் உபகரணங்கள்

ஒவ்வொரு மாணவருக்கும் தலா 650 ரூபா பெறுமதியான பாடசாலைப் புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்கள்.

புதுக்குடியிருப்பு, டிசெ.25

'லீட்ஸ்' அரச சார்பற்ற நிறுவனத்தால் போர் இடர்களினால் பாதிக்கப்பட்ட 310 மாணவர்களுக்கு பாடசாலைக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அமெரிக்கக் கல்லூரி ஒன்றில் கல்வி கற்கும் இடை நிலைப் பாடசாலை மாணவி ஒருவரின் நிதி உதவியுடன் இந்தக் கற்றல் உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

ஒவ்வொரு மாணவருக்கும் தலா 650 ரூபா பெறுமதியான பாடசாலைப் புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த அடிப்படையில் புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கல்வி கற்கும் 145 மாணவர்களுக்கும், ஆனந்தபுரம் அ.த.க.பாடசாலை, மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயம் மற்றும் வேணாவில் ஸ்ரீமுருகானந்தா வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி கற்கும் தலா 60 மாணவர்களுக்கும் இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உள்ளூர் நிறுவனங்கள் முன்வராத நிலையில் இன்னொரு தேசத்தைச் சேர்ந்த சிறுமியின் இந்த முன்மாதிரியான செயற்பாட்டைப் பலரும் பாராட்டியுள்ளனர்.

(க-400)

# மானப்பூகுளத்தை புனரமைக்குமாறு பூநகரிப் பகுதி மக்கள் வேண்டுகோள்

அக்கராயன், டிசெ.25

கிளிநொச்சி மாவட்டம் பூநகரியின் மானப்பூ குளத்தைப் புனரமைத்து வழங்குமாறு பூநகரி மக்கள் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

பூநகரியின் 10 கட்டைக்கும் தியாககம வெளிக்கும் இடையில் காணப்படும் மானப்பூகுளம் உடைத்த நிலையில் காணப்படுகின்றது.

இந்தக் குளம் புனரமைக்கப்பட்டால் பூநகரியின் பெருமளவு நிலம் உவராகும் ஆபத்தில் இருந்து பாதுகாக்கப்படும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பூநகரியின் இறமன்குளம் மற்றும் தியாகங்குளம் என்பவற்றையும் புனரமைக்குமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். குடமுருட்டி வழியாகப் பெருமளவு நீர் மழை காலங்களில் கடலைச் சென்றடைகின்றது.

இந்த நிலையில் இந்தப் பகுதிகளில் உள்ள சிறிய குளங்களைப் புனரமைப்பதன் மூலமாக நன்னீர் நிலைகள் உருவாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரியில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்தக் குளங்களைப் புனரமைப்பது தொடர்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க-18)

# இறுதிக் கட்டப் போரின்போது வசிக்காதோருக்கும் கொடுப்பனவு

## புதுக்குடியிருப்பில் போலி ஆவணங்களுடன் திருகுதாளம்

புதுக்குடியிருப்பு,டிசெ.25

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பலர் முறையற்ற விதத்தில் மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகளைப் பெற்று வருவதாகப் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப்போர் இடர்களால் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்கள், நண்பர்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்கி இருந்தவர்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தால் முதற் கட்டமாக 20 ஆயிரம் ரூபாவும், பின்னர் 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கொடுப்பனவைப் பலர் போலியான ஆவணங்களைக் காட்டிப் பெற்றுக் கொள்கின்றனர். குறிப்பாக போர் இடர்களுக்கு முன்னர் வன்னியை விட்டுச் சென்ற பலர் தவறான தகவல்களை வழங்கி கொடுப்பனவுகளையும் வீட்டுத் திட்டங்களையும் பெறுவதாகவும் இதனால் போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மேலும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பிரதேச செயலக அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது; தம்மிடம் முன்பு இங்கு வசித்த மக்களின் பதிவுகளோ அல்லது ஆவணங்களோ எவையும் இல்லை. இதனால் இந்தக் குளறுபடிகள் இடம்பெற வாய்ப்புண்டு. இத்தகைய ஏமாற்று வேலைகளில் ஈடுபட்டு மீள்குடியமர்வு கொடுப்பனவைப் பெற்ற சிலரை இனங்கண்டுள்ளோம். அவர்களுக்கான கொடுப்பனவுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவித்தனர்.

(க-400)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

# உறவுகள் விடுதலையாவதற்கு உதவுங்கள்

மன்னார், டிசெ.25

நீண்ட காலமாக எவ்வித விசாரணைகளுமின்றி சிறைகளில் வாடும் தமது உறவுகளை விடுதலை செய்து உதவுமாறு அமைச்சர் றிசாத் பதியுதீனிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த 22 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்று சிறையிலுள்ளவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பயங்கரவாத மற்றும் அவசரகால சட்டத்தின் கீழ் எந்தவித விசாரணையும் இல்லாது பல்வேறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எமது உறவுகளை புதுவருடத்திலாவது விடுதலை செய்வதற்கு ஜனாதிபதியோடு பேச்சு நடத்தி நடவடிக்கை எடுக்கவும்.

நல்லெண்ண அடிப்படையில் கடந்த கால கசப்புக்களை மறந்து காலம் தாழ்த்தாது பொது விடுதலைக்கான ஒரு சூழலை நீங்கள் உருவாக்குவீர்கள் என்று இந்த விண்ணப்பத்தை உங்களுக்கு அனுப்பி வைக்கின்றோம்.

இயக்கத்துக்கு உதவி செய்தார்கள் என்ற வகையில் பலரை சந்தேகத்தின் பெயரில் நீண்ட காலம் தடுத்து வைத்திருப்பதானது எமக்குப் பெரும் வேதனையைத் தருகின்றது.

எனவே சிறைச்சாலையில் உள்ள எமது பிள்ளைகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ஒரு விசேட செயற்திட்டம் ஒன்றை உருவாக்கி எமது பிள்ளைகளின் விடுதலைக்கு உதவ வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### வேலாயுதபிள்ளை லோகேந்திரா (லோகு)



அல்லைப்பிட்டி 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை லோகேந்திரா (லோகு) நேற்று (24.12.2012) திங்கட்கிழமை பாரிஸில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் இராசம்மா தம்பதியரின் புதல்வனும், மண்டைதீவைச் சேர்ந்த திருநாவுக்கரசு - பராசக்தி தம்பதியரின் மருமகனும், நாகேஸ்வரியின் (வசந்தி) அன்புக் கணவரும், சங்கவி, சஜித்தன், சங்கவை ஆகியோரின் தந்தையும், ஜெயசுந்தரராஜா (பிரான்ஸ்), சிறீஸ்கந்தராஜா (பிரான்ஸ்), சியாமளா (பிரான்ஸ்), மஞ்சுளா (ஜேர்மனி), சோமேஸ்வரி (பிரான்ஸ்), தெய்வேந்திரா (பிரான்ஸ்), விஜயேந்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், குலேந்திரா, மகாலிங்கம், ராஜ்குமார், இரட்ணமணி, ரூபவதி, கவிதா, விநாயகமூர்த்தி (வலயக்கல்வி அலுவலகம், தீவகம்), சத்தியமூர்த்தி, லோகேஸ்வரி (சுவிஸ்), லோகநாதன் (கனடா), ரகுநாதன் (மோகன் - முகாமையாளர், யாழ். பெற்றா எசன்ஸ் சப்பிளையர்ஸ்), காலஞ்சென்ற பஞ்சாட்சரநாதன் (வலயக்கல்வி அலுவலகம்,தீவகம்) மற்றும் விக்னேஸ்வரி (பிரான்ஸ்), ஜெகநாதன், ஜெகதீஸ்வரி, செந்தில் நாதன் (கனடா), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (27.12.2012) வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

130, இராசாவின் தோட்ட வீதி, நல்லூர்.

செல்லத்துரை நடேசபிள்ளை (சிறிய தந்தை)

பொ.வி.திருநாவுக்கரசு (மாமன்)

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஜேமன் சப்பேட் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான பொமேரியன் குட்டிகளும், மணிதாரா, வெள்ளடியன், முயல், கினிப்பிக், பிஞ்சேர்ஸ், கொக்கட்றின்.

தொடர்பு: லி.மயூரன், ஆயாக்கடவை பிள்ளையார் கோயில் முன்பாக புன்னாலைக் கட்டுவன் தெற்கு, புதுவராயர் கோயிலடி டயலொக் ரவர் அருகில்.

(27207)(3.14)

## பதவி வெற்றிடம்

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றின் காட்சி அறைக்கு கணினி அறிவுடைய கணக்கியல் உதவியாளர் தேவை. (பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.) 30.12.2012 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவத்தினை கீழ்க்குறிப்பிட்ட முகவரிக்குஅனுப்பவும்.

விளம்பர இல:4425,

யாழ்ப்பாணம்.

(27073)

## மரண அறிவித்தல்

### செல்வி சோமேஸ்வரி தம்பாப்பிள்ளை

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சோமேஸ்வரி தம்பாப்பிள்ளை நேற்று (24.12.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பாப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற நகுலநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் ஜெயலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/ கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலம்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.12.2012) திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

த.ஜெயலட்சுமி (ஜெயாரீச்சர்)

சண்டிலிப்பாய்.

(27211)(3.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணவில்லை



கொழும்புத்துறை மணியந்தோட்டத்தைச் சேர்ந்த 20 வயதான தினேஸ்குமார் சுபாஜினி என்பவர் யாழ். போதனா வைத்தியசாலை கிளினிக்குக்குச் சென்றபோது கடந்த 20 ஆம் திகதியில் இருந்து காணவில்லை. இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொண்டு உதவி செய்யுங்கள்.

**தொடர்பு: 0777352349**

(27210)(3.14)

## தவறிவிட்டது

தில்லைநாதன் பிரசாந் (921334109V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், ATM காட் என்பன இணுவிலுக்கும் யாழ். நகரப்பகுதிக்கும் இடையில் தவறிவிட்டது. (சன்மானம் வழங்கப்படும்)

தொடர்பு: 0779273338 / 0776619669

(27217)(3.14)

## கடைகள் விற்பனைக்கு

இல.42 பிரப்பங்குளம் றோட், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் இருக்கும் நான்கு கடைகள் விற்பனைக்கு உண்டு. எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: உரிமையாளர்

**0777651182 / 0212228821**

(27204)(3.14)

## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்

## 2013 ஆம் ஆண்டிற்கான பகிரங்க ஏல அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள் கடைகள் என்பவற்றை பகிரங்க ஏலத்தில் விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் வெள்ளிக்கிழமை மு.ப.11 மணிக்கு முன்னர் தலைமை அலுவலகத்தில் பிணைப்பணத்தினைச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளவும்.

**இடம்** : பிரதேசசபை மேல்மாடியில்

**காலம்** : 28.12.2012 வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணி

| இல | விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு |
|---|---|---|
| 01 | கொடிகாமம் மீன் சந்தை | 10000.00 |
| 02 | கொடிகாமம் சந்தை கருவாட்டுக்கடை இல. 02 | 1000.00 |
| 03 | கைதடிப் பொதுச்சந்தை | 1000.00 |
| 04 | கைதடி ஆட்டிறைச்சிக்கடை | 1000.00 |
| 05 | மிருசுவில் பொதுச்சந்தை | 1000.00 |
| 06 | எழுதுமட்டுவாள் பொதுச்சந்தை | 1000.00 |

**தவிசாளர்**
**சாவகச்சேரி பிரதேசசபை**
**கொடிகாமம்.**

## சாவகச்சேரி பிரதேசசபை

## 01.01.2013 முதல் 31.12.2013 இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் 2013

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 25.12.2012 – 28.12.2012 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 28.12.2012 பிற்பகல் 1.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 28.12.2012 பிற்பகல் 2.00 மணி

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (Vat,NBT தவிர) | கேள்விப் வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (Vat,NBT தவிர) |
|---|---|---|---|---|
| 01. | கொடிகாமம் கோழி இறைச்சிக்கடை | 404000.00 | 3000.00 | 500.00 |
| 02 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 175000.00 | 1000.00 | 500.00 |

நிபந்தனைகள்:

1. இறைச்சிக் கடைகளுக்கு சபையால் விதிக்கப்படும் மாத வாடகை கேள்வித்தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
2. கேள்வித் தொகை, படிவக் கட்டணம், மாத வாடகை என்பவற்றுடன் Vat 12%, NBT 2% சேர்த்து செலுத்துதல் வேண்டும்
3. கால்நடைகள் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் பிரதேச சபையின் கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சிக்குக் கொண்டு வரப்படல் வேண்டும்.
4. சந்தையிலிருந்து 1Km சுற்றாடலில் இறைச்சிக்கோழி விற்றல் தடை செய்யப்பட்டுள்ளது.
5. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாகச் செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
6. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விவரத்தைக் குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியினை "தவிசாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்" என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
7. கேள்விகளைத் தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
8. மேலதிக விவரங்களைப் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**சிற்றம்பலம் துரைராஜா,**
**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை,**
**கொடிகாமம்.**

(C/5063)(2.6)

## மின்தடை குறித்த அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.25

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இடங்களுக்கு மேலதிகமாக புதிய உயர் அழுத்த மின்மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் புனரமைப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் மாதகல் பிரதேசம், மாலிசந்தி முதல் வதிரிச் சந்தி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் குஞ்சர்கடை ஒருபகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, வல்வைப் பிரதேசம், தொண்டமானாறு, கரவெட்டி பிரதேசம், மந்திகை, சாரையடி, புலோலி, தம்பசிட்டி, பருத்தித்துறை, தும்பளை, திக்கம், வதிரிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

28ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் மாலிசந்தி முதல் வதிரிச் சந்தி வரையிலான பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

(ஒ)

## வெள்ளம் பாதித்த மக்களுக்கு யாழ். மாநகர சபை உதவி

யாழ்ப்பாணம்,டிசெ,25

வடக்கிலும், கிழக்கிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ். மாநகர சபை உதவி வழங்கவுள்ளது. இரண்டு மாகாண சபைகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம் வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபையின் டிசெம்பர் மாதத்துக்கான கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கூட்டத்துக்குத் தலைமை வகித்து இதற்கான பிரேரணையைச் சமர்ப்பித்தார். அதனை உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டனர்.

மட்டக்களப்பு, மன்னார், கிளிநொச்சி பகுதிகளில் ஏற்பட்ட அனர்த்தங்கள் போன்று எமது குடாநாட்டிலும் ஏற்பட்டால் எல்லைப்பாகுபாடு இல்லாமல் யாழ். மாநகர சபை அந்தப் பகுதிக்கும் உதவிகளை வழங்கவேண்டும் என உறுப்பினர் எஸ்.விஜயகாந்த் குறிப்பிட்ட பிரேரணையில் அதுவும் சேர்க்கப்பட்டுத் தீர்மானம் நிறைவேறியது.

(த-7)

**3D Glasses for sale**
Computerகளிலும் T.Vயிலும் 3டி திரைப்படங்களை கண்டுகளிக்க.....!
Piraha 3D, Avathar 3D, Resident Evil இன்னும் பல 3D Moviе கள் இலவசம். 1110/= மட்டுமே.
இப்போதே அழையுங்கள்: 0770365001

## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

## யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

விவசாயப் பயிற்சி நெறிகளுக்கான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றது.
(பதிவிலக்கம் TVECp 25/0026)

- புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய செய்முறை ஊடான பயிற்சி நெறி
- க.பொ.த(சாதாரணம்/உயர்) தரம் கற்ற அனைத்துப்பிரிவு மாணவர்களுக்கும்
- 17-26 வயதுக்கிடைப்பட்ட இருபாலாருக்குமான இலவச பயிற்சிநெறி
- பயிற்சி பெறும் காலத்தில் உதவுதொகை வழங்கப்படும்
- நூலகம், கணினி, ஆய்வுகூட வசதிகளை உள்ளடக்கியது.
- உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்புக்களைப் பெறவும், சுயதொழில் வாய்ப்புக்களைப் பெறவும் ஏற்ற பயிற்சிநெறி.

**விவசாய டிப்ளோமா பயிற்சிநெறி**
விவசாயமூலதத்துவம், பயிர்வேளாண்மை, விலங்கு வேளாண்மை, பூங்கனியியல், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல், உணவுத் தொழில் நுட்பம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய ஒரு வருடகால பயிற்சிநெறி.

**விவசாய சான்றிதழ் பயிற்சிநெறி**
விவசாய மூலதத்துவம், பயிரியல், விலங்குவேளாண்மை, பூங்கனியியல், ஆகிய பாடங்களை உள்ளடக்கிய 4 மாத பயிற்சிநெறி.

டிப்ளோமா பயிற்சிநெறியில் சேரவிரும்புவோர் 02.01.2013 இலும், சான்றிதழ் பயிற்சிநெறியில் சேரவிரும்புவோர் 04.01.2013 இலும் காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித்தகைமைப்பத்திரங்கள், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு :
அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம்,சுன்னாகம்.
தொலைபேசி இலக்கம்: 021321 4571, 02122 41420
மின்னஞ்சல் :jcagriinstitute@yahoo.com

(27191)(6.11)

## கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையில் கடமையாற்றும் திருமதி இந்திரகுமார் ரேகா அவர்களின் அன்புத் தாய்

**திருமதி சுந்தரம் கோமதி**

அவர்கள் 22.12.2012 அன்று இறைபதம் அடைந்தார்.

அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


பணிப்பாளர், பணியாளர்கள்
ஊழியர் நலன்புரி சங்கம்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(27212)(3.14)

## மரண அறிவித்தல்

## கந்தையா சுந்தரலிங்கம்

(அகங்கம -காலி) ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுந்தரலிங்கம் நேற்று (24.12. 2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பரிபூரணம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும், அன்னலட்சுமி (திரவியம்), மங்களேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், வேலும் மயிலும் (ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்), காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் பரமலிங்கம், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், பராபரன் (ஜேர்மனி), பரிபூரணகலா, சக்திநாதன் (கணக்கு உதவியாளர் - மேல்நீதி மன்றம், யாழ்ப்பாணம்), கருணாகரன் (பிரான்ஸ்), கிருஸ்ணபிரியா (மாணவி - உயர்தொழில்நுட்ப நிறுவனம்) ஆகியோரின் தந்தையும், எழிலரசி (ஜேர்மனி), பிரபாகரன், சிவகௌரி (ஆசிரியர் - யாழ்/ புன்னாலை கட்டுவன் சித்தி விநாயகர் மகா வித்தியாலயம்), நிசாந்தினி (பிரான்ஸ்), சஞ்சீபன் ஆகியோரின் மாமனும், பிரவீந், கிசாரா, சங்கீர்த்தனா, சஞ்சே, சிவவர்ஷன், சுவர்ணன், நிருஷியன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (27.12.2012) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி,
இணுவில்.

(27218)(3)

தகவல்:
சு. சக்திநாதன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செங்கல்பட்டு சிறப்பு அகதி முகாமில் ஈழத்தமிழ் அகதிகள் உண்ணாவிரதம்

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைத்து வைக் கப்பட்டுள்ள ஈழத்தமிழ் அகதிகள் 7 பேர் தங்களை விடுதலை செய்யக்கோரி நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை தொடக்கம் காலவரையற்ற உண் ணாவிரதப் போராட்டத்தைத் ஆரம்பித்துள்ளனர்.

அவர்களில் சிலர் கடந்த சில மாதங்களுக்கு முன்பு தங்களை விடுதலை செய்யக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுடன் பேச்சு நடத்திய அதிகாரிகள் அவர்களை விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை மேற் கொள்வதாகத் தெரிவித்ததை அடுத்து போராட்டத்தை கைவிட்டனர்.

எனினும் பேச்சுக்கு பின்னர் 45 நாள்கள் ஆகியும் தங்களை விடுவிக்க அதிகாரிகள் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் மீண்டும் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி ஈழத் தமிழர்கள் உண்ணாவிர தத்தை ஆரம்பித்தனர். (வ)

## பொலிஸ் பாதுகாப்புடன் சுவாமி தரிசனம் செய்த ஈழ மைந்தன்

**ஸ்ரீ தர் பாரண்யேஸ்வரர் மற்றும் பிற சந்நிதிகளில் தரிசனம் செய்து விட்டு, ஸ்ரீ சனீஸ்வர பகவானையும் தரினம் செய்தார்.**

தமிழ்நாடு, பூந்தமல்லி இலங்கை அகதிகள் முகாமிலிருந்து அகதி ஒருவர் தமிழக, புதுவை பொலி ஸாரின் பலத்த பாதுகாப்புடன் திருநள்ளாறு கோயிலில் சுவாமி தரிசனம் செய்துள்ளார்.

காரைக்கால் மாவட்டம் திருநள்ளாறு ஸ்ரீ தர்பாரண்யேஸ்வரர் கோயிலில் சனிக்கிழமையில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் ஸ்ரீ சனீஸ்வர பகவானைத் தரிசிக்கச் செல்வர்.

இந்தநிலையில், கடந்த சனிக்கிழமை பிற்பகல் 12.45 மணிக்கு ஆயுதம் ஏந்திய பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் பூந்தமல்லி இலங்கை அகதிகள் முகாமில் இருந்து ஈழத்தமிழ் அகதியான பரமேஸ்வரன் என்பவர் திருநள்ளாறு கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

கோயிலில் மூலவர் ஸ்ரீ தர்பாரண்யேஸ்வரர் மற்றும் பிற சந்நிதிகளில் தரிசனம் செய்து விட்டு, ஸ்ரீ சனீஸ்வர பகவானையும் அவர் தரிசனம் செய்தார். தமிழகப் பொலிஸார் ஆயுதம் ஏந்தி அவருக்கு பாதுகாப்பு அளித்த நிலையில், காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த புதுச்சேரி பொலிஸாரும் பாதுகாப்பில் ஈடுபட்டனர்.

மீண்டும் பகல் 1.35 மணிக்கு பரமேஸ்வரன் பாதுகாப்புடன் கோயிலில் இருந்து அகதி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இதுகுறித்து காரைக்கால் மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கையில்,

பூந்தமல்லி இலங்கை அகதிகள் முகாமில் உள்ள தம்பித்துரை பரமேஸ்வரன் திருநள்ளாறு ஸ்ரீ தர்பாரண்யேஸ்வரர் கோயிலில் ஸ்ரீ சனீஸ்வரபகவானைத் தரிசிக்க அனுமதி கோரினார்.

இந்தநிலையில், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியாளரின் அனுமதியின்பேரில் ஆயுதமேந்திய பாதுகாப்புடன் பரமேஸ்வரனை காரைக்கால் அழைத்துச் சென்றனர். (வ)

# தேசிய அடையாள அட்டையில் சிங்கள மொழியில் விவரங்கள்

### ஆள்பதிவுத் திணைக்களத்துக்கு எதிராக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வழக்கு

யாழ்ப்பாணம், டிசெ.25

தேசிய அடையாள அட்டையின் முன் பக்கத்தில் சிங்கள மொழியில் மட்டும் விவரங்கள் பதியப்பட்டுள்ளதால் தமிழர்களின் மொழி உரிமை மீறப்பட்டுள்ளது என்று ஆள்பதிவுத் திணைக்களத்துக்கு எதிராக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இலங்கைப் பிரஜைகளுக்காக ஆள்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டையின் முன் பக்கத்தில் சிங்கள மொழியில் மட்டுமே விவரங்கள் பதியப்பட்டுள்ளன.

இதனால் தமிழர்கள் தமது அடையாள அட்டையில் என்ன விவரங்கள் பதியப்பட்டுள்ளன என்பதை அறிய முடியாதவர்களாக உள்ளனர்.

தேசிய அடையாள அட்டையின் முன்பக்கத்தில் இலங்கை (ஸ்ரீலங்கா), திகதி (தினய), ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் (புத்கலயின் லியாபதிஞ்சி கிரீமே கொமசாரிஸ்), 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆள்பதிவுச் சட்டம் (1968 அங்க 32 தரண புல்கலயின் லியாபதிஞ்சி கிரீமே பனத) ஆகிய விவரங்கள் சிங்கள மொழியில் பதியப்பட்டுள்ளன.

ஆள்பதிவுத் திணைக்களம் தமிழர்களின் மொழி உரிமையை மீறியுள்ளது என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆள்பதிவுத் திணைக்களத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதால் தேசிய அடையாள அட்டையில் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளும் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிங்களவர்களின் அடையாள அட்டையில் தமிழ்மொழியில் எந்த விவரங்களும் பதியப்படாததால் இன, மொழி ரீதியாக பாகுபாடு காட்டப்படுவது தொடர்பான வழக்கு ஒன்றையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பதிவு செய்துள்ளது.

(ம-14)



இலங்கையிலேயே மிகஉயரமான நத்தார் அலங்கார மரம் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சிப் படைத்தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவின் ஏற்பாட்டில், 82 அடி உயரத்தையும், 40 அடி அகலத்தையும் உடையதாக இந்த மரம் அமைக்கப்பட்டுள்ளது.

## சேமலாப நிதியைச் செலுத்தாத 6 நிறுவனங்கள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.25

வடமாகாணத்தில் பணியாளர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தத் தவறிய 6 நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மூன்று நிறுவனங்களும், கிளிநொச்சியில் இரண்டு நிறுவனங்களும், வவுனியாவில் ஒரு நிறுவனமும் பணியாளர்களுக்குரிய ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தத் தவறியுள்ளதாக வட மாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஊழியர் சேமலாப நிதியை சகல நிறுவனங்களும் செலுத்த வேண்டும். ஒழுங்காக அதனைச் செலுத்தத் தவறும் நிறுவனங்கள் திணைக்களத்தினால் கண்டறியப்பட்டு உரிய சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளன- என்றார். (த-17)

## இனவாதம் தலைதூக்க இடமளிக்கக் கூடாது

**ஜே.வி.பி. கோரிக்கை**

இனவாதம் மற்றும் மதவாதம் தலைதூக்க இடமளிக்கக்கூடாது என்று ஜே.வி.பி. கோரிக்கை விடுத்துள்ளது. ஜே.வி.பி வெளியிட் டுள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மக்கள் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான ஓர் நிலைமையில் இன அல்லது மத முரண்பாடுகள் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இனவாதம் காரணமாக ஏற்பட்ட போரால் மிகக் கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டன.

போர் நிறைவடைந்து சில காலங்களுக்குள்ளேயே மீளவும் முரண்பாடுகள் வெடித்தால் அது பல்வேறு ஆபத்துக்களை ஏற்படுத்தும். எனவே நாட்டில் எந்தவொரு இனவாத சக்திகளும் தலைதூக்க இடமளிக்கக் கூடாது.

இதற்குச் சகல மக்களினதும் ஒத்துழைப்பு அவசியமானது.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அரச ஊழியருக்கான சேவைப் படிகள் 2013 'பட்ஜெட்'டுக்கு அமைய திருத்தம்

யாழ்ப்பாணம், டிசெ.25

2013 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட பிரேரிப்புக்கு அமைவாக அரச உத்தியோகத்தர்களுக்கான சேவைக்கான படிகள் திருத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக சுற்றறிக்கை ஒன்று அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சால் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்று நிற்றறிக்கைரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

★ அரச உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படி எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 6 ஆயிரத்து 600 ரூபாவாக வழங்கப்பட வேண்டும்.

★ அரச உத்தியோகத்தர்களுக்கான விசேட படிக் கொடுப்பனவு ஆகக் குறைந்தது 750ரூபாவாகவும், அதிகமாக 2 ஆயிரத்து 500 ரூபாவாகவும் படிகள் நீங்கலாக மாதாந்த திரட்டிய சம்பளத்தின் நூற்றுக்கு 5 வீதமாக கணக்கிடப்பட்டு விசேட படியுடன் சேர்த்து 22 ஆயிரத்து 935 ரூபா ஆரம்பச் சம்பளத்துக்கு குறைவானது எனில் 50 வீதமும் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியும் மீதி 50 வீதமும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியும் வழங்கப்படல் வேண்டும்.

★ 22 ஆயிரத்து 935 ரூபாவுக்கு மேற்பட்ட ஆரம்பச் சம்பளம் உடைய அரச உத்தியோகத்தர்களுக்கு 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி அதிகரிக்கும் தொகையிலிருந்து 50 வீதத்தையும், மீதி 50 வீதத்தை ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியும் வழங்க வேண்டும்.

★மீளப் பணிக்கமர்த்தப்பட்டுள்ள, இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ள பதவிக்குரிய ஆரம்பச் சம்பளத்துக்கு ஏற்ப அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும் மாதாந்தப் படிகளை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

★ அமய அல்லது நாள் சம்பள அடிப்படையில் சேவையாற்றும் பணியாளர்களுக்கு நாளாந்த வாழ்க்கைச் செலவுப்படி எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 220 ரூபாவாகவும், விசேட படி கடமையாற்றியுள்ள நாள்களுக்கு கணக்கிடப்பட்டு சம்பள அளவுத் திட்டத்துக்கு அமைவாக வழங்கப்பட வேண்டும்.

★ பயிலுநர்கள் மற்றும் பயிற்சி பெறுபவர்களுக்கு பதவிகளின் பிரகாரம் படிகள் வழங்கப்பட வேண்டும்.

★ முப்படைகளின் உறுப்பினர்களுக்கு அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப் படி, விசேட படி என்பவற்றின் பிரகாரம் வழங்கப்பட வேண்டும்.

★ அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களின் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களுக்கும், மாகாண சபைகளின் ஆளுநர்களின், முதலமைச்சர்களின் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களுக்கும், அமைச்சுக்களின் செயலாளர்களினதும் மாகாண பிரதான செயலாளர்களினதும் ஒருங்கிணைப்புச் செயலாளர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி, விசேட படி என்பவற்றின் பிரகாரம் வழங்கப்பட வேண்டும்.

★ ஓய்வூதியம் பெறுவோர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் திகதியிலிருந்து 3 ஆயிரத்து 175 ரூபாவாக வழங்கப்பட வேண்டும்.

★2003 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியத்துடன் சேர்த்து எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை 2 ஆயிரத்து 125 ரூபாவாகவும், ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து 2 ஆயிரத்து 500 ரூபாவாகவும் படிகள் வழங்கப்படவேண்டும்.

★ 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கும் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் ஓய்வு பெற்ற அரச பணியாளர்களின் ஓய்வூதியத்துடன் சேர்த்து எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை ஆயிரத்து 125 ரூபாவாகவும் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆயிரத்து 500 ரூபாவாகவும் படிகள் வழங்கப்பட வேண்டும்.

★ 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதிக்கும் 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதிக்குள் ஓய்வு பெற்ற அரச பணியாளர்களின் ஓய்வூதியத்துடன் சேர்ந்து எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை ஆயிரம் ரூபாவாகவும், 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆயிரத்து 250 ரூபாவாகவும் படிகள் வழங்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (ம-14-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வட மாகாண அமைச்சுக்களுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பிரதம செயலாளர் கொத்தணி அணியை எதிர்த்து உட்கட்டுமான அமைச்சு அணி மோதிக் கொண்டது. (ங-23)

# சென்.ஜோன்ஸ் அபாரம் வீழ்ந்தது யாழ்.இந்து

**13 வயதுப் பிரிவு அணிகளுக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இரண்டாம் சுற்று ஆட்டம் ஒன்றில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.**

யாழ்ப்பாணம்,டிசெ.25

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 13 வயதுப் பிரிவு அணிகளுக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாம் சுற்று ஆட்டம் ஒன்றில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.

அண்மையில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது யாழ். இந்துக் கல்லூரி அணி. எனினும் சென்.ஜோன்ஸ் அணியின் பந்து வீச்சாளர்கள் யாழ்.இந்துவின் துடுப்பாட்ட வீரர்களைத் தமது பந்து வீச்சால் மிரட்டினர். சென். ஜோன்சின் வேகத்தில் நிலை தடுமாறிய யாழ்.இந்து அணி வீரர்கள் ஓட்டங்களை குவிக்கத் தவறினர். கள வியூகத்தையும் சென்.ஜோன்ஸ் அணி மிக இறுக்கமாக்கியது. இதனால் இந்துவின் துடுப்பாட்ட வீரர்கள் எப்படி அடித்தாலும் அதனை ப்பாய்ந்து தடுத்து , ஓட்டவேகத்தை சென்.ஜோன்ஸ் வீரர்கள் தடுத்தனர். எனவே தம்முடைய அணியின் ஓட்ட எண்ணிக்கையை எப்படி உயர்த்துவது என்று தெரியாது இந்துவின் துடுப்பாட்ட வீரர்கள் தடுமாறினர். அவர்களின் தடுமாற்றத்தை நன்கு பயன் படுத்திக் கொண்ட சென். ஜோன்ஸ் பந்து வீச்சாளர்கள் இலக்குகளையும் அடுத்து சரித்து யாழ். இந்துவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தினர். குறிப்பாக சென்.ஜோன்ஸ் அணியின் சொரோபன் மிகச் சிக்கனமாக பந்து வீசியதோடு, எதிர் அணி இலக்குகளையும் கொய்தார். இதனால் யாழ்.இந்து அணி 28 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளை இழந்து 44 ஓட்டங்களை மட்டும் பெறமுடிந்தது.

பந்து வீச்சில சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் சொரோபன் 6 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளையும், யதுஷன் 4 இலக்குகளையும் வீழ்த்தினர்.

45 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கை துரத்தத்தொடங்கியது சென். ஜோன்ஸ் அணி. அந்த அணியின் துடுப்பாட்ட வீரர்கள் மிக விரைவாக ஓட்டங்களை சேர்த்த அதே வேளை இலக்குகளை பறிகொடுக்காமல் ஆடினர். பந்து வீச்சில் கலக்கிய சொரோபன் துடுப்பாட்டத்திலும் பிரகாசித்தான். இதனால் 14 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கினை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது சென்.ஜோன்ஸ் கல்லூரி.

இதில் கிரிஷன், சொரோபன்ஆகியோர் தலா 14 ஓட்டங்களையும், அல்ஷன் 12ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். (ங-23)

## ஜமாலியாவிடம் போராடி தோல்வியுற்றது ஈகிள்ஸ்

திருகோணமலை,டிசெ.25

திருகோணமலை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டுக் கழக மைதானதில் இடம்பெற்று வருகின்றது. இதில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் ஜமாலியா விளையாட்டுக் கழக அணி வெற்றியீட்டியது.

இந்த ஆட்டத்தில் ஜமாலியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விளையாடியது ஈகிள்ஸ் விளையாட்டுக் கழகம். இந்த ஆட்டத்தில் ஆரம்பத்தில் இருந்தே அபார ஆட்டத்தை ஜமாலியா விளையாட்டுக்கழக வீரர்கள் வெளிப்படுத்தினர். எனினும் ஜமாலியா அணிக்கு தாம் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்லர் என்று நிரூபிக்கும் வகையில் ஈகிள்ஸ் அணி வீரர்களும் பதிலடியில் இறங்கினர். எனினும் நீண்ட போராட்டத்தின் பின்னர் 3:1 என்ற கோல்கணக்கில் ஜமாலியா விளையாட்டுக்கழகத்திடம் மண்டியிட்டது ஈகிள்ஸ் அணி. (ங-23)

## பருத்தி,உதைபந்து லீக் போட்டி முடிவுகள் சில

யாழ்ப்பாணம், டிசெ.24

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரை நடத்தி வருகிறது. இந்தத் தொடரின் ஆட்டங்கள் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அதில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம், டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்றுள்ளன.

சனிக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல்கணக்கில் வல்வை அணியை இலகுவாக வென்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியுடன் மோதியது டைமன்ஸ் விளையாட்டுக்கழகம். பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆட்டத்தில்3:1 என்ற கோல்கணக்கில் டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றியீட்டியது. (ங-23)

## பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக உதைபந்துச் சுற்றுப் போட்டி



வடமராட்சி, டிசெ.25

வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தப்படும் இந்தச் சுற்றுப்போட்டி நாளை 26 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ங-8)

## பட்டம் விடும் போட்டி இன்று தம்பசிட்டியில்




வடமராட்சி, டிசெ.25

தம்பசிட்டி, உதயதாரகை விளையாட்டுக்கழகம் புதுவருட தினத்தையொட்டி பட்டம் விடும் போட்டி ஒன்றை இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கதிரவேற்பிள்ளை வீதியில் உள்ள அரசடியில் நடத்தவுள்ளது.

16 வயதுக்குக் கீழ்,மேல் என இரு பிரிவுகளாக நடத்தப்படும் இந்தப்போட்டி நடத்தப்படவுள்ளது. பட்டத்தின் அளவு, பட்டத்தின் புதுமை, பட்டத்தின் அலங்காரம், பட்டங்களின் தொடர், பட்டத்தின் ஆட்டம், விண் என்னும் பிரிவுகளில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் பட்டங்களுக்கு பரிசு வழங்கப்பவுள்ளது.

சிறப்புப் பரிசாக பெரிய பட்டத்தை விரைவாக வலிக்கும் குழுவுக்கு வழங்கப்படும். போட்டிக்கான பதிவுகள் இன்றைய தினமே சதாவதானி சனசமூக நிலையத்தில் மேற்கொள்ளப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)



வவுனியா தமிழ் அரசினர் கலவன் பாடசாலையைச் சேர்ந்த பி.ஸ்ராலின் இலங்கை மேசைப்பந்தாட்ட இளையோர் பயிற்சி முகாமில் உள் வாங்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் கொழும்பில் அமைந்துள்ள விளையாட்டுத்துறை அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே,இலங்கை மேசைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் லசிந்த அழகிய வன்ன ஆகியோர் மாணவன் ஸ்ராலினுக்கு மேசைப்பந்தாட்ட விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய பொதி ஒன்றை வழங்கி உற்சாகப்படுத்தினர். இதன் போது இலங்கை மேசைப்பந்தாட்ட சங்கத்தின் இணைப்பாளர் சந்தன பெரேரா, நாடாளுமன்ற உறுப்பினர் ஹேரத் ஆகியோர் கலந்து கொண்டனர். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சினின் ஓய்வு குறித்து முன்னாள் வீரர்களின் கருத்து



இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கங்குலி கூறுகையில்,

பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரில் சச்சின் பங்கேற்பார் என்று எதிர்பார்த்தேன். தற்போதைய முடிவும் சரியானது தான். இனி தேர்வாளர்களுக்கு எந்த நெருக்கடியும் இருக்காது. இது அவரது சொந்த முடிவு. அவரை யாரும் வெளியில் அனுப்பமுடியாது, என்றார்.

ஸ்ரீகாந்த்

ஒருநாள் போட்டியில் இருந்து சச்சின் ஓய்வு பெற்றது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. இதேபோல டெஸ்ட் போட்டியிலும் உச்சத்தில் இருக்கும் போதுதான் ஓய்வு பெறுவார் என்று நினைக்கிறேன். பாகிஸ்தான் அணிக்கு எதிராக அவரின் செயல்பாடு சிறப்பாக உள்ளது. கடந்த 2011 இல் அவர் ஓய்வு பெறுவார் என்று எண்ணினேன். சதத்தில் சதம் கண்ட சாதனையை யாராலும் மிஞ்சமுடியாது.

ஹர்பஜன்

சச்சின் ஒரு சிறந்த வீரர், மனிதர், இந்தியன். அவரால் நாட்டுக்குப் பெருமை.

இந்திய அணியின் முன்னாள் வீரர் கீர்த்தி ஆசாத் கூறுகையில்,

சச்சின் ஓய்வு பெற வேண்டும் என்று பலரும் வலியுறுத்தினர். ஆனால் சரியான நேரத்தில் ஓய்வை அறிவித்து தனது கடமையை சிறப்பாகச் செய்துள்ளார், என்றார்.

பாபு நட்கர்னி

சச்சின் ஓய்வு பெற வேண்டும் என்று கடந்த சில மாதங்களாக பலரும் வலியுறுத்தினர். ஆனால் தற்போது ஓய்வு அறிவித்த பின் ஏன் ஓய்வு பெற்றார் என்று கேள்வி எழுப்புகின்றனர். இந்திய மக்களின் மனதை புரிந்து கொள்ள முடியவில்லை. அவருடைய உடலை பற்றி அவருக்கு தான் தெரியும். ஓய்வு பெற இது தான் சிறந்த தருணம் என்று நினைத்திருப்பார்.

சரத் பவார்

சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் எனது சிறந்த நண்பர் சச்சின் ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வை அறிவித்தது வருத்தமான விடயம். இருப்பினும் நாட்டிற்கு பெருமை தேடித்தந்த அவருக்கு நன்றி.

**72 மணி நேர பின்னணி...**

ஓய்வு முடிவை 72 மணி நேரத்திற்கு முன் சச்சின் எடுத்துள்ளார்.

இது குறித்து அவரது நெருங்கிய நண்பர் ஒருவர் கூறுகையில், நாக்பூர் டெஸ்ட் முடிந்த பின்னர் மும்பைக்கு திரும்பிய சச்சின், மூன்று நாள்களுக்கு கைத்தொலைபேசியை நிறுத்தி வைத்துவிட்டார். இதனால் அவரை யாரும் தொடர்பு கொள்ள முடியவில்லை.

முதலில் சச்சின் தனது குடும்பத்தினர், நண்பர்களிடம் ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறப் போவதாக தெரிவித்தார். அதற்கு பின்னர் பி.சி.சி.ஐ., தலைவர் சீனிவாசனிடம் ஓய்வு பெறப் போவதாகவும். பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரில் பங்கேற்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார். ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடருக்குப் பின்னர் டெஸ்ட் போட்டியில் தொடர்ந்து நீடிப்பது பற்றி யோசிப்பார், என்றார்.

பி.சி.சி.ஐ., செயலாளர் சஞ்சய் ஜக்டலே கூறுகையில், சச்சின் ஓய்வு திடீரென எடுக்கப்பட்டது கிடையாது. பாகிஸ்தானுக்கு எதிரான இந்திய வீரர்கள் தேர்வுக்கு முன்பே எங்களிடம் பேசினார். அடுத்த உலகக் கிண்ணத் தொடருக்கு இந்திய அணி சிறந்த முறையில் தயாராக வேண்டுமென விரும்பினார். அப்படி பார்க்கும் போது மிகச்சரியான நேரத்தில் முடிவை எடுத்துள்ளார், என்றார்.

**'நம்பர் 10' க்கு ஓய்வு**

ஒருநாள் போட்டியில் சச்சின் பயன்படுத்திய 'நம்பர்-10 பொறிக்கப்பட்ட ஜெர்சிக்கும் ஓய்வு கொடுக்க வேண்டும் என்று, அவர் விளையாடி வரும் ஐ.பி.எல்., மும்பை இந்தியன்ஸ் அணி நிர்வாகம் வலியுறுத்தி வருகிறது. இவருக்கு பின்னர் 'நம்பர்-10' ஜெர்சியை வேறு எந்த வீரருக்கும் கொடுக்கக் கூடாது என்று தெரிவித்துள்ளனர்.

★ ஒருநாள் போட்டியில் அதிவேகமாக பத்தாயிரம் ஓட்டங்களை கடந்த வீரர் என்ற பெருமை சச்சின் பெற்றுள்ளார். இவர், தனது 266 ஆவது ஆட்டத்தில் இந்தச் சாதனை படைத்தார்.

**சதங்களின் நாயகன்**

அதிக சதம் அடித்த வீரர்கள் வரிசையில் சச்சின் முன்னிலை வகிக்கிறார். இதுவரை 463 போட்டியில் 49 சதம் அடித்துள்ளார். இவரை அடுத்து ஆஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங் (30 சதம்), இலங்கையின் ஜெயசூர்யா (28), இந்தியாவின் கங்குலி (22), தென்னாபிரிக்காவின் கிப்ஸ் (21) ஆகியோர் உள்ளனர்.

★ அதிக அரைச் சதம் அடித்தவர்கள் பட்டியலில் சச்சின் முதலிடம் வகிக்கிறார். இவர், 96 அரைசதம் அடித்துள்ளார். இவரை அடுத்து தென்னாபிரிக்காவின் கலிஸ் (85), பாகிஸ்தானின் இன்சமாம் (83), இந்தியாவின் டிராவிட் (83), ஆஸ்திரேலியாவின் பொண்டிங் (82) ஆகியோர் உள்ளனர்.

**முதல் வீரர்**

ஒருநாள் போட்டியில் இரட்டைச்சதம் அடித்த முதல் வீரர் என்ற புதிய வரலாறு படைத்தார் சச்சின். இவர், 2010 இல் குவாலியரில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் 147 பந்துகளில் 200 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இதன்மூலம் ஒரு நாள் போட்டியில், ஒரு இன்னிங்ஸில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் முன்னிலை வகித்தார்.

**இலங்கையுடன் அதிகம்**

ஒருநாள் ஆட்டத்தில் 18, 426 ஓட்டங்கள் எடுத்துள்ள சச்சின், இலங்கைக்கு எதிராக அதிகபட்சமாக 3113 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதனையடுத்து ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 3077 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இவர், ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அதிகபட்சமாக 9 சதம் அடித்துள்ளார். இலங்கைக்கு எதிராக 8 சதம் அடித்துள்ளார்.

ஒவ்வொரு அணிக்கு எதிராக சச்சின் அடித்த ஓட்டம் மற்றும் சதம்:

| எதிரணி | போட்டி | ஓட்டங்கள் | 100/50 |
|---|---|---|---|
| இலங்கை | 84 | 3113 | 8/17 |
| ஆஸி., | 71 | 3077 | 9/15 |
| பாக்., | 69 | 2526 | 5/16 |
| தெ.ஆ., | 57 | 2001 | 5/8 |
| நியூசி., | 42 | 1750 | 5/8 |
| மே.தீ., | 39 | 1573 | 4/11 |
| இங்கி., | 37 | 1455 | 2/10 |
| சிம்பாப்வே | 34 | 1377 | 5/5 |
| கென்யா | 10 | 647 | 4/1 |
| பங்களாதேஷ் | 12 | 496 | 1/2 |
| நமிபியா | 1 | 152 | 1/0 |
| யு.ஏ.இ., | 2 | 81 | 0/1 |
| நெதர்லாந்து | 2 | 79 | 0/1 |
| பெர்முடா | 1 | 57 | 0/1 |
| அயர்லாந்து | 2 | 42 | 0/0 |

★ இவர், பெர்முடா மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு எதிராக ஒரு முறை கூட சதம் அடித்ததில்லை.

**463 போட்டி**

அதிக ஒருநாள் போட்டியில் விளையாடிய வீரர்கள் வரிசையில் சச்சின் முதலிடத்தில் உள்ளார். இவர், 463 போட்டியில் பங்கேற்றுள்ளார். இவரை அடுத்து, இலங்கையின் ஜெயசூர்யா (445 போட்டி), மஹேல ஜெயவர்தனா (386) ஆகியோர் அதிக ஒருநாள் போட்டியில் விளையாடி உள்ளனர்.

**ஆட்ட நாயகன்**

ஒருநாள் போட்டியில் அதிக முறை ஆட்ட நாயகன் விருது வென்ற வீரர்கள் வரிசையிலும் சச்சின் முன்னிலை வகிக்கிறார். இவர், 62 போட்டியில் இவ்விருதை வென்றுள்ளார். இவரை அடுத்து இலங்கையின் ஜெயசூர்யா (48 விருது), தென்னாபிரிக்காவின் கலிஸ் (32), ஆஸ்திரேலியாவின் பொண்டிங் (32) ஆகியோர் அதிக முறை ஆட்ட நாயகன் விருது வென்றுள்ளனர்.

★ அதிக முறை தொடர் நாயகன் விருது வென்ற சாதனையும் சச்சினிடம் உள்ளது. இவர், அதிகபட்சமாக 15 முறை தொடர்நாயகன் விருதை கைப்பற்றி உள்ளார்.

**சாதனைத் துளிகள்...**

ஒரு ஆண்டில் அதிக ஓட்டங்கள் மற்றும் அதிக சதம் எடுத்த வீரர்கள் வரிசையில் சச்சின் முன்னிலை வகிக்கிறார். இவர், 1998 இல் 34 போட்டியில் 9 சதம் உட்பட 1894 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இவர், ஏழு முறை, ஒரே ஆண்டில் 1000 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளார்.

★ அதிக முறை 90 முதல் 99 ஓட்டங்கள் வரை எடுத்த வீரர்கள் வரிசையில் சச்சின் முதலிடம் வகிக்கிறார். இவர், 18 போட்டியில் 90 முதல் 99 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தார்.

★ அதிக பவுண்டரி அடித்த வீரர்கள் வரிசையில் சச்சின் முன்னிலை வகிக்கிறார். இவர், 2016 பவுண்டரி அடித்துள்ளார். அதிக சிக்ஸர் அடித்த வீரர்கள் வரிசையில் சச்சின் (195) 3 ஆவது இடத்தில் உள்ளார். முதலிரண்டு இடங்களில் பாகிஸ்தானின் அப்ரிடி (298), இலங்கையின் ஜெயசூர்யா (270) உள்ளனர்.

**உலகக் கோப்பையில்...**

கடந்த 1992 இல் முதன்முதலில் உலகக் கிண்ணத் தொடரில் விளையாடிய சச்சின், கடைசியாக கடந்த ஆண்டு நடந்த 10 ஆவது உலகக் கிண்ணத் தொடரிலும் விளையாடினார். இதன்மூலம் அதிக முறை (6) உலகக் கிண்ணத் தொடரில் விளையாடிய வீரர்கள் வரிசையில், முன்னாள் பாகிஸ்தான் வீரர் மியான்தத் (1975-96) சாதனையை சமன் செய்தார்.

★ அதிக போட்டியில் விளையாடிய வீரர்கள் வரிசையில் சச்சின் (45 போட்டி) 2 ஆவது இடத்தில் உள்ளார். முதலிடத்தில் ஆஸ்திரேலியாவின் பொண்டிங் (46 போட்டி) உள்ளார்.

★ அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் சச்சின் (2278 ஓட்டங்கள்) முதலிடத்தில் உள்ளார்.

★ அதிக சதம் (6) மற்றும் அதிக அரைசதம் (15) அடித்த வீரர்கள் வரிசையிலும் சச்சின் முன்னிலை வகிக்கிறார்.

**சில சுவாரஸ்யங்கள்...**

முதலில் சச்சின், வேகப்பந்துவீச்சாளராக உருவாக விரும்பினார். ஆனால் 1987 இல் சென்னையில் நடந்த வேகப்பந்துவீச்சாளர்களுக்கான அக்கடமியில், ஆஸ்திரேலிய ஜாம்பவான் டென்னிஸ் லில்லி, இவரை நிராகரித்தார். பின்னர், துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்திய இவர், தற்போது 'மாஸ்டர் பட்ஸ்மன்'.

★ கடந்த 1987 இல் இந்திய துணைக் கண்டத்தில் நடந்த உலகக் கிண்ணத் தொடரில், பந்து எடுத்துக் கொடுக்கும் சிறுவனாக ஊழியம் செய்தார்.

★ பள்ளிகளுக்கு இடையிலான போட்டியில் 326 ஓட்டங்கள் எடுத்த சச்சின், சகவீரர் வினோத் காம்ப்ளியுடன் இணைந்து 664 ஓட்டங்கள் சேர்த்து, தனது சாதனை பயணத்தை பள்ளி பருவத்திலேயே தொடக்கினார்.

★ தனது 19 ஆவது வயதில் (1992) யார்க்ஷயர் அணிக்காக விளையாடியதன் மூலம், இளம் வயதில் இங்கிலாந்து பிராந்திய போட்டியில் விளையாடிய இந்திய வீரர் என்ற பெருமை பெற்றார்.

★ இவருக்கு விருப்பமான விளையாட்டு வீரர், கிரிக்கெட் வீரர் அல்ல. பிரபல அமெரிக்க ரென்னிஸ் வீரர் ஜான் மெக்என்ரோய்.

(ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயச் சுழற்சிதான் முக்கியம்



பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரில் நாணயச் சுழற்சியில் வெல்வது தான் முக்கியம் என்று, இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார்.

இந்திய அணியின் சமீபத்திய செயற்பாடு திருப்திகரமாக அமையவில்லை. சொந்த மண்ணில் இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழந்தது. 'ரி-20' தொடரையும் 1-1 என்று சமன் செய்தது. அடுத்து பாகிஸ்தானுக்கு எதிரான கடும் சவால் காத்திருக்கிறது.

இது குறித்து டோனி கூறியதாவது:

இந்திய மைதானங்களில் ஆட்டத்தின் முடிவு நாணயச் சுழற்சியில் வெல்வதைப் பொறுத்து அமையும். இது இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது 'ரி-20' ஆட்டத்தில் நன்கு தெரிந்திருக்கும். பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்திலும் நாணயச்சுழற்சியில் வெல்வது முக்கிய பங்கு வகிக்கும். ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, பாகிஸ்தான் என்று எந்த அணிக்கு எதிரான ஆட்டத்தில் பங்கேற்றாலும் அதனை முக்கியமான தொடராகத்தான் கருதுகிறோம்.

எதிரணி யாராக இருந்தாலும் ஆட்டத்தின் தன்மையை உணர்ந்து எங்களின் திட்டத்தை செயற்படுத்தி வெற்றி பெற முயற்சிப்போம். தொடர்ந்து போட்டியில் பங்கேற்பதால் வீரர்களுக்குக் காயம் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது - என்றார். (ங-5)

# ஏலம் பெப்ரவரியில்

ஆறாவது ஐ.பி.எல்., தொடரில் பங்கேற்கும் வீரர்களுக்கான ஏலம், பெப்ரவரி 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்.) சார்பில் 'ரி-20' போட்டி ஐந்து ஆண்டுகளாக நடைபெற்றது. ஆறாவது தொடர் அடுத்த ஆண்டு ஏப்ரல் 3 ஆம் திகதி தொடங்கி மே 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஏப்ரல் 3 ஆம் திகதி கொல்கத்தாவில் நடைபெறவுள்ள முதல் ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் கொல்கத்தா நைட்ரைடர்ஸ், டெல்லி டெயாடெவில்ஸ் அணிகள் மோதுகின்றன.

இந்தத் தொடரில் 72 லீக் போட்டிகள் உட்பட 76 போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்தத் தொடரில் பங்கேற்கும் வீரர்களுக்கான ஏலம் பெப்ரவரி 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

முதலில் ஜனவரி 12 ஆம் திகதி நடக்கவிருந்த ஏலம் இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் தொடர் (ஜனவரி 11 முதல் 27 வரை) காரணமாக தள்ளி வைக்கப்பட்டது. ஏலம் நடக்கும் இடம் இன்னும் முடிவாகவில்லை. (ங-5)

# இந்திய அணி அறிவிப்பு

இந்தியா சென்றுள்ள பாகிஸ்தான் அணி 2 'ரி-20', 3 ஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இந்தத் தொடருக்கான இந்திய அணி நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இந்திய அணிக்கு டோனி மீண்டும் அணித் தலைவராக நியமிக்கப்பட்டார். கடந்த ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் தொடர்நாயகன் விருது வென்று அசத்திய யுவராஜ் சிங் ஒருநாள் போட்டிக்கான அணியில் ஓர் ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் தேர்வு செய்யப்பட்டார்.

இந்திய 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வினை அறிவித்த காரணத்தினால் அவருக்குப் பதிலாக ரஹானே வாய்ப்புப் பெற்றார். மோசமான திறன் காரணமாக இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்திலிருந்து நீக்கப்பட்ட வேகப்பந்து வீச்சாளர் சகிர்கான், இந்தத் தொடரிலும் இடம்பெறவில்லை. புவனேஷ்குமார், சமி அகமது ஆகியோர் அறிமுக வீரர்களாக இடம் பிடித்தனர். தொடக்க வீரர் சேவாக் ஒருநாள் போட்டியில் மட்டும் இடம் பிடித்துள்ளார்.

அணி விவரம்:

ஒருநாள்: டோனி (அணித் தலைவர்), சேவாக், கம்பீர், விராத் ஹோக்லி, யுவராஜ் சிங், ரோகித் சர்மா, சுரேஷ் ரெய்னா, ரவிந்திர ஜடேஜா, அஷ்வின், இஷாந்த் சர்மா, ரஹானே, அசோக் டிண்டா, புவனேஷ்வர் குமார், சமி அகமது, அமித் மிஸ்ரா.

'ரி-20': டோனி(அணித் தலைவர்), கம்பீர், ரஹானே, யுவராஜ் சிங், ரோகித் சர்மா, சுரேஷ் ரெய்னா, விராத் ஹோக்லி, ரவிந்திர ஜடேஜா, அஷ்வின், அசோக் டிண்டா, இஷாந்த் சர்மா, புவனேஷ்வர் குமார், பர்விந்தர் அவானா, பியுஸ் சாவ்லா, ராயுடு. (ங-5)

**மோட்டார் சைக்கிள் விற்பனை**

மிக நல்ல நிலையிலுள்ள Hero - Honda, CBZ X- Treme (Double Disc)
ஓடிய தூரம்:- 7500km
மாறாத விலை:- 250,000/=
தொடர்பு: 0779056303

வாடிக்கையாளர் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்
யாழில் கொழும்பு பிறிண்டேர்ஸ்
666, கே.கே.எஸ் வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மிக அருகாமை)
கல்விச்சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம் தொ.பே: 0771974875
கலர்பிறிண் | ஓவ்செற் பிறிண்டிங்
டிஜிற்றல் பிறிண்டிங் | 2013 கலண்டர்கள்
நவீன உயர்தொழில் நுட்பத்தில் - துரிதகதியில் துல்லியமான பதிப்பு

புதிய முகவரி
ஹரன் ஜுவல்லர்ஸ்
நகை - வைர வியாபாரிகள்
இல: 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2226083, 0714182480

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
மாபெரும் விலைக்குறைப்பும், மலிவு விற்பனையும்.
அலுமாரி 12750/= 10950/=
மரக் கட்டில் 7250/= 4900/=
குசன் செற் 21500/= 15500/=
மெத்தை 2400/= 1950/=
கணினி மேசை 3275/= 2900/=
கணினி கதிரை 4050/= 3300/=
← 6 கதிரைக்கு ரீப்போ FREE →
மற்றும் TV ஸ்ராண்ட், மரமேசைகள், சோக்கேஸ், றெசின் ரேபிள், பிளாஸ்ரிக் மேசைகள் மற்றும் வீட்டு அலுவலக தளபாடங்களைப் பெற்றுக்கொள்ள
இல-230, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில்)
T.P- 0773583879, 0778314201 (சி/2682)(9.14)

**German Swiss Deutsch மொழிகள்**
தமிழ் மொழி பெயர்ப்புடன் Goethe institute exam இக்கு ஏற்றவாறு நடைபெறுகின்றது. அடுத்த புதிய வகுப்புகள் 03.01.2013 அன்று ஆரம்பம்.
தொடர்பு: 10 Palaly Road, Jaffna.
(ஆரிய குளத்துக்கு அருகில்)
Miss. Kajenthini 0771604823 (27833)(3.14)

**வேலையாள் தேவை**
நெல்லியடியில் இயங்கும் மாபிள் கடை ஒன்றுக்கு பெண்பிள்ளை ஒருவர் தேவை. தகைமை A/L கொமர்ஸ், கணினி அறிவு, வேலையில் முன் அனுபவம்.
தொடர்பு: 0778577243 / 0771459679 (சி/5088)(3.14)

**வீடு வாடகைக்கு**
யாழ். ஐயனார் கோயில் வீதியில் (K.K.S வீதி, தட்டாதெருச் சந்திக்கு மிக அருகில்) சகல வசதிகளுடனும் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது) தரகர்கள் தேவையில்லை.
தொடர்பு: 0770832227 (27182)(3.6)

**கடை வாடகைக்கு**
இல.615, பரந்தன் வீதி, தருமபுரத்தில், தருமபுரம் மகா வித்தியாலயத்துக்கு அருகில் மூன்று கடைகளைக் கொண்ட கடைத் தொகுதியில் ஒரு கடை வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 0770579536 / 0212280161 (28120)(3.14)

**THE SCIENCE CORNER**
Colock Tower Lane - Jaffna
2015 A/L
ஆரம்பம்: 28.12.2012
வெள்ளி காலை 8.00 am
வழமையான ஆசிரியர் குழாம் (சி/5051)(3.14)

Ranjanas CERAMIC
சர்வதேச தரத்தில்... சாதாரண விலையில்...
X-MAS வருட இறுதி விற்பனைத் தள்ளுபடி
Sale
Don't think just buy
SPECIAL OFFER
எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அன்பார்ந்த நத்தார் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.
The metro engineering (pvt) ltd
# 212, Palaly Road, Jaffna. 021 222 0033 / 021 222 0044
#05,Stanley Road, Jaffna. 021 222 4777/021 222 4888
#05A, Kodikamam Road, Nelliyadi. 021 226 2000 /021 226 3111

After O/Level's..?
இம் மாத பதிவுகளுக்கு எங்களுடன் இணைந்து T-SHIRT ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்
FREE for All Registrations
New batches 2nd Jan 2013 5th Jan 2013 @ 9.00 am
DITEC Diploma in Information Technology 4 Months
DICA Diploma in Computerized Accounting 4 Months
DIBM Diploma in Business management 4 Months
DISE Diploma in Software Engineering 6 Months
DIWE Diploma in Web Engineering 6 Months
DIE Diploma in English 4 Months
HOTLINE 077 309 9 308
ESOFT Trusted IT Partner
ESOFT Metro Campus - Jaffna
137, K.K.S Road, Jaffna.
Tel :021 2224142 , Web :www.esoft.lk
Nelliady 151, Jaffna Rd 021 226 4940 / Kilinochchi 01, Kanagapuram Rd, 021 228 5444 / Jaffna 2nd Branch No. 17/1, Brown Rd, 021 222 0345

## மரண அறிவித்தல்

### திருமதி ஆறுமுகம் தெய்வானைப்பிள்ளை



பலாலி கிழக்கு வயாவிளானைப் பிறப்பிடமாகவும், கரம்பைக்குறிச்சி வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் தெய்வானைப்பிள்ளை நேற்று (24.12.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், பொன்னு, தங்கம்மா, சின்னத் தங்கம், செல்வம், தங்கம், Dr.தங்கராசா (ராஜரட்டைப் பல்லைக்கழகம், மிகுந்தலை), இராசதுரை, யோகரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயும், பொன்னம்பலம், ரத்தினம், வரதராஜப் பெருமாள், மனோரஞ்சிதலீலா, பூரணலிங்கம், காலஞ்சென்றவர்களான கந்தவனம், சுவாமிநாதர் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2012) செவ்வாய்க்கிழமை வரணி கரம்பைக்குறிச்சி இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிக் காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரம்பைக்குறிச்சி,
வரணி. (சி/5087)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் சிறப்பு மலர் 25-12-2012

## எமக்காகவே இறைவன் மனிதனானார்



இன்பமாய் இருக்க ஏங்கும் மனிதன் பொருள் ஈட்டுவதால் அதனை அடையலாம் என்று எண்ணுகிறான். புகழ் ஈட்டுவதால் தன்னை உயர்த்திக் கொள்ளலாம் என்று மயங்குகின்றான். ஆனால் ஏமாற்றம் தான் அவனுக்கு கிடைக்கும் பதில். மனிதன் தேடும் இன்பத்தை இறையருளால் என்றுமே பெற்றுக் கொள்ளும் வார்த்தையாக இறைவன் மனிதனானார். பெத்லகேம் என்னும் சிற்றூரில் தூய சூசைக்கும் மரியாவுக்கும் குழந்தையாக பிறந்த இயேசு மனித மாண்புடன் வாழ்ந்து இன்புற வழிகாட்டுகின்றார். இதைத்தான் ஒவ்வொரு நத்தார் விழாவும் நமக்கு நினைவூட்டுகின்றது.

அனைத்திலும் செல்வராக இருந்த ஆண்டவர் எமக்காக வறுமையுற்றார். நம்பிக்கையின் ஆண்டாக அனைத்துலக திருச்சபை அறிவித்துள்ள இவ்வருடத்தில் மனிதத்தில் நம்பிக்கை இழந்து பரிதவிக்கும் மனிதன் இறைவனின் அளப்பரிய அன்பை, இரக்கத்தை மீண்டும் மீண்டும் சிந்தித்து உயர்வடையும் இறைவனிடம் திரும்பி திருந்தி திரும்பி வரவும் எமக்கு அழைப்பு விடுக்கின்றார்.

நத்தார் பெருவிழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில் ஏழைகள், அனாதைகள், அங்கவீனர், இல்லிடமற்றோர், மீள்குடியேற்றத்தினால் துன்புறுவோர் மீது கருணையும் அன்பும் கொண்டு பிறரன்பு, பகிர்வு போன்ற செயற்பாடுகளில் நாம் இணைவோம்.

எமது உயர்வான வாழ்விற்காக குழந்தையாகப் பிறந்த இயேசு உங்கள் அனைவரது உள்ளத்திலும், இல்லத்திலும் அமைதியும், மகிழ்ச்சியும் கொடுத்து உங்கள் குடும்பங்களை ஆசீர்வதிப்பாராக.

**பேரருட்திரு இ.தோமஸ் சவுந்தரநாயகம்,**
*யாழ்.ஆயர்*

## நம்பிக்கையின் நாயகன் அவதரித்தார்



திருவிழாக்களுக்கெல்லாம் பெருவிழாவாகிய கிறிஸ்மஸ், இன்று அகிலமெங்கும் கொண்டாடப்படுகின்றது. இன, மத, நிற, மொழி வேறுபாடின்றி இவ்விழாவைத் தனிச்சிறப்புடன் அனைத்துலகமும் கொண்டாடி மகிழ்கின்றது. சிறியோர் முதல் பெரியோர்வரை அனைவரும் ஆனந்தமாகக் கொண்டாடி மகிழும் விழாவாக இது ஒளிர்கின்றது.

இறைவனே மனிதனைத் தேடி வந்தமைதான் இன்றைய மகிழ்ச்சிக்கெல்லாம் அடிப்படைக் காரணமாகும். ஏனெனில் அவரே வாழுமுன் வரலாறு வகுத்தவர், அவரே வரலாற்றில் நுழைந்ததை எண்ணி மகிழ்ந்து கொண்டாடுகிறோம். இறைவன் மனிதனைத் தேடி வந்தார். தொலைவில் இருந்தவர் அண்மையில் வந்தார். கட்புலனாகாத கடவுளின் சாயல் காணக்கூடிய விதத்தில், தொடக்கூடிய விதத்தில் வந்தார். வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடி கொண்டார்.

கிறிஸ்துவின் பிறப்பு ஒரு வரலாற்று நிகழ்வு. அதற்குப் பலரும் சான்று பகர்ந்துள்ளனர். கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி பல இறைவாக்கினரும் முன்னறிவித்துள்ளனர். அவையும் வரலாற்று நிகழ்வுகள் தாம். உதாரணமாக இறைவாக்கினர் ஏசாயா அவரது பிறப்பை முன்னறிவித்தபோது கூறியவை இன்றும் எமக்குப் பொருத்தமாக உள்ளது.

**"காரிருளில் நடந்து வந்த மக்கள்**
**பேரொளியைக் கண்டார்கள்,**
**சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல்**
**சுடர் ஒளி உதித்துள்ளது" [ஏசாயா 9:2]**
**"ஏனெனில், ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்:**
**ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார்" [ஏசாயா 9:6]**

இஸ்ராயேல் மக்கள் அசீரிய மன்னனின் கொடுமையான ஆட்சிக்கு உட்பட்டிருந்த வேளையில் இச்செய்தி கூறப்பட்டது. அதாவது வீட்டை இழந்து, நாட்டை இழந்து, வாழ்வாதாரத்துக்கான அனைத்தையும் இழந்து, உரிமை இழந்து, சுதந்திரம் இழந்து, நம்பிக்கை இழந்திருந்த மக்களுக்கு ஆறுதல் தரும் இறைவாக்கைக் கூறுகின்றார்.

**"மலைகள் நிலை சாயினும், குன்றுகள் இடம்பெயரினும்**
**உம்மீது நான் கொண்ட பேரன்போ நிலை சாயாது" [ஏசா 9:10]** என மொழிந்த இறைவாக்கு இருளில் வாழ்ந்த மக்களுக்கு நம்பிக்கை ஒளியைத் தந்தது.

**பேரருட்திரு.ஜோசப் பொன்னையா,**
*மட்டக்களப்பு ஆயர்.*

(III பக்கம் பார்க்க)

## கிறிஸ்து பிறப்பு நன்மை தரட்டும்



இன்று பல இன்னல்களுக்கும், உள்ளக் குமுறல்களுக்கும் முகம் கொடுத்து வாழ்ந்துவரும் எமது மக்களுக்கு கடந்த சில தினங்களில் நாம் கண்ட சீரற்றகால நிலை மேலுமோர் பேரழிவைக் கொண்டுவந்துள்ளது.

இவை அனைத்திற்கும் மேலாக நாம் வாழும் பூமியும் சரி, சந்திர சூரியனைக் கொண்ட வான் வெளியும் சரி, ஒரு மாபெரும் அழிவை ஏற்படுத்தக்கூடிய ஈடாட்டம் பற்றி ஊடகங்கள் மூலம் பல செய்திகளைப் பரப்பி, மக்களுடைய மனங்களைக் குழப்ப நிலைக்கு தள்ளிவிட்ட ஒரு கட்டத்தில்தான், நாம் இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம்.

இயேசு பெருமான் எளிமையில் பிறந்தது நமக்கு பரிசாக கொடையாக, என்று அறிவோம். அவர் மானிட சமூகத்திற்கு மகிழ்வையும், நம்பிக்கையையும், அமைதியையும் கொண்டு வந்தார். எவரையும் அந்நியர் என்று புறக்கணியாமல் யாவரும் ஒரே இறைவனின் மக்கள் என்று அரவணைத்து அன்பு செய்யும்படி கூறிய அதே இறைவன் தான் அனைத்து உலகையும் படைத்து ஆண்டு வருகிறார்.

மண்ணுலக வாழ்வின் பின்னர் நிலையான விண்ணக வாழ்வை எதிர்நோக்கியே வாழ வேண்டும் என உறுதிபடக்கூறியமை நமக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் அமைதியாக வாழ வழிகாட்டுகிறது. எனவே இயேசு ஆண்டவர் எளிமையில் பிறந்த விழாவை நாம் பெருவிழாவாகக் கொண்டாடுவதில். பெருமிதம் அடைகின்றோம்.

கிறிஸ்து பிறப்பின் இனிய வாழ்த்துக்கள் அனைவர்க்கும் உரித்தாகட்டும்.

**பேரருட்திரு. ஜோசப் கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை**
*திருகோணமலை ஆயர்.*

## அன்பே எமது வாழ்வின் அடிப்படை



அன்பானவர்களே, மீளவும் நாம் யாவரும் தேவ பாலகனின் பிறப்பைக் கொண்டாடுகின்றோம் அவர் (பாலகன்) கிருபையினாலும், சத்தியத்தினாலும், நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணும் படியாய் கிறிஸ்து இந்த உலகில் அவதரித்தார். (யோவ1:14) எனவே அவரின் பிறப்பு இந்த உலகம் அனைத்திற்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. எனவே கிறிஸ்துவின் மானிட அவதாரத்தை நாம் நினைவு கூருவதுவெறும் கொண்டாட்டங்களுடன் மாத்திரம் நின்று விடாது அவைகளையும் கடந்து நமக்குள் வாசம் செய்யும் கிறிஸ்துவை எமது வாழ்வுக் கூடாகவும் வெளிக்காட்ட வேண்டியவர்களாக இருக்கின்றோம். கிறிஸ்து பாலகன் தான் இப்பிறப்பின் அனுபவத்தின் மையமாக இருக்க வேண்டும். christ at the centre, not of the eage. ஆனால் இவ் அனுபவத்தின் மையமானது இன்று எம்மை விட்டு தூரமாகவே சென்று விட்ட நிலையில், நாம் யாவரும் கிறிஸ்து பாலகனின் நோக்கத்தை தவிர்த்து ஒரு வெறுமையான சடங்கையே கொண்டாடுகின்றோம். கிறிஸ்து பாலகன் எமக்குள் வாசம் செய்கின்றார் எனில், எமக்குள் அன்பினிய தன்மைகள் உருவாகும். "அன்பே வாழ்வின் அடிப்படை சக்தியாக, என்றாவது ஒரு நாள் நாம் ஏற்று ஆக வேண்டும். இவ் இயல்பான வழிமுறையே மானிடரை உயர் பரிமாணத்திற்கு வழிநடத்தும்" என்றார் அறிஞர் தெயார்த்தே சார்தன். இந்த அன்பே எமது வாழ்க்கையின் அடிப்படை சக்தியாக எமது நாட்டிலும், எமது பிரதேசங்களிலும், எமது குடும்பங்களிலும், தனிமனித வாழ்விலும் காணப்படுமாயின் இவ்வருட பாலகன் இயேசு நாதர் பிறப்பு எம் யாவருக்கும் ஒரு பொருள் பொதிந்ததாக இவ்வருடம் காணப்படும்.

ஆனால் இன்றுநாம் வாழும் சூழலில் "ஒரு அன்பான மனிதனை காண்பதே மிகவும் அரிதாகவே இருக்கின்றது "எனவே சகமானிடத்தின் மீது அன்பு கூராமல் நாம் யாவரும் மானிட அவதாரத்தைப் பற்றியும், ஆண்டவன் கிறிஸ்து இயேசுவைப் பற்றி பேசமுடியாது. எனவே எங்கெல்லாம் கிறிஸ்து பாலகனின் மானிட அவதாரம் பேசப்படுகின்றதோ அங்கெல்லாம் "சகமானிட அன்பினிய தன்மைகள் எமக்குள் காணப்பட வேண்டும்" அவ்வாறு அவை காணப்படுமாயின் அங்கெல்லாம் அவர் (கிறிஸ்து பாலகன்) தன்னுடைய சாயலை பதித்தும் கொள்கின்றார். எனவே இந்நன் னாளில் இவற்றை எம் மனதில் பதிவு செய்தவர்களாக பாலகன் இயேசு அன்பினிய பாலகனாக எம் வாழ்வில் வர வேண்டும் என ஆசிப்போம்.

**அருட்பணி இ.ராஜ்குமார்,**
*தலைவர், யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம்.*

## இறைவனில் நம்பிக்கை கொள்வோம்



இயேசு பாலகன்பெத்லகேமில் பிறந்த பொழுது, தேவதூதன் ஒருவன் ஏழை இடையர்கள் மத்தியில் தோன்றி பயப்படாதிருங்கள் இதோ எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோசத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்- என்று கூறினான்.

இயேசு பாலகன் பிறந்த பொழுது பாலஸ்தின தேசம் அந்தகாரத்தில் மூழ்கியிருந்தது. பாலஸ்தீனாவைச் சூழ்ந்திருந்த வல்லரசுகள் மாறி மாறி அந்த நாட்டைக் கைப்பற்றி மக்களை அடிமைப்படுத்தின. பாபிலோனியர், பாரசீகர், கிரேக்கர், ரோமர் ஆகியோர் அவர்கள் மீது ஆட்சி செலுத்தினர். இதனால் ஏசாயா என்னும் இறைவாக்கு உரைஞன் இறைவனைத் "துன்புறும் தொண்டனாகவே' கண்டான். அல்லற்பட்டு, ஆற்றாது கண்ணீர் வடித்த சூழ்நிலையிலும், அன்னா, மரியாள் சகரியா போன்ற பக்தர்கள் தம்மை விடுவிக்க ஓர் இரட்சகர் தோன்றத்தான் போகிறார் என்று திடமாக நம்பி இறைவனைப் பக்தியோடு பூஜித்து வந்தனர்.

இயேசு என்னும் இரட்சகர் தாவீதின் ஊராகிய பெத்லகேமில் பிறந்தார். இயேசு தம் வாழ்நாள் முழுதும் மக்கள் உள்ளத்தில் நம்பிக்கையும், துணிவையும், சந்தோஷத்தையும் விதைத்து வந்தார். "வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். எனது நுகம் எளிதானது" என்று அழைப்பு விடுத்தார். மக்கள் "பயம்" என்னும் பேயினால் ஏங்கித் தவித்த மக்களைக் கண்டு பரிதாபப்பட்டார். ஏன் பயப்படுகிறீர்கள் உங்கள் விசுவாசம் எங்கே போயிற்று? என்பது அவர் தாரக மந்திரமாயிற்று.

"உலகத்திலே மனிதன் ஒன்றுக்குத்தான் பயப்பட வேண்டும். அதுவென்வென்றால் பயம்" என்றார் அமெரிக்காவின் ஜனாதிபதியாகவிருந்த பிராங்லின் ரூஸ்வெல்ட். மகாகவி பாரதியும் "பயமெனும் பேய்தனை அடித்தோம்' என்று பாடினார்.

கிறிஸ்தவ வேதாகமத்தில் 'பயம்' என்ற பதம் இருநூறுக்கு மேற்பட்ட இடங்களில் காணப்படுகிறது.

இன்று நமது சமுதாயம் பயம் என்னும் படுகுழிக்குள் மாய்கின்றது. பயத்தை விதைப்பவர்களையே அதிகம் காண்கின்றோம். பயமில்லா நல்வாழ்வு பெற இறைவன் மீது நம்பிக்கை கொள்வோமாக. கிறிஸ்மஸ் தினத்தின் குதாகலம், புதுவருடம் முழுவதும் உங்களோடு கூட இருப்பதாக.

**பேராயர் எஸ்.ஜெபநேசன்,**
*இலங்கை தென்னிந்திய பேராயர், தென்னிந்தியத் திருச்சபை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் மனிதனானார் நம்மிடையே குடிகொண்டார்

*"கடவுள் வானத்தின் கீழ் உள்ள எல்லா நாடுகளுக்கும் உன் பேரொளியைக் காட்டுவார்" (பாருக்:5:3)*

மனிதன் வாழப் பிறந்தவன். அவன் எப்படியும் வாழ வேண்டுமென்றே விரும்புவான். உலக அழிவை அவன் விரும்பமாட்டான். இவ்வுலக வாழ்விலே பணம், பொருள், செல்வக்கு, பெருமை இவைகளை அடைந்து கொள்வதற்கு முனைப்போடு செயற்படுகிறான். இவ்வாறு தான் இன்று உலகில் 90 வீதத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள் என்பதை ஆய்வுகள் மூலமாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது. ஆனால் இறைவன் மக்களை அன்பு செய்கிறார். தம்முடைய பிள்ளைகள் பிழையான வழியில் செல்லும் போது, பற்பல அடையாளங்கள் வழியாக தம்முடைய இருப்பை மனிதனுக்கு விளக்குகின்றார். இவ்வாறான ஒரு நிகழ்வுதான் இறைவன் மனிதனாக இவ்வுலகில் பிறந்த செய்தியாகும்.

காலம் நிறைவுற்ற போது கடவுள் கலிலேயாவிலுள்ள ஒரு கன்னியிடம் தம்முடைய தூதரை அனுப்பினார். அவள் பெயர் மரியாள். தூதர் மரியாளிடம் "மரியே அஞ்சாதீர்; கடவுளின் அருளை அடைந்துள்ளீர்; கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுப்பீர்; அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்" (லூக்:1:20) என்று உரைத்தார். எத்தனையோ பணக்காரர்கள், படித்தவர்கள் இருக்கும் போது, ஏழ்மையில் வாழ்ந்த கீழ்ப்படிவுள்ள மரியாளைத் தெரிந்து எடுத்தார். கடவுள் வெளித் தோற்றத்தைப் பார்க்கவில்லை. உள்ளத் தூய்மையைக் கண்ணோக்கினார். பாவ இருளில் வாழ்ந்த மக்களை மீட்பதற்கு குழந்தை இயேசுவாக கன்னிமரியாளின் வயிற்றினிலே தூய ஆவியின் அருளினால் கருவாகி உருவானார். இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் யேசுவின் மனிதர்களைத் தேடி மனிதனானார்.



கிறிஸ்து பிறப்பு விழா மகிழ்ச்சியின் விழா. இருப்பினும் இன்று அந்த விழாவின் அர்த்தம் வர்த்தகமயமாக்கப்பட்டது போன்ற காட்சி தென்படுகின்றது. இன்று ஆன்மிக ஆயத்தங்கள் பின் தள்ளப்பட்டு, இலௌகீக செயற்பாடுகளே முன்னிற்கின்றன. இயேசுவின் பிறப்பு முன்னறிவிக்கப்பட்டது. சாதாரண இடையர் குல மக்களிடையே மேன்மை மிக்கவர் மாட்டுக்குடிலிலே ஏழைக் கோலத்திலே மானிடனானார். இயேசுவின் பிறப்பினாலே ஏரோது மன்னன் கலக்கமடைந்தான். தன்னுடைய அரசு அழிந்துவிடும் என்று பயந்தான். அதனால் பச்சிளம் பாலகர்களைக் கொன்று குவித்தான். அநீதியான இருள், நீதியான ஒளிக்குப் பயந்தது, அன்று, இன்று...?

எம்மத்தியில் அநீதியான செயற்பாடுகள் மலிந்து கிடக்கின்றன. பணத்தினாலே எல்லாவற்றையும் அடைந்து விட உலகம் துடிக்கின்றது. தொழில்நுட்ப வளர்ச்சி இறைவனை மறக்கப் பண்ணுகின்றது. ஆன்மிகச் செயற்பாடுகள் சக்தி இழந்தவை போல காட்சியளிக்கின்றன. மனிதன் ஒளியை விட இருளையே நாடிச் சென்று கொண்டிருக்கிறான். ஆனால் இருளிலே மகிழ்ச்சியை, நிம்மதியை அவன் காண முடியாது. "திராட்சைக் கொடியானது செடியோடு இணைந்திருந்தால் அன்றி பலன் கொடுக்காது" கணினி யுகத்தால் கடவுளின் திட்டத்தை அறிய முடியாது. ஆனால் இறைவன் இரக்கமுடையவர். எல்லாவற்றுக்கும் அவர் காலம் தாழ்த்துபவர்.

கிறிஸ்து பிறப்பு விழாவை (அண்மித்துள்ள) கொண்டாடவுள்ள நாங்கள் அடுத்திருப்பவர்க்கு அன்பு செய்ய வேண்டும். ஏழைகளிலே இறைவனைக் காண வேண்டும். ஆன்மிக வழிமுறைகளிலே அர்த்தம் காண வேண்டும். அஞ்சி நடுங்கி எமது ஆன்மாக்களை இழந்து விடக் கூடாது. எதனையும் ஆக்கவும், ஒரு நொடிப் பொழுதில் அழிக்கவும் வல்லவர் இறைவன் ஒருவரே. இறைவனிலே உண்மை விசுவாசம் வைத்து திருவிவிலியத்தின் இறைவார்த்தைகளை ஏற்று, விண்ணகப் பயணிகளாகிய நாங்கள் நாளாந்தம் பயணிக்கும் போது கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டங்கள் அர்த்தம் நிறைந்தவையாக அமையும்.

**அன்ரனி பீற்றர்**
**ஆசிரிய ஆலோசகர்**


Vinoth Curtains
இப்பொழுது யாழ். மண்ணில்
கேட்டின்ஸ் துறையில் நிபுணத்துவம் பெற்றஎம்மால்
கேட்டின்ஸ், மெத்தைவிரிப்பு, றேயிலிங், போல்ஸ்,
குசன் கவர், வேற்றிக்கல் லைன்ஸ், வெனிசன் பிற்றிங்,
புளோ காபற் வேலைகள் செய்து கொடுக்கப்படுகிறது.
இல-50/1, நாவலர் வீதி,
(மனோகரா தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்.
தொடர்பு- மைக்கல் 0774906323, 0779519144



EXAM FINISHED.
WHAT NEXT?
Learn from the Leader with world class Certifications
and make your child an IT Professional

Diploma in Microsoft Office
Course Fee : 3,500/=
Course Duration: 48 Hours

Diploma in Computer Science
Course Fee : 3,500/=
Course Duration: 48 Hours

Graphic Designing & Type Setting
Course Fee : 3,500/=
Course Duration: 60 Hours

Computer for KIDS
Course Fee : 500/= (Monthly)
Course Duration: 6 Months

Get ICDL in 90 Hrs
ICDL is the internaional standard in end - user computer skills.
ICDL certification programme consist of modules which define the skills and competencies necessary to be a proficient user of a computer and common computer applications. Each ICDL module provides a practical programme of up-to-date skills and knowledge areas which are validated by a test.
The available modules are:
Module 1 - Basic Concepts of Information Technology (ICT)
Module 2 - Using the Computer and Managing Files
Module 3 - Word Processing
Module 4 - Spreadsheets
Module 5 - Databases
Module 6 - Presentation
Module 7 - Information and Communication
Course Fee : ~~10,500/=~~ 6,500/=
(Special Offer for O'Level Students)

GATEWAY ICT CENTRE JAFFNA
347, Kasthuriyar Road, Jaffna. Ph : 0215675555
IPICT e-Citizen



நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
மின்சார வீட்டுப் பாவனைப் பொருள் மற்றும்
இலத்திரனியல் உதிரிப்பாகங்களையும்
பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்.
Sony யாழ். விற்பனை முகவர்
V.K. இராசரத்தினம்
1C, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். தொ.பேசி: 021 222 2056



கபிலா காலணியகத்தில் அதிரடி கழிவு
Bata DSI
நத்தார் பண்டிகையை முன்னிட்டு பாடசாலை மாணவ மாணவிகளின் காலணி வகைகள் விசேட விலைக்கழிவில் பொறிக்கப்பட்ட விலையிலிருந்து எங்கும் எதிர்பாராத மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்
பொறிக்கப்பட்ட விலையிலிருந்து குறைவான விலையில்
KABILA SHOE PALACE
24, Kasthuriyar Road, Jaffna.
Branch: No: 13, Power House Road, New Market, Jaffna.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## CHRISTMAS MESSAGE OF THE CATHOLIC BISHOPS' CONFERENCE, SRI LANKA

**Archdiocese of Colombo**





Once again, we celebrate God's entry into human history in the Mystery of Incarnation, the birth of the Son of God in the womb of the Blessed Virgin Mary. We exult in praise and thanksgiving to God Our Father joining with the heavenly hosts. "For God so loved the world that he gave his only begotten Son so that whosoever believes in him may not perish but may have eternal life"(John 3: 16).

Jesus has made it abundantly clear that by his coming into our midst he wants us to share in the life he alone can give. He wants us to live our lives as meaningfully as possible here below and later come to share in his divine life for all eternity. In the celebration of the Mystery of Incarnation, Jesus invites all of us to come to experience the life he offers. Hence, our celebration of Christmas cannot and must not be a mere recalling of his historical birth. For, he wishes to be 'born' in the personal lives of each of us.

In 2012, we celebrate Christmas in the "Year of Faith" declared by His Holiness Benedict XVI. He underlines: "Ever since the start of my ministry as Successor of Peter, I have spoken of the need to rediscover the journey of faith so as to shed ever clearer light on the joy and renewed enthusiasm of the encounter with Christ" (Porta Fidei, art. 2). He invites all of us believers to rediscover the beauty of faith and the joy that comes from believing in him and by doing so be filled with renewed eagerness and enthusiasm to proclaim him to others. He invites us to proclaim to the world of today that the act of faith is totally in keeping with human nature and that it is completely reasonable to say, 'I believe'. The Universal Shepherd reminds us that in this year of faith we must go beyond a mere commemoration of the anniversaries pertaining to the promulgation of the year of faith. We need to understand that the true spiritual meaning of the Second Vatican Council was to communicate faith in Christ and encounter Him. Let us, therefore, make this Christmas a fitting occasion to grasp the beauty of Christian faith and experience the unique joy of being able to believe in Jesus as Lord and Saviour of the world.

Every Christmas invites us to take a very realistic look at the society in which we live. It invites us to pay careful attention to the poor in our midst and be sensitive to the various forms of human sufferings prevailing in our society. Let us be mindful of the disturbing levels of disregard towards the indescribable value of life and the culture of impunity that appears to have overtaken us. While we engage in various forms of charitable activities, Christmas invites us to go still further and be mindful of those things that keep the poor always poor. Let us commit ourselves to changing all that is not in keeping with God's holy will, in our midst becoming agents of peace and reconciliation. Let us be engaged in the task of making the Sri Lankan society a better place for all of us to live. As we give thanks to God for Jesus, let us pray that all of us be given a renewed joy and a rediscovery of the uniqueness of our faith in Jesus as the Risen Lord and Saviour.

We wish all our faithful, our fellow citizens and all men and women of goodwill a Blessed Christmas.

**His Eminence Malcolm Cardinal Ranjith, President**

**Bishop Norbert Andradi OMI, Secretary General**

## கிறிஸ்மஸ் விண்ணுக்கு வழிகாட்டும் விழா

வானதூதர் மரியாளுக்குத் தோன்றி 'அருள் மிகப் பெற்றவரே வாழ்க, ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார்'' என்றார்.

அருளன்னை மூலம் உதித்தார் யேசுபாலன். அவர் பிறந்த இந்த நாளை மற்றைய கொண்டாட்டங்களிலும் மேலாகச் சிறப்பாகக் கொண்டாடு கிறார்கள். இது ஒரு 'கிறிஸ்தவ விழா' என்பதே தெரியாமல் பலரும் கொண்டாடும் அளவுக்கு மனங்களையும் இதயங்களையும் சமூகங்களையும் கவர்ந்த விழாவாக கிறிஸ்மஸ் விழா அமைந்துள்ளது.

கிறிஸ்தவர் அல்லாதவர்கள் "நாங்கள் கிறிஸ்மஸ் திருநாளைக் கொண்டாடு கிறோம். எங்கள் வீட்டில் பாலன் பிறப்பும், கிறிஸ்மஸ் மரமும் வைப்பது வழக்கம். எங்கள் பிள்ளைகள் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தை விரும்புகிறார்கள். எங்கள் குழந்தைகள் அந்த நாளில் மிகவும் சந்தோஷமாக இருக்கிறார்கள். சுதந்திரமாக மகிழ்ச்சியைக் வெளிக்கொணர்கிறார்கள். அவர்களின் சந்தோஷம் எங்களுக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. ஆகவே கிறிஸ்மஸ் எங்கள் மகிழ்ச்சியின் நாள்'' என்கிறார்கள். இவ்வாறு பெரியோர்கள் முதல் சிறியவர் வரை எல்லோரும் விரும்பிக் கொண்டாடும் விழா 'கிறிஸ்மஸ் விழா'.

''கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பாள். அந்தக் குழந்தைக்கு இம்மானுவேல் (நம்மோடு கடவுள்) எனப் பெயரிடுவீர்'' என்கின்ற ஏசாயாவின் இறைவாக்கு இயேசுவில் நிறைவேறுவதை மத்தேயு நற்செய்தியில் கண்கின்றோம். இம்மானுவேல் என்றால் ''கடவுள் நம்மோடு இருக்கின்றார்'' என்று பொருள்.

''ஆண்டவர் ஆவி என்மேலே. ஏனெனில் அவர் எனக்கு அருட்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடையவும் பார்வையற்றோர் பார்வை பெறவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார். (லூக்கா 4:18-19) என்று யேசுவே கூறியுள்ளார். இழந்தவற்றை மீட்க வந்த பெருவிழா. இருளை அகற்றி ஒளி ஏற்ற வந்தவிழா. சாவை வென்று உயிர் அளிக்க வந்த விழா. சாத்தானை அதன் சந்ததியோடு அழித்து சாந்தமும் சமாதானமும் நிறைந்த தூய ஆவியை வழங்க வந்த விழா. ஏற்றத்தாழ்வுகளை அகற்ற வந்த விழா மனிதனை கடவுளோடு இணைக்க வந்த விழா.

எனவே விண்ணுக்கு வழி காட்டியவர் பிறந்த இந்த கிறிஸ்மஸ் விழா விண்ணுலகுக்கு வழிகாட்டவில்லை என்றால் இது அர்த்தமற்ற நிகழ்வே.

மகிழ்ச்சி வேண்டும். அதுதான் கிறிஸ்மஸ் விழாவின் எதிர்பார்ப்பு. அது புறத்தில் அல்ல அகத்தில் பெருக வேண்டும். ''உன்னதங்களிலே இறைவனுக்கு மகிமையும் அவருக்கு உகந்தோர்க்கு இவ்வுலகில் அமைதியும் உண்டாகுக. இதுதான் கிறிஸ்து பிறப்பின் செய்தி.

கடவுளுக்கு உகந்தவர் ஆகுதல், அன்பில்லா ஆடையில் அல்ல. உதவாத உணவில் அல்ல. பிறரை சோதிக்கும் சோடினைகளில் அல்ல. பிறரை கேலி செய்யும் கேளிக்கை விளையாட்டுக்களில் அல்ல. ஆண்டவர் ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுத்திருக்கும் சுதந்திரத்தைப் பயன்படுத்தித் தானும் பிறரும் சமாதானமாக வாழுதலே கடவுளுக்கு உகந்த விண்ணுக்கு வழிகாட்டும் செயல் ஆகும்.

சுதந்திரம் சமத்துவத்தை பிரசவிக்கும். சமத்துவம் சகோதரத்துவத்தை பிரசவிக்கும். சகோதரத்துவம் மற்றவன் தனக்கு தான் என்ன செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறானோ அதையே நான் மற்றவனுக்கும் செய்யத் தூண்டுதல் வேண்டும்.

ஆகவே 2012 இல் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடும் நீங்களும் நானும் கிறிஸ்துவின் எதிர்பார்ப்பை பிரதிபலிக்கவில்லையெனில் வெறும் வர்த்தக கிறிஸ்மஸ், வர்க்க வேறுபாடு நிறைந்த கிறிஸ்மஸ், கேளிக்கைகள் மட்டும் நிறைந்த கிறிஸ்மஸ் என்று வகையில் அர்த்தமற்ற கொண்டாட்டமாக இவ்வருடமும் அமையும்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் கேள்விக் குறியாகிப் போய்க் கொண்டிருக்கும் எம் நாட்டில் அவை மிகுந்து நீதி, சமாதானம், சந்தோஷம் நிறைந்த வாழ்வு வாழ பாலனாம் இயேசுவிடம் மன்றாடுவோம். கொண்டாப்படுகின்ற 'கிறிஸ்மஸ்' விழா அர்த்தமுள்ள வகையில் கொண்டாடப்படட்டும். அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்.

**அருட்பணி மக்சிலன்,**

***செபமாலை தாசர் சபை, அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்.***

## நம்பிக்கையின் நாயகன் அவதரித்தார்

(I பக்கத் தொடர்ச்சி)

இன்று உலகளாவிய ரீதியிலும், எம் நாட்டைப் பொறுத்தளவிலும் இதே செய்தி வேண்டப்படுகின்றது. மக்களைக் கொடுமைப்படுத்திய சர்வாதிகாரிகள் முபாரக், கடாபி, கிம்யுங் போன்றவர்கள் இன்று அழிந்து விட்டாலும் அந்நாடுகளின் மக்கள் இன்றும் பயம் என்ற இருளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எதிர்காலம் சூன்யமாக உள்ளது.

எமது நாடும் இதற்கு விதிவிலக்கல்ல. சர்வாதிகாரப் போக்கு தலை விரித் தாடுகிறது. 'இம்' என்றால் சிறை வாசம், 'ஏன்' என்றால் வனவாசம் என்ற பயத்தில் எதையும் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கின்றனர். பேச்சுச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம் அனைத்தும் முடக்கப்பட்டு மனித உரிமைகள் பறிக்கப்பட்டு செய்வதறியாது திகைக்கின்றனர். மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்ற போக்கில் யுத்தம் முடிந்து மூன்று ஆண்டுகள் கடந்தும் பாதிக்கப்பட்ட மக்கள், இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு துன்பத்தில் உழல்கின்றனர். சுயலாபத்துக்காக பிறரைக் காட்டிக்கொடுத்து இன்ப லோகத்தில் மிதக்கும் எட்டப்பர்களின் கூட்டத்தின் வன்செயல்கள் முடியப் போவதில்லை. உரிமை கோரி அகிம்சை வழியில், முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் இராணுவ பலத்தைக் கொண்டு அடக்கி ஒடுக்கப்படுகின்றன. இயற்கை அனர்த்தங்களும் செயற்கை அழிவுகளும் தொடர்ந்து மாறி மாறி மனிதரின் நம்பிக்கையைச் சிதறடிக்கின்றன.

இத்தகைய இருள்சூழ்ந்த பின்னணியில் பிறக்கும் குழந்தை இயேசு தரும் நம்பிக்கையின் செய்தி என்ன? அவரே நம்பிக்கையின் நாயகன். அவரது பிறப்பினால் இருளின் ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அவரது பிறப்பினால் அனைத்தையும் புதியதாக்க விரும்பிய இறைவன் மனிதனை அடிமைத்தனத்தில் அகப்பட்டிருந்த மனிதனை அடக்கி, ஒடுக்கி கொடுமைப்படுத்திய அனைத்திலிருந்தும் விடுதலையளித்தார். இதில்தான் கிறிஸ்து பிறப்பின் தனித்துவம் மிளிர்கின்றது. அவரது பிறப்பினால் அனைவரும், அனைத்துக் கட்டுக்களின்றும் விடுதலையடைகின்றனர். அவரது பிறப்பினால் விண்ணிலும் மண்ணிலும் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. அவரது பிறப்பினால் அருள் மழை பொழிந்து அகிலத்தையே நனைக் கின்றது. அவரது பிறப்பினால் இதோ நான் என்றென்றும் உங்களோடு இருக்கின் றேன்'' என்ற பொய்யாவாக்கு மெய்யாகிறது ஆம் அவர் பெயர் 'இம்மானுவேல்' - கடவுள் நம் மோடு இருக்கிறார். அவர் தம் போதனை பொய்மையின்னின்று மெய்மைக்கும், இருளிலி ருந்து ஒளிக்கும், சாவிலிருந்து வாழ்வுக்கும் கடந்து செல்ல வழிகாட்டி நிற்கின்றது.

அவர் எம்மோடு உடன்பயணிக்கும் கடவுள்.

வாழ்நாள் முழுவதும் எம்மோடு வாசம் பண்ணும் கடவுள்.

''இதோ கடவுளின் உறைவிடம் மனிதர் நடுவே உள்ளது'' வருடத்தின் 365 நாட்களும் அவருடைய உடனிருப்பைக் கண்டுகொள்ள வேண்டும்.

கிறிஸ்மஸ் விழா வருடத்துக்கொரு தடவை கொண்டாடப்படும் விழாவாக இருக்காமல், வருடம் 365 நாட்களும் கொண்டாடப்படும் விழாவாக மாற வேண்டும். நம்பிக்கை நாயகன் ஏற்றி வைத்த நம்பிக்கை ஒளி ஒவ்வொரு இதயத்திலும் ஏற்றி வைக்கப்பட வேண்டும். அவர் ஒளி பிறக்கும் ஒவ்வொரு நாளும் கிறிஸ்மஸ்தான்.

அன்னை திரேசா கூறியது போன்று ''உன் சகோதரனைப் பார்த்து புன்முறுவல் பூக்கும்போது, அயலவனுக்கு உதவிட அன்புக்கரம் நீட்டப்படும்போது, அழுகின்ற வருடைய கண்ணீரைத் துடைக்கும்போது, திக்கற்றவனுக்கு ஆறுதல் வார்த்தை கூறும்போது அது கிறிஸ்மஸ்தான். உன் மூலம் பிறருக்கு அன்புகாட்ட கடவுளுக்கு வெளிவிடும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் கிறிஸ்மஸ்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் சிறப்பு மலர் 25-12-2012

## பரவட்டும் இறைநாமம்

பெருமான் பிறந்ததினம்
பெருநாளாய்க் கொண்டாடி
வருநாள்கள் சிலபோது
வாழ்த்தி மகிழ்கின்றோம்.
திருநாளில் உறவோடு
திசைகளிக்க ஒற்றுமைச்சீர்
உருவாகி எம் மனத்துள்
உறைந்தாள இறைமகனே!
கருவாகிப் பூவில் அன்பு
கருணை விதைக்கட்டும்
சீலம் குவிக்கட்டும்
சிறகொடிந்த சமாதானம்
கோலம் புதுக்கட்டும்
குவலயத்துள் நீள்கின்ற
ஓலம் ஒடுங்கட்டும்
ஓய்ந்தடங்கி போர்கலையைப்
பாலன் பிறந்த செய்தி
பரவட்டும் இறைநாமம்

-உமாபாரதி-

யாழ் மழலைகளுக்காக
புதிய வருகை!
ஆரம்பம் 23.12.2012
Abi Baby Mart
Smile at your baby
Kids Stationaries, Mother & Baby Needs, Toys.
எல்லாப் பொருட்களுக்கும் 20%-30% விலைக்கழிவு.
விசேடமாக பாடசாலை மாணவர்களின் கொப்பி 30% விலைக்கழிவு. (கையிருப்பு உள்ளவரை மட்டும்)
சிறார்களின் ஆடைகளிற்கு திறப்புவிழாவிலிருந்து 3 நாட்களுக்கு விசேட சலுகைகள்.
Vavucher உண்டு
Sale Discount 30% — 50%
267, Brown Road, Jaffna
Call : 0750519482
Johnson's baby Huggies Pigeon Pampers PHILIPS AVENT

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு
நத்தார் தின வாழ்த்துக்கள்
ஆண்கள், பெண்களுக்கான சிகை அலங்கரிப்பு, Facial, Shaving, Massage, Hair Designing, Eyebrow shaping தலை முழுக்கு, முடிநிமிர்த்தல், முடிக்கு வர்ணம் பூசுதல் போன்ற சகல வேலைகளுக்கும் சிறந்த ஸ்தாபனம். மேலும் சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு தேவையான வாசனைத்திரவியங்கள், கிறீம் வகைகள் மற்றும் பொருள்களையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்
தென்மராட்சியில் தனித் தன்மையான முற்றிலும் குளிரூட்டப்பட்ட
லண்டன் சலூன்
[நவீனரக சுழல் கதிரை வசதி கொண்டது]
இல. 14, புகையிரத நிலையவீதி, சாவகச்சேரி.
T.P:0777788476, 0775631951

இனிய நத்தார் நல்வாழ்த்துக்கள்
இனிய நத்தார் நல்வாழ்த்துக்களுடன் இறைவனின் நல்லாசிகள் என்றும் உங்களுக்கு கிட்டட்டும்.
WATERTEC PRINCE CROWN solar Einhell HARCROS 7CF DARI KART VENUS KENT KENDE GOLDMILL Blue Whale Wangel ATLAS COTTO Husqvarna
-D&B-
St.Anthony's Hardware (Pvt) Ltd.
Reaching for Excellence

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் சிறப்பு மலர் 25-12-2012

## இதயத்தில் பிறந்தொளிர்வாய்

அன்னை மரியாள் கருவில் உருவாகிய
ஓலைக் குடிலிலே ஒளியாய் உதித்தவரே!
வானதூதர் வாழ்த்த வையகத்து மானிடர்கள்
அன்பால் களித்திடவே அவதரித்த கர்த்தாவே

அருளுறவில் நாம் வாழ
அகத்திலொளி சீர்பரவ
ஆசிதமை ஈந்துவக்க
ஏழ்மைத் திருக்கோலம்
எடுத்த இறைமகனே !
எல்லோருமம் இன்புற்று
இருக்க அருள் தருவாய்.
இறையே திருமகனாய்
இதயத்தில் பிறந்தொளிர்வாய்.



சிந்து சிவதாஸ்,சுதுமலை

## பாவிகளைக் காத்தருள்க!

நன்றது வருகையால் நாடு அழியுமென்று
நம்பினார் முன்நிகழ்வில் தீர்க்கருரை அறியாது
முன்னாளில் மாமரியாள் மணிவயிற்றில் தோன்றியதும்
நின்றயர்ந்து தேவசபை நீதியுரை செய்ததும்
குன்றின்மேல் இறையொளியைக் கும்பிட்டு பேசியதும்
மூன்றாம் நாள் உம்முயிர்ப்பால் மாத்தாள் மகிழ்ந்ததுவும்
அறியாது மாந்தரிங்கு அல்லல்படுவதனை
பிரியமாய் பிறந்துணர்த்தி பாவிகளை காத்தருள்க

கலாபூஷணம் மு.தணிகாசலம்.



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேசு பிறந்த நன்னாளிலே உலகமெங்கும் சாந்தியும் சமாதானமும் நிலவட்டும்



யேசு பிறந்த தினம் சகல கிறிஸ்தவர்களுக்கும் ஒரு மகிழ்ச்சிகரமான பரிசுத்த தினமாகும். உலகத்தில் உள்ள சகல கிறிஸ்தவர்களும் இத்தினத்தைப் பரிசுத்த தினமாகவும், பக்தியுள்ள மேன்மையுள்ள சமய வழிபாடாகவும் கொண்டாடுகிறார்கள். தற்காலத்தில் உள்ள பிரிவினைகளும், சிறையிருப்புக்களும் அகற்றப்பட்டு மக்கள் சாந்தியும் சமாதானமும் நிலவும் சகவாழ்வுடன் வாழ உதவும், உள்ளத்தைத் துலங்கச் செய்யும், உன்னதமான நாள் கிறிஸ்மஸ் தினமாகும்.

யேசுவின் பிறப்பின் நோக்கத்தை ஒளிரச் செய்யும் வகையில் குறிப்பிட்டு மகிழ்வுறத்தக்க செயற்பாடுகள் ஒன்றுமே இந்தக் காலத்தில் நடைபெறுவதில்லை. எங்கும் கொலைகள், போர் அழிவுகள் குடிவெறியாட்டக் கூத்துக்கள், கற்பழிப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. இந்த நிலையில் இந்த நாளிலே கிறிஸ்மஸ் விழாவின் உண்மையான தார்ப்பரியம் என்ன என்பதை நாம் கண்டறிய வேண்டும். மனிதம், இரக்கம், கிருபை, கருணை என்பவை யாவை என்பதைச் சற்றுச் சிந்திக்க முயல்வோம். உலக மக்களுக்காக கடவுளின் குமாரன் யேசு மனிதனாகப் பிறந்தார். மனித அவதாரம் எடுத்து வாழ்ந்த காலத்தில் அவர் செய்த சேவைகள் எண்ணிலடங்காதவை. அற்புதமானவை. மனிதனின் இரட்சிப்புக்காகவும், நல் வாழ்விற்காகவும் தம்மை சிலுவையில் பலியாக்கினார். இந்த உலகத்தில் வாழ்ந்த காலத்தில் மரித்தோரை உயிர்ப்பித்தார். குருடர்களைப் பார்வையடையச் செய்தார், செவிடர்களுக்கு செவிப்புலனைக் கொடுத்தார், ஊமைகள் பேசினார்கள், முடவர்கள் எழுந்து நடந்தார்கள், நோயாளிகள் சுகமடைந்தார்கள். அநீதியையும் அடிமைத்தனத்தையும் பகிரங்கமாக எதிர்த்தார். நீதிக்காகவும், சமத்துவத்துக்காகவும் போராடினார். ஆனால் இன்றைய நாளில் நத்தார் தினத்தை முன்னிட்டு உலகத்திலும் இலங்கையிலும் உள்ள சகல கிறிஸ்தவ ஆலயங்களிலும் விசேட ஞாபகார்த்த ஆராதனைகள் நடைபெறுகின்றன. டிசம்பர் 24 ஆம் திகதி நடு இரவில் மக்கள் குடும்பம் குடும்பமாகச் சென்று பிறந்த யேசு பாலனை ஆலயங்களில் வணங்குவார்கள். இந்த இரவில் நத்தார் பாடகர்களின் இன்னிசை வழிபாடுகளும் நடைபெறும். யேசு பிறந்த சந்தோஷத்தினால் வீடு வீடாக இன்னிசைப் பாடல்களுடன் பவனி வருவார்கள். கிறிஸ்தவர்கள் மாத்திரமல்லர் பல மதத்தவர்களும் பல்லினத்தவர்களும் கிறிஸ்மஸ் விழாவில் பங்குபற்றி மகிழ்ச்சி கொண்டாடுவார்கள். ஆடு, மாடுகளை வெட்டிச் சுவையான உணவுகளைச் சமைத்துத் தாங்களும் உண்டு உறவினர்களுக்கும் கொடுப்பார்கள். மதுபானத்தைப் பாவித்து மதிமயங்குவார்கள். ஒருவருக்கொருவர் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை கூறுவார்கள். விலை உயர்ந்த அன்பளிப்புக்களைக் கொடுத்துச் சந்தோசமடைவார்கள். கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்களை அனுப்புவார்கள். கிறிஸ்மஸ் மரத்தை நாட்டி அதில் வெளிச்சம் தரும் பல வர்ண மின்சார விளக்குகளை இணைத்து அழகுபடுத்துவார்கள். வீடுகளையும் பல்வேறு அலங்காரங்கள் செய்து அழகுபடுத்துவார்கள்.

அப்போஸ்தலர் லூக்கா 27 இல் கூறியபடி யூதேயா நாட்டில் உள்ள பெத்தலகேம் என்னும் தாவீதின் ஊரிலே அவர்கள் தமது முதற் பேறான குமாரனை பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு தங்குவதற்கு இடம் கிடைக்காமையினால் பிள்ளையை துணியினால் சுற்றி முன்னணியிலே கிடத்தினார்கள். மத்தேயூ- சுவிசேஷம் 2.10 இல் தேவதூதன் ஆடுமேய்க்கும் இடையர்களைக் கண்டு பயப்படாதிருங்கள் இதோ எல்லா இனத்தாருக்கும் மிகுந்த சந்தோசத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் என்றும், மத்தேயூ- 2.11 இல் இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்காக தாவீது என்னும் ஊரிலே பிறந்திருக்கிறார் எனக் கூறினான் என்றுள்ளது. இடையர்கள் தீவிரமாக வந்து மரியாளையும் யோசேப்பையும் முன்னணியில் கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள். என்றும் வான சாஸ்திரிகள் நட்சத்திரங்களைப் பின்பற்றி கிழக்கில் இருந்து வந்த நட்சத்திரத்தைப் பின்தொடர்ந்து ஜெருசலேமிற்கு வந்து குழந்தை யேசுவைக் கண்டு ஆராதனை செய்தார்கள். பொன் , தூபம், வெள்ளி போன்ற திரவியங்களை அன்பளிப்புச் செய்தார்கள். தாவீதின் அரசன் யேசு பிறந்துள்ளார் என்ற செய்தி ஏரோது அரசனுக்கு கிடைத்தவுடனே, அவன் பயந்து யேசுவைக் கொல்ல வழிதேடினான். கர்த்தருடைய தூதன் அன்றிரவு யோசேப்புக்கு கனவில் தோன்றி, ஏரோது அரசன் குழந்தையைக் கொலை செய்ய இருப்பதினால் இரவோடு இரவாக எகிப்து தேசத்துக்கு போகும்படி கூறினான். யோசேப்பு குடும்பத்தாருடன் எகிப்து தேசத்துக்குச் சென்றான். ஆனாலும் ஏரோது அரசன் யேசுவைக் கொல்லும் நோக்கத்தில் இஸ்ரேல் தேசத்தில் உள்ள இரண்டு வயதுக்குட்பட்ட சகல ஆண் குழந்தைகளையும் கொலை செய்தான். தாய்மாரின் அழுகைச் சத்தமோ தேசமெங்கும் பரவியது.

மாயைக்காரர்களே, உங்களுக்கு ஐயோ கேடு, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைக்கு ஒப்பாய் இருக்கிறீர்கள் அவைகள் புறத்தே அலங்காரமாக காணப்படும். உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளாலும், சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுசருக்கு முன்பாக நீதிமான்கள் எனக் காணப்படுகிறீர்கள். ஆனாலும் உள்ளத்திலே மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள் என்கிறார்.

''ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் பரலோக இராச்சியம் அவர்களுடையது'' என்று யேசு கூறினார்.

யேசு தம்முடைய சீடர்களை நோக்கி ஐசுவரியவான்கள் பரலோக இராச்சியத்தில் பிரவேசிப்பது மிகவும் அரிதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்.

நல்லெண்ணம், நல்லொழுக்கம் மூலம் உருவாகும் ஏழ்மையான வாழ்க்கையானது, பொய்யான நீதியற்ற முறையில் வஞ்சகமான முறையில் செல்வந்தராகி வாழும் வாழ்க்கையை விடச் சிறந்தது எனக் கூறினார். அவற்றை உள்ளத்தில் இருத்தி மக்களினது நடத்தைகளை எதிர்த்து யேசுவாழ்ந்து காட்டிய, செய்த நற்கருமங்களை இன்றிலிருந்து நாம் கைக்கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவர்களாகிய நாங்கள் உயர்ந்த மனிதப் பண்புகள் நிறைந்த வாழ்க்கையை வாழ முயற்சிக்க வேண்டும். புது ஆடைகள் அணிந்து வீதிகளைஅலங்காரம் செய்து வீடுகளை அலங்கரித்து, பலவர்ண மின்சார விளக்குகளை இணைத்து, புசித்தும் குடித்தும் ஆடம்பர வாழ்க்கை வாழ்வதைவிட பரிசுத்த வேதாகமத்தில் சங்கீதக்காரன் கூறுவது போன்று நல்வாழ்க்கை என்பது ருசியான சாப்பாடுகள் சமைத்து சாப்பிடுவது அல்ல. ஏழைகளுக்குத் தானதருமம் செய்து கோபசுபாவம் அற்றவர்களாய், பழிவாங்கும் மனமற்றவர்களாய் பிரிவினைகள் சாதி சமைய பகைமைகளை மறந்து மனமாற்றம் அடைந்தவர்களாய் மாறவேண்டும். அப்போது தான் நீதியும் நியாயமும் சமத்துவமும் நாட்டில் நிலை நிற்கும் யாவருக்கும் சமாதானம் என்பதே கிறிஸ்மஸ் நற்செய்தி ஆகும். எனவே யேசுவின் சிலுவை மரணத்தையும் பாடுகளையும் நினைவு கூர்ந்து நல்மனச்சிந்தனை உடையவர்களாக ஜீவிப்பதே கிறிஸ்து பிறப்பின் செய்திதரும் மகிழ்வுக் கொண்டாட்டமாகும்.

பீ.ஏ.அந்தோனிமார்க்



## நம்பிக்கையில் மலரட்டும் நத்தார் வாழ்த்துக்கள்

நம்பிக்கை தரும் நற்செய்தி ஒன்று
நமக்காக பாலயேசு பிறந்துள்ளார்
எனும் செய்தியை பாமரரான
இடையர்கள் மூலம்
அன்று பாருக்கு
வெளிப்படுத்தப்பட்டது
இல்லங்கள் தோறும் குடில்கள் கட்டி
பரமனின் பிறப்பைக் கொண்டாடும்
நத்தார் விழாவின் நல் வாழ்த்தக்களை
நாம்
பகிர்ந்து கொள்வோம்
இரண்டாயிரம் ஆண்டைக் கடந்து



இறைமகன் இயேசுவின் பிறப்பை
நினைவு கூரும் மக்கள் மத்தியில்
இனம், மொழி, மத வேற்றுமை இன்றி
உலகமே நம்பிக்கையோடு
நத்தார் விழாவைக் கொண்டாடும் நன்னாளில்
ஒரு கணம் சிந்திக்க அழைக்கிறது
சத்திரத்திலும் இடமில்லை என்பவர்
சரித்திர நாயகனானார் என்னும் செய்தி
கேட்டார்
எம் வாழ்விலும் பல அனுபவங்களால்
உணரப்பட்டாலும் பாலயேசுவின்
பிறப்பிலும் உயிர்வாழும் உரிமை இன்றி
இடப்பெயர்வுகளுடன்
தொலைமிரட்டல்களும்
அரசின் அட்டகாசம் அன்று நிகழ்ந்தது
பிள்ளைகளின் நிலை எண்ணி அன்னை
மரியாள் போல்
இன்றும் ஒருபுறம் கலக்கமும் மறுபுறம்
மகிழ்ச்சியும்
கலந்த சூழலும் உயிர்வாழ பாதுகாப்புத்
[illegible]
[illegible]



யோசப்பாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் சிறப்பு மலர் 25-12-2012

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு

உதயன்

அரசுக்கு எதிராக நேர்ம...

☎ 0215671111
advt@uthayan.com

புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் பிரமாண்டமான மலிவு விற்பனை

## சரவணா ரெக்ஸ்

3000/= க்கு மேல் கொள்வனவு செய்யும் 3 அதிஷ்டசாலிகளுக்குப் பெறுமதியான பரிசில்கள்

Hero Pleasure 1ஆம் பரிசு
Lap Top 2ஆம் பரிசு
Washing Machine 3ஆம் பரிசு

யார் அந்த 3 அதிஷ்ட சாலிகள்




01.01.2013 காலை 10.00 மணிக்கு அதிஷ்டம் பார்க்கப்படும்.
வாடிக்கையாளர் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைவருக்குமான அனைத்து விதமான ஆடைகள்

புதிய தெரிவில்

15-12-2012 முதல் 31-12-2012 வரை

காலை 9.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை

உயர்தரமான ஆடைகளும் குறைந்த விலையும் அதுதான் சரவணா ரெக்ஸ்

டிசம்பர் 31 வரை மட்டுமே இச்சலுகை
Officeware Cotten & Silk Sarees (with Blows) 500/=
Officeware Shirt 500/=

இடம்: வாரத்தில் 7 நாட்களும் வியாபாரம் நடைபெறும்

சரவணா களஞ்சியசாலை

சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (கெங்காதரன் வைத்தியசாலைக்கு அருகாமை)

நேரடியாக கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட பொருட்களை யாழ் விலையில் சாவகச்சேரி நகரில் பெற்றுக்கொள்ள....

வாரீர் வந்து பெறுவீர்... தனங்கிளப்பு வீதியில்

## பொதிகை

கொம்பியூட்டர் கிராபிக்ஸ்

புத்தகசாலை & போன்சொப்

பாடப்புத்தகங்கள் விசேட கழிவு விலையில்

வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்

Diary 2013

2013ம் ஆண்டுக்கான கலண்டர்கள் டயறிகள்

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள் உண்மை புரியும்

T.P 0212270447

இல. 03, தனங்கிளப்பு வீதி(நுவீனசந்தை அருகில்), சாவகச்சேரி. 3% முதல் 25% வரை email : phothigai@gmail.com

உ முருகன் துணை

# பழைய பட்டுப்புடைவை பணமாகிறது!

# ஸ்ரீ காஞ்சிபுரம் பட்டு சென்ரர்

## யாழ்ப்பாணம்

வாகன தரிப்பிட வசதியும் உண்டு

குறிப்பு:- எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது.

தியாகி அறக்கொடை நிறுவன வளாகம், T.C.T. வணிக வளாகம்.
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

Tel : 0752145355

25.12.2012 முதல் 31.12.2012 வரை

07 தினங்கள் மட்டுமே!



பழைய (கிழிந்த) பட்டுப்புடைவைகள்
பட்டு வேஷ்டிகள், பட்டுப்பாவாடைகள்,
பழைய காலத்து கிழிந்த கூறைப்புடைவைகள், எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக் கொண்டு உடனே பணம் தரப்படும்.

பழைய டிஸ்யூ புடைவைகள் ரூபா 5000/= முதல் ரூபா 20,000/= வரை வாங்கப்படும்.

பழைய காலத்து கல் வைத்த நகைகள், லாக்குடி, ஜடபில்லை, பவளம்,பவள மாலைகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்

வேலை நேரம் காலை 9.30 மணி முதல் இரவு 6.30 மணி வரை - ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் சிறப்பு மலர் 25-12-2012



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய நத்தார் நல் வாழ்த்துக்கள்

## செல்வி நகை அகம்



நம்பிக்கையான நாணயமுள்ள நகைகளை, நல்ல முறையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுப்பவர்கள்.

1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0212229441

நத்தார் திருநாள் நல் வாழ்த்துக்கள்

புதுவருடத்தை முன்னிட்டு

## JAFFNA ELECTRICAL (SHOW ROOM) நிறுவனத்தின்

Mega Sales

LG No 1 Dealer in SriLanka

விசேட விலைக்கழிவும் இலவச கொடுப்பனவுகளும் கையிருப்பு உள்ளவரை

Free Items
L.G. 191
Induction Cooker (மின்காந்த அடுப்பு)

Free Items
GL-M252 UMEI (Door Cooling)
Rice Cooker
Water Filter
fan
அல்லது
Induction Cooker (மின்காந்த அடுப்பு)
Table Fan

Free Items
RF282VWMD
Rice Cooker
Water Filter
fan
அல்லது
Induction Cooker (மின்காந்த அடுப்பு)
Table Fan



LG Fully Automatic Washing Machine
Free Items
WF-761
Induction Cooker (மின்காந்த அடுப்பு)

LG Fully Automatic Washing Machine
Free Items
WF-950
Induction Cooker (மின்காந்த அடுப்பு)
Chargeable Lamp

32" LG LED TV
Free
DVD Player

LCD TV 19" H21R6
Free
DVD Player

LG 32' LED
Free Items

Kerosine - 2.5 KW Master Generator
~~34,990~~/= 29,990

A/C

Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடனும் இலவச
விநியோக சேவையில் பெற்றிட

மேலும் கீழ்வரும் பொருள்களுக்கும் அதி விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்

DVD Player, Home Cinema System, Celling Fans, Stand Fan, Table Fan, National Electric Oven, Tosters, Mixcer Grinders (Preethi, Butterfly, Kanchan) Iron Box, Electric Kettle, Gas cookers, Watter Filter, Rice cookers, Induction cookers, Rechargeable Torch and Non Stick Items, Pressure cooker.

(C2608) (10.6.7)

## LG JAFFNA ELECTRICAL (Show Room)

141, Power House Road, Jaffna.
T.P: 021 222 8378, 5766.

No.135, A-9 Road, Kilinochchi.
T.P: 021 228 0008

Authorized Dealer for Abans

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் சிறப்பு மலர் 25-12-2012



எத்தனை
நட்சத்திரங்கள்
வீடுகளில்...
மத வேறுபாடில்லா
பண்டிகை இது என்பதை
உணர்த்துகிறது
மனங்கள் மகிழும் நாள் இது
தேவன் பிறந்த
தினத்தை மகிழ்ச்சியாய்
கொண்டாடுவோம் ...

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
0215671111
advt@uthayan.com

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

நவநாகரீக நங்கையர் விரும்பும் ஆடைத்தெரிவுகளுக்கு நாடுங்கள்

லைடன் புடைவை நிலையம்
(பஸ் நிலையம் முன்பாக)
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 2381.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
Learn French The French Way

France இன் தலைமை நிறுவனமாகிய "Alliance Française de Paris" மற்றும் இலங்கையிலுள்ள French Embassy ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேஒரு உத்தியோகபூர்வ பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் "Alliance Française de Jaffna" மட்டுமே. "Alliance Française" இலங்கையில் KOTTE, KANDY, JAFFNA, MATARA ஆகிய இடங்களில் மாத்திரமே உள்ளது. (French Embassy website: www.ambafrance-lk.org) சர்வதேச தரம் வாய்ந்த இந்நிறுவனத்தில் France, Canada மற்றும் French பேசப்படும் நாடுகளுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக்கொள்கிறார்கள். 6 மாத கற்கைநெறியின் (BASICS 100 HOURS) முடிவில் தரமான CERTIFICATE ஐ பெறுங்கள். மேலும் சர்வதேச ரீதியிலான DELF பரீட்சைகளுக்கு குறைந்த கட்டணத்தில் எமது நிறுவனத்தினூடாக மட்டுமே அனுமதிகளைப் பெற முடியும்.

61, Kachcheri-Nallur Road, Jaffna TP.No: 021.2228093 E-mail: alliancejaffna@yahoo.com

இனிய நத்தார் நல் வாழ்த்துக்கள்

திருமணப் பட்டுப் புடைவைகளுக்கும் நவீனரக ஆடைத் தெரிவுகளுக்கும் சிறுவர் சிறுமியர்களுக்கான சிறந்த ரெடிமேட் ஆடைகளுக்கும்

லலிதா ரெக்ஸ்
(கல்யாணப் பட்டுப் புடைவைகளின் கைராசி நிறுவனம்)
இல.5, 6, நவீனசந்தை,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5260

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகளை மற்றும் நவீன காலணி வகைகளை நித்தம் நித்தம் அறிமுகம் செய்யும் ஸ்தாபனம்

நியூ லலிதா ரெக்ஸ்
DSI & ஆ பலஸ்
(கல்யாணப் பட்டுப் புடைவைகளின் கைராசி நிறுவனம்)
இல.42, பஜார் வீதி, வவுனியா. T.P: 024 222 1234

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்

அழகுக்கு அழகுதரும்
நவநாகரிக ஆடைகளுக்கு
நம்பகரமான ஸ்தாபனம்

Best In's
Textiles

பெஸ்ட் இன்ஸ்
ரெக்ஸ்ரைல்ஸ்
59/2, பெரியகடை, யாழ்ப்பாணம்.
கிளை: BEST BUY Textiles
64, பெரியகடை, யாழ்ப்பாணம்.

இனிய நத்தார் வாழ்த்துக்கள்

KALIMAGAL
INTERNATIONAL COLLEGE
NOTHING IS IMPOSSIBLE

முழு நேர ஆங்கில மொழி மூல தனியார் பாடசாலை

- இலங்கை கல்வித்திணைக்களகத்திலும் பரீட்சைத்திணைக்களகத்திலும் பதிவு செய்யப்பட்ட அரசு அங்கிகாரம் பெற்ற கல்லூரி.
- Play GROUP முதல் G.C.E (A/L) வரையான வகுப்புக்கள்
- Play GROUP முதல் GRADE 05 வரை OXFORD பாடத்திட்டமும் GRADE 06 முதல் G.C.E (A/L) வரை இலங்கைப் பாடத்திட்டமும் உள்ளடக்கிய கல்விக் கொள்கை.
- 02 வருடகாலம் முழுநேரம் ஆங்கில மொழி மூலம் பயிற்சியை வழங்கும் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையை தன்னகத்தே உள்ளடக்கி உள்ள சிறப்பான செயற்பாடு.
- நவீன கற்கை முறை மூலம் மாணவர்களை நெறிப்படுத்தும்தொழில் நுட்பம்
- மாணவர்களுக்கான போக்குவரத்து வசதி
- தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ் மொழி மூலமும் ஏனைய அனைத்துப்பாடங்களும் ஆங்கில மொழி மூலமும் கற்பிக்கும் செயற்பாடு.

இன்னும் பல அரிய செயற்பாடுகளுடன் இயங்கி வரும் எமது கல்லூரியின் கீழ் வரும் கிளைகளில் மட்டும் அடுத்த தொகுதிக்கான(2013 ஆண்டுக்கான முதற் தொகுதி பூர்த்தியாகி விட்டது). விண்ணப்பங்கள் ஏற்கப்படுகிறது. எனவே உங்கள் அனுமதிக்கு முந்தவும்.

1) NUNAVIL EAST, KANDY ROAD, CHAVAKACHCHERI.
2) CHURCH LANE, KOKUVIL EAST, KOKUVIL.
3) HOSPITAL ROAD, ACHCUVELI.
4) THAMBACIDDI ROAD, POINT PEDRO.
5) HINDU SCHOOL LANE, VALVETTI.
6) BANGALWADI, VELANAI. (NEAR THE POST OFFICE)
7) 10-11 AMBALKULAM, KILINOCHCHI.
8) NO-263 SILVA ROAD, VADAKKACHCHI.

மேலதிக விபரங்களுக்கு:
KALAIMAGAL NTERNATIONAL COLLEGE
CHURCH LANE, KOKUVIL EAST,
KOKUVIL.
0774904286, 0778834592, 0771387697

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் சிறப்பு மலர் 25-12-2012

# யேசு எங்கே பிறப்பார்?

■ ஜனதா ஜோர்ஜ்



அச்சத்தைத் தருவதும் எதிர்காலம் பற்றிய ஏக்கங்கள் நிறைந்த சஞ்சலமானதுமான சூழ்நிலையிலேயே இந்த வருட நத்தார் தினம் புலர்ந்திருக்கிறது. சூழ துன்பங்கள் நிறைந்திருந்தாலும் உலகம் முழுவதும் கிறீஸ்துவின் பிறப்பைத் தத்தமது வசதிகளுக்கேற்ப மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

இந்தத் தினத்தின் வரலாற்று நோக்கத்தைப் பார்க்கின்ற போது இறைவன் மானிடத்தின் மீது கொண்ட கருணையினால் மானிடத்தை மீட்டு இரட்சிக்க மனிதனாக ஏழையாக ஒரு குடிலில் அவதரித்த நிகழ்வையே கூறி நிற்கிறது. இந்தப் பிறப்பு கடவுளுக்கு மானுடர் மீது கருணை உண்டு விளக்கி நிற்கிறது.

கடவுள் மானிடத்தை தமது சாயலில் படைதமையால் அந்த சாயல் மங்காமல் மானிடத்தைப் பாதுகாக்க வேண்டியதும் அவர் பணியாக இருந்தது. ஆதலால் எங்கெல்லாம் மானிடம் மறுக்கப்படுகிறதோ அங்கெல்லாம் மானிட வாழ்வுக்கு அச்சுறுத்தல் விடுக்கப் படுகின்றதோ எங்கெல்லாம் கடவுளின் பிறப்பு அவசியமாகின்றது. இன்றைய கிறிஸ்துவின் பிறப்பானது இன்று நம்மவர்கள் அனுபவிக்கின்ற சொல்லொணா வேதனைகள் உபத்திரவங்கள் அவலங்கள் அனைத்திலுமிருந்து விடுதலை கிட்டும் என்ற திடமான நம்பிக்கையுடன் நாம் வாழ வேண்டும் என்பதை உணர்த்தி நிற்கிறது.

ஆனாலும் உலகில் நடந்து கொண்டிருப்பவை என்ன? எங்கு பார்த்தாலும் வன்முறைகள் மனிதனை மனிதன் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தும் போக்கே தலை விரித்தாடுகிறது மனித உயிர் மலிவானதாகவும் சிந்தனையின்றிச் செலவிடத் தக்கதாகவும் மாறிவிட்ட விபரீதத்தையே உலகில் இன்று நாம் காண்கிறோம். உயிருக்கான மதிப்பும் மனித வாழ்வுக்கான கௌரவமும் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கின்றன. இத்தகைய நிலை உயிர் வாழ்வதற்கு ஒவ்வொரு மனிதப் பிறவிக்கும் இருக்கின்ற அடிப்படை உரிமையை முற்று முழுதாக மீறுகின்றது என்பதை உண்மையில் மனிதன் சிந்திக்கின்றானா? என்ற வினாவை எழுப்புகின்றது.

" நான் வாழ்வைக் கொடுக்க வந்தேன் - அதுவும் பூரணத்துவ மான வாழ்வைக் கொடுக்க வந்தேன் " என்று யேசு கூறினார்.

அவரின் அந்த மகோன்னதமான செய்தியை நத்தார் பண்டிகைக் காலத்தில் மட்டும் நினைவுறுத்துவதில் அர்த்தம் இல்லை. மனித உயிர் எப்போதும் பாதுகாக்கப்பட்டு ஒவ்வொரு மட்டத்திலும் அது பேணி வளர்க்கப்பட வேண்டும் என்று தினமும் நினைக்க வேண்டும்.

நாம் வாழும் இந்த யுகத்தில் மனிதநேயம் மனித மாண்பு மறக்கப்பட்டு மனித உரிமைகள் அழிக்கப்பட்டு மனித வார்த்தைகள் மழுங்கடிக்கப்பட்டு படுகொலைகளும் கொள்ளைகளும், கற்பழிப்புகளும், சிறுவர் துஷ்பிரயோகங்களும் சூழ்நிலையில் இயேசுவின் பிறப்பு எங்கே நடைபெறும் என்பது கேள்விக்குறி. அதிலும் சாதி வேறுபாடுகளும் சமயப்பிரிவுகளும் பணத்தால் உலக வாழ்வையே அனுபவித்து விடலாம். பரம ஏழைகள் பரிதவித்தாலும் மனிதம் உயிர் வருந்தித் துன்பப்பட்டாலும் நமக்கென்ன என்ற நிலையில் உள்ளோரிடம் யேசு வந்து பிறப்பாரா?

துன்பத்திலே அடுத்தவன் துவழ அவன் துன்பத்தில் நாம் குளிர் காய்ந்து கொண்டிருக்கிறோம். ஒருவன் நல்வாழ்வைக் கண்டு பொறாமை கொள்வதும் ஒருவனது தோல்வியை எள்ளி நகையாடுவதுமே எமக்கு பொழுது போக்காகி விட்டது. " உன்னைப் போல உன் அயலானை நேசி என்று மீட்பர் எமக்கு வழிகாட்டினார். அயலானை நேசிக்காது விட்டாலும் அவனுக்கு துன்பம் செய்யாமலாவது நாம் இருக்கலாமல்லவா-

" சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்கா" என்றான் ஒரு கவிஞன்.

பெற்ற அன்னை தந்தையருக்கும், உடன் பிறப்புகளுக்கும், உறவுகளுக்கும், இரங்காதோர் குடும்பங்களில், செய் நன்றி மறந்தவர் இல்லங்களில் அடுத்தவனுக்கு தீமை நினைப்பதை வாழ்வாகக் கொண்டவர்களின் வாழ்விடங்களில் இயேசு எப்படி வந்து பிறப்பார். யேசு எமக்காக ஏழ்மையில் பிறந்தால் ஆனால், யாருக்காகவும், எதற்காகவும் ஏழ்மைக்கு நாம் தயாரில்லை. மனித மனங்கள் மாறும் வரை இயேசுவின் பிறப்பு மாட்டுத் தொழுவங்களில் மட்டுமே. மனித மனங்களில் யேசுவின் பிறப்பு எப்போது? இன்றைய இசேவின் பிறப்பிலாவது அனைவரும் சிந்திப்போம். ★



## யேசு பாலனே வருக வருக!

பாலகனே உன் பிறப்பு எங்கள்
மனங்களிலே நிகழ்ந்தால் தான்
கல்லையும் கரைக்கும் கனிவுள்ளங்கள்
எங்கள் மண்ணில் மலர்ந்திடும்

உன் பிறப்பானது இருளினை அகற்றி
ஒளியினை வீச வைத்திட வேண்டும்
என்றும் நிரந்தரமாய் ஆறுதல் பெற வேண்டும்
இன்று அழுகின்ற உள்ளங்கள்

திறந்த சிறையில் வாடும் எங்களை
சுதந்திரமாய் உரிமையுடன் வாழ்வதற்கு
இவ்வாண்டில் உன் பிறப்பானது எங்கள்
உணர்வுகளை உயிர்த்திட வைக்க வேண்டும்

இழப்புக்கள் வன்முறைகள் வடுக்கள் யாவும்
இருந்த இடம் தெரியாது மறைந்திட
இயேசு பாலகனே நீயும் இம் மண்ணில்
இரங்கியே வந்து காத்திடுவீர் காலமிது.

தெல்லியூர்த் தேவி

## புத்தொளி பரவட்டும்

நத்தார் நாட்களில்
நல்லதோர் தொடக்கம்
புத்தாண்டில் உலகெங்கும்
புத்தொளி பரவட்டும்

போர்மேகம் அகன்று
கார்மேகம் பரவட்டும்
சீர்பெற்று மானிடம்
சேர்ந்து நிம்மதி காணட்டும்
மனிதத்தை மறந்த நாள்
மண்ணோடு போகட்டும்

மரியமகன் பிறப்பினால்
மலரட்டும் சமாதானம்

கதியற்றுக் கலங்கியோர்
காணட்டும் இறையொளி
புதிய நல் வருடத்தில்
புதுப்பாதை காணுவோம்

ச. சிவா,
தும்பளை

## சீலம் போற்றும் செல்வப் புதல்வன்



பாலன் யேசு பிறந்து விட்டார்
பாரில் எங்கும் மகிழ்ச்சி தானே
காலம் எல்லாம் அடிமை வாழ்வை
களைந்து எறிந்தார் யேசு பிரான்
ஞாலம் எங்கும் ஞான ஒளியை
ஞாயிறு போலே பரப்பி வைத்தார்
சீலம் போற்றும் தெய்வம் எங்கள்
செல்வப் புதல்வன் யேசு பிரான்

வ.யோகானந்த சிவம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org